தெய்வக் குழந்தைகள்

நாஞ்சில் கிருஷ்ணப்ரியன் M.A

சோமு புத்தக நிலையம்
[illegible]ம், 13 A/3, திருத்தாந் தோணி ரோடு
உறையூர், திருச்சி-620 003

சோமு புத்தக நிலையம் வெளியீடு

முதற்பதிப்பு : ஜூன், 1982

பதிப்புரிமை : © சோமு புத்தக நிலையம்

விலை ரூ. 6-75

அச்சிட்டோர்

பிரபு பிரிண்டிங் ஹவுஸ்

18, வடக்கு உஸ்மான் சாலை,

தி. நகர், சென்னை-600 017.

பதிப்புரை

மாணவச் செல்வங்களுக்குக் கல்வியோடு நல்லொழுக்க வழியையும் வழங்க வேண்டிய மேலான எண்ணத்துடன் இந்நூல் வெளியாகின்றது. சிறந்த அறிவுரைக் கதையான 'தெய்வக் குழந்தைகள்' என்ற நூலை நாஞ்சில் கிருஷ்ணப்பிரியன் M.A. அவர்கள் இனிய தமிழில் படைத்திருக்கின்றார். இதனைப் படிக்கின்ற மாணவர்கள் மனதில் நற்பண்புகள் வளரும் என்பது உறுதி.

மாணவர்களின் நல்ல உள்ளங்களுக்கு ஏற்ற உணவைத் தரும் நூலாக இதனை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

— சோமு புத்தக நிலையத்தார்

பதவியைப் பெற்ற குழந்தை

அது அரசரின் அந்தப்புரம்.

சிங்காதனம் ஒன்றில் அரசனான உத்தானபாதன் அமர்ந்திருந்தான். அவனருகில் அவனுடைய மனைவியான சுருசி நின்றுகொண்டிருந்தாள். அவள் பெற்ற மைந்தன் உத்தமன் வேகமாக ஓடிவந்தான். அவனுக்கு அன்று உற்சாகம் அதிகமாக இருந்தது போலும். குதித்தோடி வந்த உத்தமன் தந்தை அருகில் வந்ததும் நின்றான். தன் தந்தையின் மடியில் ஏறி விளையாட வேண்டும்போல் இருந்தது அவனுக்கு.

தந்தையின் முகத்தை ஆவலோடு நோக்கினான்.

அரசனும் உத்தமனை வாரியெடுத்துத் தன் மடிமீது வைத்துக்கொள்ள ஆசைப்பட்டான் உத்தமன். தந்தையை நெருங்கவே, அவர் உத்தமனை வாரி எடுத்துத் தன் மடிமீது அமர்த்திக்கொண்டார்.

உத்தமனுக்கு பெருமகிழ்ச்சி. அரசராக இருப்பவர்களுக்கு இப்படிக் குழந்தையுடன் விளையாட நேரம் எங்கே கிடைக்கும்? தன் தந்தையின் மகிழ்ச்சியால் உத்தமனும் மகிழ்ந்தான்!

இருவரையும் பார்த்துக்கொண்டே பூரித்துப்போய் நின்றாள் சுருசி.

இம் மூவரையும் பார்த்துக்கொண்டு தூரத்தில் நின்று கொண்டிருந்தான் ஒரு சிறுவன். ஐந்து அல்லது ஆறு வயது தான் இருக்கும் அவனுக்கு.

மூவரின் மகிழ்ச்சியைக்காண அவனுக்கு ஏக்கமாய் இருந்தது.

அவனுக்கும் அரசரின் மடிமீது ஏறி விளையாட ஆசை பிறந்தது. ஆனால் தயக்கமும் வந்தது. உடனே சென்று அவரருகில் நிற்கலாமா என்ற எண்ணமும் தோன்றியது. ஆனால் தயக்கம் அவனைத் தடுத்தது.

தனக்குள்ளே பேசிக்கொண்டான்.

''நான் என்ன அரசரின் மடிமீது ஏறி விளையாடும் உரிமையில்லாதவனா? உத்தமன் எப்படியோ அப்படித்தானே நானும்? உத்தமன் அரசரின் மகன் என்றால் நானும் அரசரின் மகன்தானே? அவனுக்கு இருக்கின்ற உரிமை எனக்கும் தான் உண்டு. நானும் செல்லுகிறேன். என்ன நடக்கிறது என்றுதான் பார்ப்போம்.''

பேசிக்கொண்டே இருந்த அவன் தன் எண்ணத்தைச் செயல்படுத்த எண்ணினான்.

தூரத்திலிருந்து வேடிக்கை பார்த்த அச்சிறுவன் இப்போது அரசரை நோக்கி ஓடினான். அவன் அரசரை நெருங்கி அவர் மடியில் ஏறி விளையாடிவிடவேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்டவன். ஆகையால் வேகமாக ஓடினான்.

அதோ அவன் அரசரை நெருங்கியும் விட்டான்.

அவன் வருவதை அரசரும் பார்த்தார். தன்னை நோக்கி வருகின்ற மகனின் முகத்தில் தெரியும் ஆவலை அவர் உணர்ந்தார். வாரி எடுத்து உச்சிமோந்து கன்னங்களில் முத்தமிட அவர் துடித்தார். ஆனால் ஏனோ அவர் கண்கள் சுற்றுமுற்றும் பார்த்தன. யாராவது தன் செய்கையைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தார்.

7

அவர் ஆவல் அடங்கிவிட்டது. அவரால் தன் ஆவலை நிறைவேற்றிக்கொள்ள முடியாது நிலை தடுமாறி நின்றார்.

ஓடி வந்த சிறுவன் தன் தந்தையை மிகவும் நெருங்கி விட்டான்.

''நில் துருவா! எங்கே போகிறாய்?''

இடி இடிப்பதுபோன்ற ஒரு குரல் கேட்டது.

துருவன் என்ற பெயரையுடைய அச்சிறுவன் திடுக்கிட்டு நின்றான். குரல் வந்த திசையை அவன் நோக்கினான். அரசர் ஏற்கனவே பார்த்துவிட்டிருந்தார்.

அங்கே நின்று கொண்டிருந்தாள் சுருசி. உத்தமனைப் பெற்றவள்.

தந்தையை நெருங்காமலே நின்றுகொண்டான் துருவன். மகனை வாரியெடுத்து முத்தம் கொடுக்காமலே திகைத்து நின்றார் அரசர். அவருக்குச் சுருசிமீது அப்படி என்ன பயம்?

''நில் துருவா நில். நீ எப்படி அந்தப்புரத்திற்குள் வந்தாய்?''

துருவன் நின்றான். எப்படி வந்ததைச் சொல்ல முடியும்?

அவன் திகைத்துப்போய் நின்றான்.

''உன்னை இங்கே வரக்கூடாது என்று எத்தனை தடவை சொல்லி இருக்கிறேன். அப்படியும் வருகிறாயே. உனக்கு வெட்கமாக இல்லை?''

அவன் என்ன பதிலைக் கூறுவான்?

தந்தையைக் காணவருவது வெட்ககரமான செயலா?

''அம்மா தந்தையைக் கண்டு பல நாட்களாயின. தங்களையும் தரிசித்து ஆசி பெறவே வந்தேன். வந்த

இடத்தில் தம்பி உத்தமனையும் கண்டேன். அவன் ஏறி விளையாடும் மடி எனக்கும் சொந்தம்தானே? உத்தமனின் தந்தை எனக்கும் தந்தையல்லவா? ஆகவே ஆசையால் இப்படி நேர்ந்துவிட்டது. தாயே! அரசரின் மடிமீது ஏறி நான் விளையாடக்கூடாதா?''

அவன் அழகாகக் கேட்டான். அரசர் கண்கள் பனித்தன.

இரு செல்வங்களைப் பெற்றிருந்த போதிலும் ஒன்றின் மேல் தான் பாச உணர்வைக் காட்டவேண்டிய துர்பாக்கிய நிலை அவருக்கு.

சுருசிக்கு கோபம் வந்தது. இதழ்கள் துடித்தன.

''என்ன சொன்னாய் துருவா? நீயும் அரசரின் மகன் தான். ஆனால் என் வயிற்றில் பிறக்காதவன். என் சக்களத்தி சுநீதியின் வயிற்றில் பிறந்திருக்கின்றாய். என் வயிற்றில் பிறந்த உத்தமனைப் பார். அவன்தான் இந்த அரசாட்சிக்கும் உரியவன். பாவம் செய்துவிட்ட சுநீதியின் வயிற்றில் பிறந்துவிட்ட காரணத்தால் நீயும் பாவியாகி விட்டாய். துருவா கேள். அரசரின் மடிமீது ஏறி விளையாட நீ ஆசைப்பட்டால், என் வயிற்றில் பிறக்கவேண்டும். போய் அதற்காகத் தவம் செய். மறுமுறை இங்கே நீ வரவே கூடாது. என்ன தெரிந்ததா?''

சுருசி ஆத்திரத்துடன் பேசினாள். கூனிக்குறுகி ஏதும் செய்ய முடியாமல் நின்றார் அரசர்.

அவருக்கு இரண்டு மனைவியர். மூத்தவள் பெயர் சுநீதி, இளையவள் பெயர் சுருசி. அரசருக்கு இளையவளிடத்தில் கொஞ்சம் பிரியம் அதிகம். ஆகவே சுருசியின் அந்தப்புரத்திலே அரசர் வாழ்ந்தார். சுநீதிக்குத் தனி அரண்மனை கொடுக்கப்பட்டிருந்தது. அரசரைப் பார்க்கக்கூட அவளுக்கு அனுமதி இல்லை. அவள் பெற்ற மைந்தன் துருவன்.

கண்களில் நிரம்பிய கண்ணீரைக்கூடக் துடைக்க முடிய வில்லை துருவனுக்கு. அவமானம், ஆத்திரம் ஆகிய உணர்ச் சிகள் அவனைத் துன்புறுத்தின. என்ன செய்வான் அவன்? விரைந்து தன் அன்னையாகிய சுநீதி இருக்கும் இடத்தை நோக்கி ஓடினான்.

o o o

வழக்கமான இடத்தில் விளையாடும் துருவன் அன்று அங்கு இல்லை. சுநீதி இதைக் கவனித்தாள். அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. துருவன் தன்னைக் கேட்காமல் எங்கும் போகமாட்டான். எங்கே அவன்?

துருவனைத் தேட ஆரம்பித்தாள் சுநீதி.

அவள் முன் வந்து நின்றான் துருவன்.

துருவனைக் கண்டதும் திடுக்கிட்டாள் சுநீதி,

என்றைக்கும் துருவனின் கண்களில் கண்ணீர் வந்ததைச் சுநீதி கண்டிருக்கவில்லை. அப்படிப்பட்ட துருவனின் கண் கள் அழுததால் வீங்கிப்போயிருந்தன. கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் கன்னங்களில் கறையை ஏற்படுத்தி யிருந்தது.

துடித்துப்போனாள் சுநீதி. யார் என்ன கெடுதியைத் தன் மகனுக்குச் செய்துவிட்டார்களோ என்று என்னென் னவோ எண்ண ஆரம்பித்துவிட்டாள் அவள். தாய் உள்ள மல்லவா?

''மகனே! துருவா! அருகில் வாடா! என்னடா கொடுமை? உன்னை யாராவது அடித்துவிட்டார்களா? சொல்.''

தாயின் ஆதுரமான வார்த்தைகளைக் கேட்டதும் துருவ னால் தன் துன்பத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆகவே மறுபடியும் ஓவென்று அழ ஆரம்பித்து விட்டான்.

சுநீதிக்குக் கவலை இருந்தாலும் புத்திசாலியாக விளங்கியவள்.

அழுகிற குழந்தை நன்ருக அழுதுவிட்டால் கவலை குறைந்துவிடும். ஆகவே சற்று நேரம் பொறுத்தாள்.

துருவன் கொஞ்சநேரம் அழுது ஓய்ந்தான்.

''மகனே! உன் துன்பத்திற்கு என்ன காரணம்? உன் தந்தையை யாராவது அவமானம் செய்து விட்டார்களா? ஏன் அழுதாய்? கண்ணே சொல்.''

துருவன் தன் தாயின் முகத்தைப் பார்த்தான் அம் முகத்தில் கருணையைக் கண்டான் அவன்.

''அம்மா! இன்று நான் அரசரின் அந்தபுரத்திற்குச் சென்றேன். அங்கே தந்தையைக் கண்டேன்.....''

சற்று நிறுத்தினான் துருவன்.

சுநீதி புரிந்து கொண்டாள். நிச்சயம் துருவனை சுருசி மனம் உடையும்படியாக ஏதேனும் கூறியிருப்பாள் என்பது அவளுக்குத் தெரிந்தது.

''துருவா! சுருசி ஏதாவது தவருகச் சொன்னுளா?''

இப்படிக் கேட்ட தன் தாயை ஆச்சரியத்துடன் பார்த்தான் துருவன். அங்கு நடந்ததுஇங்கிருந்தே எப்படித் தன் தாய் அறிந்தார்கள்?

''ஆம் அம்மா; சின்னம்மா சில விஷயங்களைச் சொன்னுர்கள்''.

''நீ ஏதாவது தவருக நடந்து கொண்டாயா?''

''அம்மா! தந்தையின்மடிமீது தம்பி உத்தமன் விளையாடிக் கொண்டிருந்தான். எனக்கும் அப்படி விளையாட வேண்டும் என்ற ஆசை வந்தது. நானும் அப்படி அவர்மீது ஏறி விளையாடச் சென்றேன். அவ்வளவுதான். இது தவரு?''

சுநீதிக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. தன் மகன் துருவன் ஆசைப் பட்டிருக்கின்றான். ஆனால் சுருசி அதை அனுமதிக்கவில்லை.

''அப்பா மகனே! உன் தந்தைஒன்றும் பேசவில்லையா?''

''இல்லையம்மா! அவர் ஒன்றும் பேசவில்லை.''

சுநீதி பெருமூச்சு ஒன்றை விட்டாள். தன் மகனை அன்புடன் அணைத்து ஆதரவளிக்காமல் ஒரு தந்தை இருக்கிறார் என்றால் அது ஆச்சரியமல்லவா?

துருவனைப் பார்த்தாள், அவன் இன்னும் கலங்கியவாறே இருந்தான்.

''மகனே துருவா! இதற்காக வருந்தாதே! காலம் ஒன்று வரும். அப்போது நீ உயர்வு பெறுவாய். பொறுத்துக் கொள் மகனே!''

அவள் ஆதரவாக பேசினாள். ஆனால் அது துருவனுக்கு அமைதியைத் தரவில்லை. அவன் மனதில் உறுத்திக் கொண்டிருந்தது ஒரு சொல்.

''அம்மா! நான் வருத்தப்படவில்லை. ஆனால் சிற்றன்னை என்னைப் பார்த்து ஒன்றைச் சொன்னார்கள். அதைத்தான் என்னால் மறக்க முடியவில்லை!''

''அப்படி அவள் என்னதான் சொன்னாள்?''

துருவன் சொல்ல ஆரம்பித்தான்.

''அம்மா! அரசரின் மடிமீது உட்கார வேண்டுமானால் நான் தவம் செய்திருக்க வேண்டுமாம். அதுமட்டுமல்லாமல் அவர்கள் வயிற்றில் குழந்தையாகப் பிறந்திருக்க வேண்டுமாம்.''

சுநீதிக்குப் புரிந்தது. துருவன் மனதைச் சஞ்சலம் அடையச் செய்தது எது என்பதை அவள் அறிந்தாள்.

''மகனே! துருவா! அவள் சொன்னது உண்மைதான். உத்தமன் பெருந்தவம் செய்திருக்கிறான். ஆகவே அவன் அரசன் பக்கத்தில் இருக்கும் அதிருஷ்டம் பெற்றிருக்கின்றான். நீயோ அப்படித் தவம் செய்திருக்கவில்லை. ஆகவே தான் பாபியான என் வயிற்றில் பிறந்திருக்கின்றாய்.''

உடனே துருவன் கேட்டான்.

''அம்மா! எனக்குத் தெரிந்து உத்தமன் என்றைக்கும் தவம் செய்யவில்லையே? அப்படி இருக்க இது எப்படி முடியும்?''

மகனின் இக்கேள்வி சுநீதியைப் பூரிக்கச் செய்தது. எவ்வளவு நுணுக்கமான கேள்வி இது?

''மகனே! முந்தைய பிறவியால் செய்த தவம் இந்தப் பிறவியில் வரும். இப்பிறவியில் செய்தகவம் அடுத்த பிறவிக்கு வரும். உத்தமன் முந்தைய பிறவியில் தவம் செய்திருப்பான். நீ அப்படிச் செய்திருக்கமாட்டாய்.''

துருவனுக்கு ஒருவாறு புரிந்தது. சிறப்பு வேண்டுமானால் தவம் செய்ய வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டான். அவன் தன் தாயைப் பார்த்தான். அவள் முகத்தில் இப்பொழுது அவ்வளவு கலக்கம் இல்லை.

''அம்மா! உங்களிடம் இருந்து சில விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். அம்மா! அரசர் பதவி உயர்ந்த பதவியா?''

''ஆம் அப்பா! உயர்ந்த பதவிதான்.''

''அதைவிடச் சிறந்த பதவி உண்டா?''

''உண்டு. ஆனால் அது சாதாரணமாகக் கிடைக்காது. இறைவனின் அருளால் தான் அது கிடைக்கும்''

''இறைவன் அருளில்லாமல் அது கிடைக்காதா?''

''நிச்சயம் கிடைக்காது.''

''அப்பதவி வேண்டுமென்றால் பெரிய தவம் செய்ய வேண்டும்?''

''ஆம். காட்டில் சென்று, எதையும் வேளா வேளைக்கு உண்ணாமல், கிடைத்ததைச் சாப்பிட்டு, சதா இறைவனின் நாமத்தைச் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். அப்படிச் சொன்னால் இறைவன் தோன்றுவார். அவரிடம் நாம் எதைக் கேட்கின்றோமோ அதைக் கொடுப்பார்.''

''இது நிச்சயமா அம்மா.''

''சர்வ நிச்சயம். நம் பெரியவர்கள் அப்படித்தான் சொல்லியிருக்கிறார்கள்.''

''ரொம்ப மகிழ்ச்சி அம்மா! நீங்கள் சொன்னவை என் மனதில் நன்றாகப் பதிந்து விட்டன. அம்மா! நீங்கள் எனக்கு அனுமதி தாருங்கள். இன்றே காட்டிற்குப் போய் தவம் செய்யத் தொடங்குகின்றேன். இறைவனையும் காண்பேன்! மறுக்காமல் அனுமதி தாருங்கள்.

துருவன் சுநீதியின் காலடியில் விழுந்தான்.

துருவன் இப்படித் திடீரென்று செய்து விடுவான் என்று சுநீதி எண்ணிப் பார்த்திருக்கவில்லை. விளையாட்டாக ஏதோ கேட்கின்றான் என்று தான் நினைத்தாள். இப்போதும் அவன் துருவன் விளையாட்டுக்குத் தான் இப்படிப் பேசுகின்றான் என்றே எண்ணினாள். ஆனால் துருவன் பிடிவாதமாக இருந்தான்.

அவனுக்கு அனுமதியளிக்காமல் இருக்க முடியாது என்பதை நன்றாக உணர்ந்து கொண்டாள் சுநீதி.

''மகனே துருவா! உன் உறுதியான சொற்களால்நான் மகிழ்ந்தேன். எத்தனைத்துன்பம் வந்தாலும் வைராக்கியமாக இருக்க வேண்டும். ஒரு வேளை நீ கடுமையான தவத்தில்

இருந்தாலும், நாமே வந்து தவத்தை நிறுத்து என்று சொன்னாலும் கேட்கக் கூடாது. உன் உறுதியால் தான் நீ வெற்றி பெற வேண்டும். தெரிகிறதா!''

''அப்படியே அம்மா! அம்மா நான் யாரை நோக்கித் தவம் செய்ய வேண்டும் அந்த இறைவனின் திருப் பெயர் என்ன?''

''மகனே! நீ இதை என்னிடம் தெரிந்து கொள்ள முடியாது. காட்டிற்குச்செல். முனிவர்கள் இருப்பார்கள். அவர்களிடம் இதேகேள்வியைக் கேள். அவர்கள் உனக்கு உரியபதிலைச் சொல்வார்கள்.''

துருவன் நன்றாகக் கேட்டு அவைகளை மனதில் பதிய வைத்துக் கொண்டான். தன் தாயின்காலடியில் விழுந்து ஆசி பெற்றுக் காட்டிற்குப் புறப்பட்டான்.

ஃ ஃ ஃ

அரண்மனையை விட்டு நெடுந்தூரம் நடந்தான். அவன் முன்னால் மரங்கள் நிறைய இருந்த காடு ஒன்று தென் பட்டது. ஆனால் அதையும் விட நெருக்கமான இடத்தைத் தேடினான் துருவன். அவன் போய்க் கொண்டே இருந்தான்.

யமுனை ஆறு குறுக்கிட்டது. அவ்வாற்றில் இறங்கி நீராடி விட்டு அதன் கரையோரமாகவே நடந்தான்.

மரங்கள் நெருங்கி மனிதர்கள் உள்ளே போவதே கடினம் என்று சொல்லும்படியான ஓர் இடம் தென்பட்டது. துருவன் நின்றான். தவம் செய்வதற்கான இடம் இதுதான் எனத் தீர்மானித்தான். ஆனால் அவனுக்கு இன்னும் கிடைக்காத விஷயம் யாரை நோக்கித் தவம் செய்வது என்பது தான்.

சுற்று முற்றும் பார்த்தான், யாராவது தென்படுவார்களா என்று நெடுநேரம் பார்த்துச் சோர்ந்து போனான்.

திடீரென்று அவன் முன்னால் முனிவர் போலத் தோற்ற மளித்த ஒருவர் தோன்றினார். அவர் வீணையொன்றைத் தன் தோளில் சாத்தியிருந்தார். அவர் கழுத்தில் அழகான மாலையொன்று அலங்கரித்துக் கொண்டிருந்தது.

துருவன் மகிழ்ச்சியடைந்து, நிச்சயமாக இந்தப்பெரியவர் தன் கேள்விகளுக்குப் பதிலைச் சொல்வார் என்று நம்பினான்.

அவரைக் கண்டதும் வணங்கினான். திருவடிகளில் விழுந்து காலைத் தொட்டுக் கும்பிட்டான்.

''யாரப்பா நீ?'' என்றார் அவர்.

''சுவாமி! என் பெயர் துருவன். உத்தம பரதன் என்று சொல்லப்படுகின்ற அரசனின் குமாரன்.''

''அப்படியா நல்லது. வேட்டையாட உன் தந்தையோடு வந்து வழிதவறி விட்டாயா?''

''இல்லை சுவாமி! நான் தனியாகத்தான் வந்திருக்கின்றேன்.''

''தனியாகவா? இக் கொடிய காட்டில் விலங்குகள் நிறைய இருக்குமே. அப்படிப்பட்ட இடத்தில் தனியாக வரலாமா? ஆபத்தல்லவா, இருக்கட்டும் எதற்காக வந்தாய்?''

''சுவாமி! நான் தவம் செய்வதற்காக வந்திருகின்றேன்.''

இதைக் கேட்டதும் அவர் கடகடவென்று சிரிக்க ஆரம்பித்தார். துருவன் அவரை ஆச்சரியத்துடன் பார்த்தான். ஏன் அவர் சிரிக்கிறார்?

''சுவாமி! தவம் செய்ய வந்தேன் என்று சொன்னவுடன் சிரிக்கிறீர்களே?''

''சிரிக்காமல் என்ன செய்யச் சொல்லுகிறாயப்பா? தவம் செய்வதற்கு ஒரு வயது இருக்கிறது அல்லவா?

விளையாட்டுப் பருவம் உனக்கு. வீட்டில் இருந்து மகிழ்ச்சியோடு பொழுதைப் போக்க வேண்டிய வயதில் இப்படியா? அதுவும் நீயோ அரசகுமாரன். வசதிக்கு என்ன குறைச்சல். அவைகளையெல்லாம் விட்டு விட்டு நீ இப்படி வந்ததை எண்ணினேன். சிரிப்பு வந்து விட்டது.''

''அப்படிச் சொல்லாதீர்கள் சுவாமி. எவ்வளவு துன்பம் வந்தாலும் சரி. அவைகளைப் பொறுத்துக் கொள்வேன். தவம்செய்வது என்று தீர்மானித்துவிட்டேன். இதிலிருந்து நான் நிச்சயம் மாறப் போவதில்லை.''

''அப்படியா? மகிழ்ச்சி. உன் உறுதியைப் பாராட்டுகின்றேன். அதிருக்கட்டும். யாரை நோக்கித் தவம் செய்யப் போகின்றாய்?''

''சுவாமி அதைத் தாங்கள் தான் சொல்ல வேண்டும்.''

''நல்லது, நாராயணனை நோக்கித் தவம் செய். அவர் நீ வேண்டியதை எல்லாம் தருவார்.''

''எத்தனையோ தெய்வங்கள் இருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். அவர்களில் குறிப்பாக நாராயணனையே ஏன் கூறுகின்றீர்கள் சுவாமி?''

''அப்பா துருவா! நாராயணன் யார் கூப்பிட்டாலும் உடனே வருகின்றவர். முன்பு ஒரு தடவை கஜேந்திரன் என்னும் யானையானது ஒரு மடுவுக்குச் சென்றது. அது அம்மடுவில் பூத்திருக்கும் தாமரை மலரைப் பறிக்க எண்ணியது. தன் காலை மடுவில் விட்டவுடன் முதலையொன்று பற்றிக் கொண்டது. பலகாலம் போராடி முதலையின் பிடியிலிருந்து யானை தன் காலை மீட்க முடியவில்லை. கடைசியில், ''ஆதிமூலமே'' என்று நாராயணனை அழைத்தது. நாராயணன் ஓடோடி வந்து தன் சக்கரத்தை முதலை மீது ஏவினார். முதலையின் வாயிலிருந்து யானையைக் காப்பாற்றினார். வாயில்லா ஜீவனாகிய யானையையே அவர் காப்பாற்றினார் என்றால் உன்னைக் காப்பற்ற மாட்டாரா?''

''அப்படியா சுவாமி! அந்த நாரயாணனின் பெருமைகளை நன்ருகத் தெரிந்து கொண்டேன். நான் எப்படித் தவம் செய்வது? அதை எனக்குக் கற்றுக் கொடுக்கவில்லையே?''

''துருவா! நீ நிரம்பவும் புத்திசாலி. உன்னுல் உன் பெற்ருேர் புகழ் அடையப் போகிருர்கள். இங்கே வா. நான் கூறுகிறேன்.''

அப்பெரியவர் அழைத்தார். துருவன் அவர் அருகில் போய் நின்ருன். அவனை அழைத்துக் கொண்டு ஒரு மரத்தடிக்குச் சென்ருர்.

''துருவா! நீ இங்கேயே நிற்கவேண்டும். நான் சொல்லுவதை நன்ருகக் கேள். ஓம் நாராயணுய நமஹ: என்று சொல் பார்க்கலாம்.''

அப்பெரியவர் சொன்னதை நன்ருகக் கவனமுடன், கேட்டான் துருவன்.

''ஓம் நாராயணுய நமஹ''

அவன் மெதுவாக, ஆனுல் அழுத்தமாக உச்சரித்தான்.

''சுவாமி, நான் உச்சரிப்பது சரியாக இருக்கின்றதல்லவா?''

பெரியவர் மகிழ்ந்து போனுர்.

''துருவா! ஒரே ஒரு தடவை சொன்னவுடன் புரிந்து கொண்டாயே, நல்லது. ஆனுல் தவம் செய்பவர்களுக்கு பல குணங்கள் வேண்டும். அவைகளைச் சொல்லுகிறேன். கவனமாகக் கேட்பாயாக.''

துருவன் அவரையே பார்த்துக் கொண்டே நின்ருன்.

''துருவா! முதலில் வேண்டுவது, நீ சொல்லுகின்ற நாமத்தை உடைய பகவான் நிச்சயம் வருவார் என்ற நம்

பிக்கை. உனக்கு அந்த நம்பிக்கை உண்டு என்பதை நான் அறிவேன்.''

துருவன் கவனமாகக் கேட்டான்.

அடுத்தது வைராக்கியம், அப்பா. அடையப் போவது உறுதி என்று நம்பிக்கை இருந்தாலும் அடைய வேண்டும் என்ற வைராக்கியம் வேண்டும். வைராக்கியம் அழியும் நிலையில் சோதனைகள் நிகழும். அத்தனை சோதனைகளிலும் வெற்றி பெற வேண்டும். உன்னால் முடியுமல்லவா?''

''சுவாமி! பகவானைச் சந்திக்க வேண்டும் என்ற வைராக்கியம் எனக்கு நிச்சயம் உண்டு.''

''காட்டில் கொடிய விலங்குகள் இருக்கின்றன. அவைகள் எந்த நேரத்திலும் உனக்குத் தீங்கைச் செய்யலாம். அப்படி விலங்குகள் வந்தால் நீ என்ன செய்வாய்?''

''சுவாமி பகவானின் பெயரைச் சொல்லும் போது விலங்குகளும் வருமா? அப்படி அவைகள் எனக்குத் தீங்கு செய்யஎண்ணினால் அந்தப் பகவான் காப்பாற்ற மாட்டாரா?''

மகிழ்ந்து போனார் அவர். எவ்வளவு உறுதி?

''அப்பா துருவா! நீ அரண்மனையில் வாழ்ந்தவன். வேளா வேலைக்கு உயர்ந்த உணவு வகைகளை உண்டவன். காட்டிலே எங்கே உணவு கிடைக்கும்? காய், கனி, கிழங்குகள் தான் கிடைக்கும். அதுவும் சில நேரக்களில் கிடைக்காது. பசி, தாகம் ஆகியவைகளை அடக்க வேண்டும். இவைகள் எல்லாம் உன்னால் முடியுமா?''

''சுவாமி! நான் அரண்மனையில் வாழ்ந்தவன் தான். ஆனால் பகவானைக் காணவேண்டும் என்று நான் காட்டிற்கு வந்து விட்டேன். எனக்கு என்ன ஏற்பட்டாலும் சரி. உணவில்லாமல் என் உயிர் போனாலும் சரி. பகவானைக் கண்ட பிறகே நான் நிம்மதி பெறுவேன். அதற்கு முன் உயிர்

போவதாக இருந்தால் அப்பாவம் என்னைச் சேராது. அந்த நாராயணனையே சேரும். சின்னஞ்சிறு குழந்தையான என்னை அவர் காக்க வைக்க மாட்டார்.''

''துருவா! உன்னுடைய அமிர்தமயமான வார்த்தைகளால் நான் மகிழ்ந்து போனேன். இனி உனக்கு வெற்றி நிச்சயம், நீ வெற்றி பெற ஆசிகளை வழங்குகின்றேன்; நான் வரட்டுமா?''

''சுவாமி! இவ்வளவு நேரம் என்னோடு தாங்கள் உரையாடினீர்கள். எனக்கு நல்ல வழியையும் காட்டினீர்கள். ஆனால் என் மனதில் ஒரு பெரும் குறையை உண்டாக்கி விட்டுச் செல்லுகின்றீர்களே? இது நியாயமா?''

''துருவா! நீ என்ன சொல்லுகின்றாய்? நான் என்ன குறையை உன் மனதில் உண்டாக்கினேன்?''

''சுவாமி! நான் யார் என்று விசாரித்து அறிந்தீர்கள். ஆனால் தாங்கள் யார் என்று சொல்லவில்லையே? அதுதான் என் குறை!''

''அவ்வளவுதானா? நான் ஏதோ என்று எண்ணிவிட்டேன். துருவா! இந்த உலகில் உள்ளோரும், முனியவர்களும் மற்றும் வேதர்களும் என்னை நாரதர் என்றும் சொல்வார்கள்''

இதைக் கேட்டதும் துருவன் ஆச்சரியத்தால் திகைத்தான் இது நேரம் வரை தன்னுடன் பேசியவரா நாரதர்? அவனால் நம்பமுடியவில்லை. அவருடைய காலடிகளில் விழுந்து, தன் கண்ணீரால் அவர் பாதங்களை நனைத்தான்.

''துருவா! இந்த உலகிலுள்ள சிறுவர்கள் என்றும் உன்னைப் பாராட்டும்படியான உயர்ந்த காரியத்தை நீ செய்யப் போகின்றாய். வைராக்கியம் உள்ளவர்களால் எந்தக் காரியத்தையும் செய்ய முடியும் என்பதை நீ நிரூபிக்கப் போகின்றாய். நான் வருகின்றேன்.''

''நாராயணா, நாராயணா!''-- என்று சொல்லிக் கொண்டே நாரதர் சென்று விட்டார்.

துருவன் இப்போது தனிமையில் விடப்பட்டான்.

துருவன் நாரத முனிவரிடம் உபதேசம் பெற்ற இடம் மதுவனம் எனப்படும். சகலவிதமான செடி கொடிகளும், அடர்ந்த மரங்களும் ஏராளமாக நிறைந்திருந்தது அவ்வனம். கனிகளுக்குப் பஞ்சமேயில்லை.

யமுனை ஆற்றங்கரையில் அந்தஅழகான வனம் இருந்த தால் அந்த இடம் மிகவும் சுகம் தருவதாக இருந்தது. அவ்வனத்தில் வாழ்ந்து வந்த முயல் போன்ற விலங்குகள் காண்போருக்கு மகிழ்ச்சியைத்தருவ தாக இருக்கும். ஆனல் அங்கு மனித சஞ்சாரமே இல்லை.

அவ்வழகான வனத்தில் நாரதர் காட்டிய மரத்தினடி யில் துருவன் வந்து நின்றான். அவன் தவம் செய்யவேண் டிய இடம் அதுவே. மந்திரத்தை நாரத முனிவர் கூறிவிட் டார். இனி தவத்தைத் தொடங்க வேண்டியதுதானே?

யமுனை நதியில் நீராடிவிட்டு, கனிகளை உண்டான். இதுவரையும் அனுபவித்தறியாத இன்பவுணர்ச்சிஅவனுக்கு ஏற்பட்டது. அரண்மனையிலும் கனிகள் இருந்தன. பல வகையான கனிகளையும் அவன் உண்டிருக்கின்றான். ஆனல் அவை இவ்வளவு சுவையுள்ளனவாக இருந்ததில்லை.

மரத்தினடியில் வந்து நின்ற அவன் ''ஓம் நாராயணாய நமஹ'' ''ஓம் நாராயணாய நமஹ'' என்று மந்திரத்தை உச் சரித்து கண்களை மூடிக் கொண்டான்.

தன் கண்களில் அந்த நாராயணனின் திருவுருவைக் கொண்டுவர முயன்றான். நான்கு கரங்களையும் மோகன வடிவத்தையும் கொண்டவன் நாராயணன் என்பதை அவனுடைய தாய் கூறியிருந்தாள். அது அவன் நினைவுக்கு வந்து நின்றது.

தவம் செய்வதற்கு உபவாஸம் இருத்தல் அவசியம். எனவே, உணவு உண்பதில் கட்டுப் பாட்டை வளர்க்க விரும்பினான். கூடுமானவரை உணவே உட்கொள்ளுவதில்லை எனவும் தீர்மானித்தான்.

மூன்று நாட்களுக்கு ஒரு முறை விளாம் பழத்தையும் இலந்தைப் பழத்தையும் சாப்பிட்டான்.

மனதில் நாராயணனைத் தியானம் செய்தான்.

கொஞ்ச நாட்கள் கழிந்தன.

பிறகு ஆறு நாட்களுக்கு ஒரு முறை உதிர்ந்த இலைகளையும் புல்லையும் உண்டான். கனி உண்ணுவதை நிறுத்தினான்.

நாராயணனை மனதிற்குள் தியானிப்பதில் அதிகவூக்கம் பிறந்தது.

இரண்டு மாதங்கள் கழிந்தன.

பிறகு உதிர்ந்த இலைகள், புல் சாப்பிடுவதை நிறுத்தினான்.

ஒன்பது நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் மட்டும் அருந்தினான்.

மனதிற்குள் நாராயணன் என்ற பெயர் மட்டும் நின்றது.

மூன்று மாதங்கள் கழிந்தன.

பிறகு நீர் அருந்துவதையும் நிறுத்தினான்.

இப்போது பன்னிரண்டு நாட்களுக்கு ஒருமுறை காற்றை மட்டும் உணவாகக் கொண்டான்.

நான்கு மாதங்கள் கழிந்தன.

அரசிளங்குமரனும் துருவன் இப்போது எதையும் உண்ணுவதில்லை. மூச்சை முழுவதுமாக அடக்கினன். நாராயணனின் உருவம் ஒன்றே அவன் மனதில் நிலைத்தது.

இவ்வாறு ஐந்து மாதங்கள் சென்றன.

மூச்சுக் காற்றைக் கட்டுப்படுத்துவதில் வல்லவன் ஆனன் துருவன்.

ஒரே நினைவாக நாராயணனையே தியானம் செய்து வந்தான் துருவன். அவன் சிந்தத்தில் நாராயணன் நிறைந்தார். ஒரே சிந்தனையாக அவன் இருந்ததால் அவன் யோகி ஆனன்!

எல்லாரையும் தாங்குகின்றவள் பூமாதேவி..அவளாலே துருவனின் உடலைத் தாங்க முடியவில்லை. அவன் தனது இடக்காலை ஊன்றி வலக்காலை மடித்துத் தவம் செய்தான். அப்போது பூமியின் இடதுபாகம் தாழ்ந்தது. வலக்காலை ஊன்றி, இடக்காலை மடித்தபோது பூமியின் வலதுபாகம் தாழ்ந்தது! சில சமயங்களில் தனது கட்டைவிரலால் பூமியில் நின்றுன். அப்போது பூமியே நடுங்கியது.

மற்ற உயிரினங்களும் கலக்கம் அடைந்தன. தேவர்கள் நடுங்கினர். அவர்கள் அனைவரும் ஒன்று கூடினர். தங்கள் தலைவனை இந்திரனைக் காணச் சென்றனர். இந்திரன் யோசிக்க ஆரம்பித்தான்.

பூவுலகில் யாராவது தவம் செய்ய ஆரம்பித்தால் அவன் கலங்குவான். தவம் செய்பவர்களுக்கு இந்திரபதவி கிடைக்கும் என்பது வழக்கமாக இருந்தது, ஆகவே அவன் அவர்களின் தவத்தைக் கலைக்க முயற்சிப்பான்.

தவம் செய்பவர்கள் பெரியவர்களாக இருந்தால், ரம்பை, ஊர்வசி அல்லது திலோத்தமை ஆகிய நாட்டியப் பெண்களில் ஒருத்தியை அனுப்பி வைப்பான். அவர்கள் தங்கள் நாட்டியத் திறமையினுலும், இசை வல்லமையா

லும் அவர்களின் தவத்தைக் கலேத்து விடுவார்கள். இப்படி இந்திரன் பலருடைய தவத்தைக் கெடுத்திருக்கின்றான்.

ஆனால் இப்போது தவம் செய்பவன் ஐந்தே வயதான சிறுவன். ஆகவே அவனேப் பயமுறுத்த வேண்டும் என எண்ணினன் இந்திரன்.

பயங்கரமான பூதகணங்களே அழைத்தான். பூத கணங்கள் வந்து நின்றன. அவர்களின் தலைவனே அழைத்தான் இந்திரன்.

''பூத கணங்களின் தலைவனே! நீ மதுவனம் போக வேண்டும். அங்குத் துருவன் என்னும் சிறுவன் ஒருவன் தவம் செய்கின்றான். அவனேப் பயமுறுத்த வேண்டும். என்ன செய்வாயோ எனக்குத் தெரியாது ஆனால் துருவன் அங்கு இருக்கக்கூடாது. வேறு எங்கும் சென்று தவமும் செய்யக் கூடாது. என்ன தெரிகிறதா?''

இந்திரனின் மிரட்டலான கட்டளையை ஏற்றுக்கொண்டான் பூத கணங்களின் தலைவன். அவன் துருவன் தவம் செய்யும் இடத்திற்கு வந்தான்.

கள்ளங் கபடமற்ற அச்சிறுவனின் முக அழகு அவனேக் கவர்ந்தது. 'போயும் போயும் இவனையா பயமுறுத்த வேண்டும்?' என்று வருந்தினன் அவன். ஆனாலும் அவனுக்குக் கட்டளையிடப் பட்டிருந்ததே!

பயங்கரமான புயல் காற்று வீசியது. மரஞ்செடி, கொடிகள் எல்லாம் ஒடிந்து விழுந்தன. பேய்க்காற்றைத் தாங்கிக் கொள்ள முடியாமல் பறவைகள் நடுங்கின. அத்துடன் பெருமழையும் சேர்ந்து கொண்டது. கேட்கவா வேண்டும்? மதுவனத்தில் வாழ்ந்து வந்த மிருகங்கள் தங்கள் இருப்பிடங்களே விட்டு வெளியே வந்தன. அவைகள் துருவன் தவம் செய்யும் இடத்திற்கு வந்து அவனே ஆச்சரியமாகப் பார்த்தன.

புயல்காற்ருே, இடிமின்னலுடன் கூடிய மழையோ அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. துருவன் கலங்கிப் போகவும் இல்லை; பயந்து ஓடவும் இல்லை. முன்னைக் காட்டிலும் அதிக வைராக்கியம் அவனுக்குப் பிறந்தது முன்னைவிட பலத்த குரலில் மந்திரத்தை உச்சரித்தான்.

நாராயண மந்திரத்தின் வலிமை தாங்க முடியாமல் கணங்களின் தலைவன் நிலை கலங்கினன். அவனல் முடிந்த மட்டும் முயன்று பார்த்தான். ஆனல் முடியவில்லை. எனவே அவன் இந்திரனைக் காணச் சென்ருன்.

''பிரபுவே! நானும் எவ்வளவோ முயன்று விட்டேன். அவனைப் பயப்படுத்தக்க சூழ்ச்சியும் செய்தேன். ஆனல் அத்தனையும் தோல்வி அடைந்து விட்டன'' என்ருன்.

இந்திரன் யோசிக்க ஆரம்பித்தான்.

அவனுக்கு மற்ெருரு வழி புலப்பட்டது.

பயத்தால் மாற்ற முடியாத துருவனை பாசத்தால் மாற்றலாம் என நம்பினன்.

தேவமகள் ஒருத்தியை அழைத்தான் இந்திரன். அவளும் வந்து நின்ருள். அவளிடம் சில செய்திகளைக் கூறினன். அவளும் தலையாட்டிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டாள்.

துருவன் தவம் செய்யும் இடத்திற்கு வந்து நின்ருள் அவள். திடீரென்று அவள் துருவனின் தாயாகிய சுநீதியின் உருவத்தை எடுத்துக் கொண்டாள்.

இப்போது அவளைப் பார்த்தவர்கள் அவள் தேவமகள் என்று சொல்ல மாட்டார்கள். சுநீதி போலவே தோன்றினள்.

சுநீதி உருவம் எடுத்த அப்பெண் துருவன் அருகிலே வந்து நின்ருள்.

துருவனோ தவத்தில் மூழ்கியிருந்தான். அவன் சித்தம் நாராயணன் பால் இருந்தது. சூழ இருந்தவை அவனுக்கு தென்படவில்லை. தன் அருகில் வந்து யார் நிற்கிறார்கள் என்பதும் அவனுக்குத் தெரியவில்லை.

திடீரென்று ஒரு பெண் குரல் கேட்டது.

முதலில் துருவன் இதைக் கவனிக்கவில்லை. ஆனால் நெடு நேரமாக அந்த அழுகை கேட்டுக் கொண்டே இருந்தது. அக்குரல் தன் தாயின் குரல் போல் இருப்பதை துருவன் உணர்ந்தான்.

ஆகவே கண்களைத் திறந்து பார்த்தான்.

எதிரே தன் தாய் அழுதுக் கொண்டிருப்பதைக் கண்டான். அவனால் தன் தாய் அழுவதைப் பார்க்கச் சகிக்கவில்லை.

தன் தாய் ஏன் அழவேண்டும்?

''அம்மா! இவ்வனத்திற்குத் தாங்கள் எப்போது வந்தீர்கள்? ஏன் அழுகின்றீர்கள்?''

துருவன் இக்கேள்விகளைக் கேட்டதும் முன்னிலும் பலமாக அவள் அழ ஆரம்பித்து விட்டாள். அவளைச் சமாதானப் படுத்துவது கடினம் என்று துருவன் உணர்ந்தான். ஆனால் அவன் அதற்காகக் கலங்கவில்லை.

''மகனே! துருவா! இதற்காகவா உன்னைப் பெற்றேன்?''

அவள் முதன் முதலாகப் பேசினாள்.

துருவன் அவளைப் பார்த்தான்.

தன்மகன் உயர்நிலை அடைய வேண்டும் என்றுதானே தாய் விரும்புவாள். ஆனால் இவர்களோ இப்படிப் பேசுகின்றார்களே!

''என்னம்மா கூறுகின்றீர்கள்?'' துருவன் அவளைப் பார்த்துக் கேட்டான்.

''மகனே! அரசகுமாரனாகப் பிறந்த நீ இப்படிக் காட்டில் அலைந்திப் படலாமா?''

''இதுதானா? நானோ வேறு எதையோ எண்ணி விட்டேன்.''

''மகனே, துருவா! பொன் போன்ற உன் உடம்பு இப்படி இளைத்து விட்டது. எப்படிப் பொறுப்பேன் மகனே.''

''தாயே! சோதனைக்குப் பின்தானே சாதனை. அச் சாதனையை நிகழ்த்த வேதனையைத் தாங்கிக் கொள்ளத் தானே வேண்டும்?''

''வேண்டாமடா மகனே வேண்டாம். நீ உன் உடலை இப்படி வருத்திக் கொண்டு தவம் செய்ய வேண்டாம்.''

''அம்மா! இது தங்களுக்கே நியாயமாகத் தெரிகின்றதா?''

''துருவா! நீ என் வயிற்றில் பிறந்தவன். உனக்குத் துன்பம் வருவதை நான் எப்படியடா சகித்துக் கொண்டிருப்பேன்?''

''அம்மா! அப்படி நீ வருந்தும்படியான காரியம் என்ன செய்து விட்டேன்? தவம் செய்வது தவறா? எத்தனைச் செல்வமானாலும் அத்தனையும் தவத்தால் பெறலாம் என்று சொன்னவர்கள் நீங்கள் தானே? நான் காட்டில் போய்த் தவம் செய்ய வேண்டும் என்று அனுமதி கொடுத்தவர்களே தாங்கள் தானே? அப்படியிருக்க இப்போதுஎன் மனதைக் கலைக்கலாமா?''

''துருவா! அனேக காலம் தவம் இருந்து உன்னைப் பெற்றேன். அனாதையான என்னை நீ தனியே விட்டு வந்தி

ருக்கின்றாயே. அரசனின் அன்பைப் பெற முடியாத பாவி யாக இருக்கின்றேன். மகனின் பாசம் கூடக் கிடைக்கவில்லை யென்றால் நான் எவ்வளவு பெரிய பாவி. கதியற்ற எனக்கு நீ அல்லவா கதி? உன் வயதோ ஐந்து. ஆனால் நீ செய்ய வேண்டிய காரியமா இது? பயனற்ற இப் முயற்சியிலிருந்து உன் மனதை மாற்றிக் கொள். அப்பா மகனே! நீ விளையாடும் பருவம் இது. அதன் பிறகு வேதங்களைக் கற்கும் பருவம். திருமணமான பின்பு, குழந்தைகளைப் பெற்ற பிறகு, தவம் செய்யும் காலம் வரும். ஆனால் அத்தனையும் துறந்து விட்டு நீ இப்படி வரலாமா? இக்காட்டில் கொடிய விலங்குகள் வேறு வாழ்கின்றன. உன்னை இனியும் நான் அனுமதிக்க மாட்டேன். உடனே வந்து விடு. நீ வரவில்லையானால் உன் முன்னாலே தீ வளர்த்து அதில் குதித்து விடுவேன்.''

அவள் பயமுறுத்தும்படி பேசினாள். துருவனுக்குக் கவலை யாகப் போய் விட்டது.

தான் தவம் செய்ய நினைத்துத் தன் அன்னையிடம் அனு மதி கேட்டபோது அவர்கள் கூறிய வார்த்தைகள் துருவ னுக்கு நினைவில் வந்தது.

''மகனே துருவா? எத்தனை துன்பம் வந்தாலும் வைராக் கியமாக இருக்க வேண்டும். ஒரு வேளை நீ கடுமையான தவத்தில் இருந்தாலும், நானே வந்து தவத்தை நிறுத்து என்று சொன்னாலும் கேட்கக் கூடாது. உன் உறுதியால் தான் நீ வெற்றி பெற வேண்டும், தெரிகிறதா?''

அப்படித்தன்னை வாழ்த்தி வழியனுப்பி வைத்த தன் தாய் இப்படி எப்படி மாறினார்கள்?

அவன் சுநீதியை உற்று நோக்கினான்.

இது வரை அவன் செய்திருந்த தவத்தின் பயனாக அவன் மாபெரும் உண்மை ஒன்றைத் தெரிந்துகொண்டான். அங்கு வந்து அவனுடன் விவாதித்துக் கொண்டிருப்பது தன்

அன்னையான சுநீதியல்ல. வேறு யாரோ ஒரு பெண் தன் தாயின் ரூபத்தில் வந்திருக்கின்றாள்.

இதைப் புரிந்து கொண்டான் துருவன். அவனுக்குச் சிரிப்பு வந்தது. நான் செய்யும் தவத்திற்குக் கேடு செய்ய யாரோ எண்ணி இருக்கிறார்கள்.

துருவன் அப்பெண்ணைக் கையெடுத்துக் கும்பிட்டான். பிறகு பேசினான்:

''அம்மா! நீங்கள் என் தாய் சுநீதியல்ல. என் தாயின் உருவத்தில் வந்திருக்கின்றீர்கள். யாரோ தங்களை அனுப்பி என் தவத்தைச் சோதிக்கச் செய்திருக்கிறார்கள் இல்லையா?''

துருவன் இக் கேள்வியைக் கேட்டதும் சுநீதி உருவத்தில் இருந்த தேவமகள் ஆச்சரியம் அடைந்தாள். தான் யார் என்பதை எப்படி அச்சிறுவன் தெரிந்து கொண்டான்? இனியும் சுநீதி உருவத்தில் இருப்பது சரியல்ல என்று எண்ணினாள். தன் சுய உருவில் தோன்றினாள்.

''அப்பா துருவா! உன் பெருமையை இப்போதுதான் தெரிந்து கொண்டேன். உன் தவத்தைக் கெடுப்பதற்காக நான் வந்தேன். ஆனால் தோல்வி அடைந்தேன். கோபித்து என்னைச் சபித்து விடாதே.''

அவள் கெஞ்சினாள். துருவன் சிரித்தான்.

''அம்மா உங்களை நான் ஏன் சபிக்கின்றேன். என் தவத்தை நீங்கள் கெடுக்க வந்ததாக நான் நினைக்கவில்லை. ஆனால் அதன் உறுதியைச் சோதிப்பதற்காக வந்ததாக எண்ணுகின்றேன். நான் பாசத்தையும் வெல்ல வேண்டும் என்றுதானே நீங்கள் என் அன்னையாக வந்தீர்கள்? ஆகவே தங்களை வணங்குகின்றேன். நான் தவத்தில் வெற்றி பெற வாழ்த்துங்கள்.''

அத்தேவமகள் நெகிழ்ந்து போனாள். எவ்வளவு இனிமையாகவும், பண்புடனும் அவன் பேசி விட்டான்.

''துருவா! உன்னை யாராலும் வெல்ல முடியாது. அது மட்டுமல்ல. உலகில் பெரியவர்கள் யாரும் செய்திராத சாதனை நீ செய்யப் போகின்றாய். சத்தியத்தைக் கைக் கொள்ளுபவர்கள் உன்னைப் பின்பற்றுவார்கள் சத்தியத் தைக் கைக் கொண்டு போராடியவர்களில் நீ தான் முதல் வன். எல்லா வெற்றிகளையும் பெறுவாயாக.''

அத்தேவ மகள் வாழ்த்திவிட்டு மறைந்தாள். துருவன் தன் தவத்தைத் தொடங்கினான்.

ஃ ஃ ஃ

தன் முயற்சியால் தோல்வியடைந்தான் இந்திரன். எல்லா தேவர்களையும் அழைத்தான். அடுத்த முயற்சி பற்றி ஆலோசித்தான். கடைசியாக எல்லாருமாகச் சேர்ந்து நாராயணனையே பார்ப்பது என்று தீர்மானித்தார் கள். ஆகவே அனைவரும் வைகுண்டம் கிளம்பினார்கள். அங்கே மகாவிஷ்ணுவாகிய நாராயணன் இருந்தார். அவரி டம் சரணடைந்தார்கள்.

மகாவிஷ்ணு வந்தவர்களிடம், ''எதற்காக வந்திருக்கின் றீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு இந்திரன் பதில் சொன்னான்.

''தேவதேவா! ஜகத்திற்கெல்லாம் காரணமானவனே! துருவனின் தவம் வலிமை பெற்று விளங்குகிறது. அதன் சக்தியால் நாங்கள் சகிக்கப்படுகின்றோம். அவன் தவம் முற்றுப் பெறுமானால் எங்கள் பதவிகள் என்னாகும் என்று சொல்ல முடியாது. ஆகவே இதற்கொரு வழி கண்டு பிடிக்க எண்ணி உங்களைச் சரணடைந்துள்ளோம். தாங்கள் ஏதாவது செய்து அவன் தவத்தை நிறுத்துங்கள். எங்கள் பதவிகளுக்கு ஆபத்தில்லாமல் செய்யுங்கள்.''

இந்திரன் அழுத குரலில் சொன்னான். பாவம் அவனுக்குப் பதவி போய்விடுமே என்ற கவலை. மற்ற தேவர்களும் அவனை ஆமோதித்துக் குரல் எழுப்பினார்கள்.

நாராயணன் தமக்குள் சிரித்துக் கொண்டார். இந்தப் பதவி மீது இந்திரனுக்கும் மற்ற தேவர்களுக்கும் எவ்வளவு ஆசை இருக்கின்றது என்று அவர் எண்ணிப் பார்த்தார். இந்திரனின் வருத்தத்தைப் போக்க எண்ணினார்.

''இந்திரனே! சிறுவன் துருவன் தவம் பற்றி யாம் அறிவோம். அவன் தவத்தின் நோக்கமும் யாம் அறிவோம். உலகில் சாதாரணமாக யாராலும் செய்ய முடியாத ஒரு காரியத்தைத் துருவன் செய்து கொண்டிருக்கின்றான். அவனுக்கு இந்திர பதவி தேவையில்லை. சூரியன், சந்திரன் போன்ற மற்ற அதிகாரங்களையும் அவன் விரும்பவில்லை. அவைகளை எதிர்பார்த்து அவன் தவம் செய்ய ஆரம்பித்திருந்தால் எப்போதோ அவைகளை நாம் அவனுக்குக் கொடுத்திருப்போம். காரணம் அவனுடைய அந்த வயதிலும் அவன் செய்த தவத்தின் தன்மை அது. ஆனால் அவன் விரும்புவது எது என்று நாம் அறிவோம். அவனுக்கு அதைக் கொடுக்க வேண்டிய நேரமும் வந்தது. நீங்கள் இனி கவலையை விடுங்கள். அவரவர் இருப்பிடங்களுக்குச் செல்லுங்கள். உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை. இனி நடக்க வேண்டியவைகளை நாமே கவனிப்போம்.''

நாராயணனின் வாக்குறுதியை ஏற்றுக்கொண்ட தேவர்கள் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றனர். இனி துருவனுக்கு அருள் தரவேண்டிய தருணம் வந்தது எனக் கூறிக் கொண்ட நாராயணன் மதுவனத்திற்கு புறப்பட்டார்.

மதுவனத்தில் துருவனின் தவம் உச்சநிலையை அடைந்திருந்தது. வெறும் காற்றை மட்டும் உண்டு வந்தவன், அதையும் நிறுத்தி இருந்தான். அவன் உடம்பிலிருந்த உஷ்

ணமே அமிர்தமாக மாறி அவனுக்குச் சக்தியைத் தந்து கொண்டிருந்தது.

"ஓம் நாராயணாய நமஹ, ஓம் நாராயணாய நமஹ."

அம்மந்திரம் எங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

துருவனைச் சுற்றி மயில்களும், மான்களும் நின்று கொண்டிருந்தன. எதையும் கவனிக்காமல் மனதில் நாராயணனையே தியானம் செய்து கொண்டிருந்தான் துருவன்.

நாராயணன் துருவன் முன்பு வந்து நின்றார்.

''துருவா! கண்ணை விழித்துப் பார்.''

நாராயணன் மெதுவாக அவன் காதுகளில் பேசினார்.

துருவன் கண்ணை விழித்துப் பார்க்கவில்லை.

''துருவா! நான் தான் நாராயணன் வந்திருக்கின்றேன். கண்ணை விழித்துப் பார்'' இனிமையான அமிர்தமயமான அவ்வோசை துருவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. கண்களை விழித்துப் பார்த்தான்.

அவனால் நம்ப முடியவில்லை.

எந்தப் பகவானைக் காண அவன் இத்தனை நாட்கள் தவம் செய்தானோ, அதே நாராயணன் தன் முன்னால் வந்து நின்றார்.

நான்கு திருத் தோள்கள்; கைகளில் சங்கு சக்கரங்கள்; பட்டுப் பீதாம்பரத்தைச் சுற்றியுள்ள மேனி.

தன் இருகண்களையும் திறந்து ஒரு முறை நன்றாகப் பார்த்த துருவன் உடனே தன் கண்களை மூடிக் கொண்டான்.

''துருவா! ஏன் கண்களை மூடிக் கொண்டாய்?''

நாராயணன் கேட்டார்.

"பிரபுவே! தங்கள் அழகுத் தோற்றத்தை என் கண்கள் வழியாக இதயக் கமலத்தில் கொண்டு வந்து நிறுத்தியுள்ளேன். கண்களைத் திறந்தால் அவ்வுருவம், கண்கள் வழியாக வெளியே சென்று விட்டால் என்ன செய்வது? ஆகவே அவ்வுருவம் வெளியேறி விடக் கூடாது என்பதற்காகக் கண்களை மூடிக் கொண்டேன்."

"துருவா! உன் தவம் சிறந்தது என்பதைக் காட்டத் தான் இத்தனை நாட்கள் பொறுத்தேன். உனக்கு என்ன வரம் வேண்டுமானாலும் கேள். தருகின்றேன்."

துருவன் மறுபடியும் கண்களைத் திறந்தான்.

சங்கு, சக்கரம், கதை, கட்கம், சாரங்கம் முதலிய ஐந்து ஆயுதங்களோடும், கிரீசு, வனமாலிகா கௌஸ்துப பீதாம்பர அலங்காரத்தோடும் எழுந்தருளிய நாராயணனைக் கண்டான். மண்ணில் விழுந்து அவர் திருவடிகளைப் பற்றிக் கொண்டான்.

"பிரபுவே! உங்களைத் துதிக்க வேண்டும் என்று ஆசைப் படுகின்றேன். உங்களைக் கண்ட கண்களாலே வேறு ஒன்றையும் காண விரும்பவில்லை. உங்களைத் துதிக்கும் சக்தி எனக்கு இல்லை. உங்கள் மகிமையைச் சொல்லுகின்ற சக்தி இப்பாலகனுக்கு ஏது? ஆகவே உங்களைத் துதித்துப் போற்றும் படியான சக்தியைக் கொடுங்கள். அதுபோதும்."

நாராயணன் மகிழ்ந்து போனார், யார் யார் எதையெதையோ கேட்டிருக்கிறார்கள். ஆனால் துருவன் போற்றிப் புகழும் சக்தியைக் கேட்கின்றானே!

அவர் சகல வித்யாமயமான தனது சங்கினால் துருவனின் கன்னங்களில் தடவினார்.

துருவனுக்கு அதனால் ஞானோதயம் பிறந்தது.

பலவாறு நாராயணனைப் போற்றிப் புகழ்ந்தான் கடைசியில் சொன்னான்.

''தேவ தேவனே! எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கின்ற நீங்கள் எல்லாம் அறிவீர்கள். உங்களுக்கு அடியேனது விருப்பம் தெரிந்தே இருக்கும். இருப்பினும் நீங்களே கூறியதால் விண்ணப்பம் செய்கின்றேன். இந்திரன் உங்கள் அருளால் எல்லா உலகங்களையும் ஆளுகின்றான். சுருசியானவள் தனது வயிற்றில் நான் பிறக்கவில்லை என்பதால் என்னை அவமானப்படுத்தினாள். நான் அந்த ஏளனத்தை மாற்றி அந்த அரசபதவியை விரும்பலாம். ஆனால் அதை நான் விரும்பவில்லை. அழியும் அப்பதவி எனக்கு வேண்டாம். என்றும் அழியாத உயர்ந்த பதவி வேண்டும். அது எனக்காக அல்ல. என்னைப் போன்று தவம் செய்தால் யார் வேண்டுமானாலும் அதைப் பெற முடியும் என்பதைக் காட்டத்தான். நாராயணா! இதற்கு அருள் புரிய வேண்டுகின்றேன்.''

துருவன் உருக்கமாகக் கேட்டான்.

நாராயணன் துருவனின் சிரசில் தன் திருக்கையை வைத்தார்.

''பாலனே! நீ விரும்பிய பதவியை அடையக் கடவாய். நீ அளவிலா பக்தியால் என்னைப் பூசித்தாய். உனக்கு எல்லாரையும் போல் ஒரு மேன்மை தர விரும்பவில்லை. நீ எனது அருளினால், மூன்று உலகங்களுக்கும் மேன்மையானதாய், சகல கிரக, நட்சத்திரங்களுக்கும் ஆதாரமாய் விளங்கப் போகின்றாய். நட்சத்திர மண்டலங்களுக்கும், சப்தரிஷி மண்டலத்திற்கும் நடு நாயகமாய் விளங்கப் போகின்றாய். எல்லாம் எப்போதும் நிலை பெற்றிருக்க முடியாது. ஆனால் நீயோ என்றைக்கும் நிலை பெற்று இருக்கும் நட்சத்திரமாய் விளங்குவாய். இனிமேல் அந்த நட்சத்திரம்

''துருவ நட்சத்திரம்'' என முனிவர்களாலும் மற்றவர்களாலும் போற்றப் படும்.''

துருவன் நாராயணனின் அன்பினாலும் அருளினாலும் மகிழ்ந்தான்.

தன் தவம் வெற்றியடைந்ததை எண்ணிப் புளகாங்கிதம் கொண்டான். எனினும் உலகில் உள்ளோர் 'துருவ நட்சத்திரம்' என்று கூறும் போது அவனுடைய தவத்தின் மேன்மையையும் எண்ணுகின்றனர்.

பதவியைப்பெற்ற குழந்தை துருவனாகும்.

பாசத்தை வென்ற குழந்தை

காவிரி பாய்ந்து வளப்படுத்தும்நாடு சோழ நாடாகும். அந்நாட்டில் ஓடும் சிற்றாறுகளில் மண்ணியாறு என்பதும் ஒன்றாகும். அம் மண்ணியாற்றில் கரையில் அனேக சிற்றூர் கள் இருந்தன. அவைகளில் ஒன்று சேய்ஞலூர்.

ஒரு காலத்தில் சூரபதுமன் என்ற அசுரன் இருந்தான். அவன் முனிவர்களையும் மன்னவர்களையும் துன்புறுத்தினான். அவனைக் கொல்வதற்கு முருகன் அவதாரம் செய்தான். சூரபதுமனையும் அவனது கூட்டத்தையும் முருகன் கொன்றான். அந்த முருகனால் விரும்பப்பட்ட ஊர் சேய்ஞலூர் ஆகும்.

அழகான அச்சிற்றூரில் வேதியர்கள் அதிகம் பேர் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் சைவ நெறியினைப் பின் பற்றினார்கள். எப்போதும் வேதங்களை ஓதிக் கொண்டிருப் பார்கள். பல சமயங்களில் யாகங்களையும் செய்வார்கள்.

அச்சிற்றூர் ஒரு காலத்தில் அநபாயச் சோழன் என்ற அரசனின் தலைநகரங்களில் ஒன்றாக இருந்து வந்தது.

சேய்ஞலூரில் எச்சதத்தன் என்ற பெயரில் அந்தணன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் அந்தணன் குலத்திலே பிறந்தவனே தவிர அந்தண ஒழுக்கம் இல்லாதவன். தீய குணங்கள் பலவற்றைக் கொண்டிருந்தான். ஆனால் அதிசயம்! அவனுக்கு நற்குணங்கள் நிறைந்த மனைவி வாய்த்திருந்தாள். நல்ல இனிய குணங்கள் நிரம்பப் பெற்ற வள். விருந்தினர்களை ஆதரிக்கும் பண்பு அவளுக்கு நிறைந் திருந்தது.

இவ்விருவரின் இல்லற வாழ்வின் பயனாக மகன் ஒருவன் தோன்றினான். அவன் பெயர் விசாரசர்மன் என்பதாகும்.

விசாரசர்மன் இறைவனின் திரு அருளால், தோன்றிய வனாகும். அவன் அக்குலத்தின் பெருமையை நிலைநாட்டத் தோன்றினான்.

அவனுக்கு ஐந்து வயது நிரம்பியது.

விசாரசர்மனுக்கு முற்பிறவியில் பெற்ற ஞானம் பலனாக அறிவு முதிரத்தொடங்கியது. ஓதாமலே சிவஞானம் பெற்றான். எல்லா ஆகமங்களின் நுணுக்கமான விஷயங்கள் அவனுக்குப் புரிந்தது.

மண்ணியாற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓட ஆரம்பித்தது.

குழந்தைகளுக்கு ஆற்றில் தண்ணீர் வருவதைப் பார்ப்பதில் தனி ஆனந்தம். ஆகவே பலர் ஆற்றில் வரும் வெள்ளத்தைக் காணப் புறப்பட்டார்கள். விசாரசர்மனும் கிளம்பினான்.

வெள்ளத்தைக் கண்ட சில குழந்தைகள் ஆற்றின் ஓரத்தில் மணலைக் குவித்துவைத்து விளையாட ஆரம்பித்தார்கள். மணலைக் குவிப்பதும், உடனே சில குழந்தைகள் அம்மணல் குவியல்களின் மீது தண்ணீரை வாரி இறைப்பதுமாக இருந்தார்கள்.

திடீரென்று விசாரசர்மன் தண்ணீரில் குதித்தான். எல்லோரும் பயந்து விட்டார்கள். ஆனால் விசாரசர்மன் தண்ணீரில் மேலே மிதந்து வேடிக்கை காட்டினான். குழந்தைகளுக்கு ஆனந்தமாக இருந்தன.

கரையேறி வந்த விசாரசர்மனை ஆச்சரியத்துடன் சிலர் பார்த்தனர்.

''டேய்! எப்படிடா தண்ணீருக்குள் குதிச்சே? உனக்கு நீந்தத் தெரியுமா?''

ஆச்சரியமாகக் கேட்ட ஒரு பையனைப் பார்த்துச் சிரித்தான் விசாரசர்மன்.

எல்லோரும் அங்கிருந்து கிளம்பினார்கள்.

வழியில் அவர்கள் இன்பமாகப் பேசிக் கொண்டே சென்றார்கள். வழியில் இடையன் குப்பன் பசுக்களை ஓட்டிக் கொண்டு செல்வதைப் பார்த்தார்கள். அழகான பசுக்களைப் பார்த்த விசாரசர்மன் அவைகளைப் பார்த்துக் கும்பிட்டான்.

விசாரசர்மனின் இச் செய்கை மற்றவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

''என்னப்பா விசாரசர்மா! போயும் போயும் இந்தப் பசுவைக் கும்பிடுகிறாயே? வீட்டில்பூசை செய்வதில்லையா?''

கேள்வி கேட்டவனைப் பார்த்தான் விசாரசர்மன். அவனிடம் பேச வேண்டும் என்ற ஆசை பிறந்தது. நம்பி என்ற பெயரை உடைய அச்சிறுவனும் விசாரசர்மன் பேசப் போவதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

''நம்பி! நல்ல கேள்வியைக் கேட்டாய். நானும் இதைப் பற்றி உங்களுக்கு பல நாட்களாகச் சொல்ல வேண்டும் என்றிருந்தேன். இன்று தான் சமயம் கிடைத்தது.''

நம்பியும் அவனுடன் இருந்த மற்ற சிறுவர்களும் விசார சர்மனைச் சுற்றி நின்றார்கள்.

''நம்பி! நீ பூசை செய்வதற்கு முன்னால் திருநீறு பூசிக் கொள்வாய் அல்லவா?''

விசாரசர்மன் இதைக் கேட்டவுடன் நம்பி தலையைக் குனிந்து கொண்டான். அவன் தந்தை எவ்வளவோ சொல்லி வந்தும் அவன் திருநீறு பூசிக் கொள்வதில்லை.

அவன் ''இல்லை'' என்பது போலத் தலையை ஆட்டினான்.

எல்லாச் சிறுவர்களும் சிரித்தனர்.

விசாரசர்மன் சிரிக்கவில்லை.

''போகட்டும்! நாளையிலேயிருந்து திருநீறு பூசிக்கொள். அதிருக்கட்டும். அந்தத் திருநீற்றைத் தருவது பசு என்பது உனக்குத் தெரியாதா?''

பசுஞ்சாணத்தைத் திருநீராக்கும் வித்தையை மற்றச் சிறுவர்கள் பார்த்திருந்தார்கள். அவர்கள் உற்சாகமாக ''எங்களுக்குத் தெரியும்'' என்று ஆனந்தமாகக் கூச்சலிட்டார்கள்.

''நம்பி! உன் தந்தை அபிஷேகம் செய்வார் அல்லவா?''

''ஆம், நான் பார்த்திருக்கிறேன். பால், தயிர், போன்றவைகளால் அபிஷேகம் செய்வார்.''

''அவைகளை எல்லாம் தருவது எது தெரியுமா? இதோ இந்தப் பசுக்கள்தானே? சிவபூசைக்குரிய விசேஷமான பொருட்களைத் தருவது இப்பசுக்கள். ஆகவே, பசுக்களை வணங்கினால், சிவனை வணங்குவதற்குச் சமானம் ஆகும். தெரிந்து கொள்ளுங்கள்.''

விசாரசர்மன் பேசியதை மகிழ்ச்சியுடன் கேட்டார்கள் அவர்கள்.

அங்கே கொஞ்ச நேரம் விளையாடினார்கள். பிறகு வீட்டிற்குத் திரும்பினார்கள்.

வழியில் காடன் என்ற ஆதித்திராட குலத்தைச் சேர்ந்த ஒருவன் வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்த சில சிறுவர்கள் அவன் வரும் வழியை விட்டு விலகி நின்றார்கள்.

இதைப் பார்த்தான் விசார சர்மன். அவனுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. அவனைத் தீண்டத்தகாதவனாக ஆக்கியிருக்கின்ற இந்தச் சமூகச் சட்டதிட்டங்களைப் பற்றி எண்ணிப் பார்த்தான்.

மனித பிறப்பில் யாரும் தாழ்ந்தவர்கள் இல்லை. ஆனால் மனிதர்கள் ஏற்படுத்திக் கொண்ட சட்ட திட்டங்கள், மனிதர்களை இழிவு படுத்துகின்றதே!

''நம்பி! இப்போது சென்றானே காடன்! அவனைக் கண்டு ஏன் ஒதுங்கினீர்கள்?''

நம்பி உடனே பதில் சொன்னான்.

''அவன் தீண்டத் தகாதவன்.''

''அப்படி என்றால்?''

''நாம் எல்லாரும் அவனைத் தொடக்கூடாது.''

''தொட்டால் என்ன?''

''தொட்டால் தீட்டு.''

''தீட்டு என்றால் தெரியாதா? தீட்டு என்றால் தீட்டு தான்.''

நம்பியின் இப்பதிலைக் கேட்ட அனைவரும் சிரித்தார்கள்.

விசாரசர்மன் சிரிக்கவில்லை.

''நீங்கள் எல்லாரும் சிரிப்பதற்கான விஷயம் இது இல்லை. பிறப்பில் யாரும் தாழ்ந்தவர்கள் இல்லை. அப்படி இருந்தால், ஆதித் திராவிடர் மரபில் தோன்றிய நந்தனார் சிதம்பரத்தில் இறைவனால் ஆட்கொள்ளப்படுவாரா?''

யாரும் ஒன்றும் பேசவில்லை. அவர்களுக்கு அவ்விஷயம் பற்றித் தெளிவாகத் தெரியவில்லை.

''நம்பி! தீண்டத் தகாதவர்கள் என்று இறைவன் யாரையும் படைக்கவில்லை. அப்பிரிவுகளை ஏற்படுத்திக் கொண்டவர்கள் நாம்தாம்.''

''நாம் என்றால் யார்?''

''எல்லாம் நம்மவர்கள். உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் தான்.''

''அப்படி என்றால் இவைகள் எல்லாம் தப்பா?''

''சந்தேகம் வேண்டியதில்லை.''

''அப்படியானால் காடன் ஏன் பூநூல் போட்டுக் கொள்ளவில்லை?''

விசாரசருமன் சிரித்தான். இந்தக் கேள்விக்கு விடையளித்தால் அவர்கள் புரிந்து கொள்ளமாட்டார்கள் என்பது அவனுக்குத் தெரியும்.

''நம்பி! உன் கேள்வி சிறந்த கேள்வி. ஆனால் காடன் பூநூல் போட வேண்டியதில்லை.''

''ஏன்?''

''அதை எதற்காகப் போட்டுக் கொள்ளுகின்றீர்கள்?''

அங்கிருந்த யாரும் பதில் சொல்லவில்லை.

''நாம் உயர்ந்தவர்கள் என்பதைக் காட்டப் பூநூல் போடுகிறோம். அப்படித்தானே?''

விசாரசருமன் கேட்டான். புரிந்தவர்கள்போல் அவர்கள் தலையாட்டினார்கள்.

''அதுதான் இல்லை, சாஸ்திரம் அப்படிச் சொல்லவில்லை. பூநூல் போட்டுக் கொள்பவன் இறைவனைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அதற்குத் தான் அது போடப்படுகிறது.''

''அப்படியானால் காடனுக்குத் தேவையில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? அவனுக்குக் கடவுள் வேண்டாமா?''

நம்பி சற்று புத்திசாலித்தனமாகக் கேட்டான். விசாரசருமன் கலங்கவில்லை.

''அப்பா நம்பி! மற்றவர்களின் தேவையை நிறை வேற்றுபவன் எல்லாரை விடவும் மேலானவன். காடன் அப்படிப்பட்டவன். ஆகவே, அவன் நம்மை விடவும் மேலானவன்.''

''சரி சரி, இனிமேல் அவனை நாங்கள் திட்டமாட்டோம். வா எல்லாரும் வீட்டுக்குப் போவோம். ரொம்ப நேரமாச்சு. தேடுவார்கள்.''

நம்பி சொல்லிக் கொண்டே ஓடினான்.

விசாரசர்மன் பேச்சு அவர்களுக்குப் புரியவில்லை. அதைப் பற்றியும் அவர்கள் கவலைப்படவும் இல்லை. காடனைத் திட்டக் கூடாது என்று தெரிந்து கொண்டார்கள். அதுபோதும்.

விசாரசருமன் வீட்டிற்கு வந்தான். அவன் தந்தை அவனைத் திட்ட ஆரம்பித்தார். விசாரசர்மன் எதையும் பேசவில்லை. அவனுக்குரிய வேலைகளைக் கவனித்துக் கொண் டிருந்தான்.

சாயங்கால நேரம் முடிந்து இருட்ட ஆரம்பித்தது.

விசாரசருமன் முகம், கைகால்களைச் சுத்தி செய்து விட்டு, பூசை செய்ய உட்கார்ந்தான்.

''சிவாயநம, சிவாயநம,'' என்று அவன் இலேசாகப் பாட ஆரம்பித்தான். வில்வத்தழைகளால் சிவனை அர்ச்சிக்க ஆரம்பித்தான்.

விசாரசருமனின் தந்தை எச்சதத்தனுக்கு எரிச்சலாக இருந்தது.

வீட்டில் ஆயிரம் கவலைகள். நாளைக்குச் சாப்பாட்டிற்கு என்ன செய்ய வேண்டும் என்ற சிந்தனை அவரை வாட்டி எடுத்தது. எப்படியும் வந்து சேருகிறது. கவலை வேண்டாம்; என்று அவன் மனைவி பவித்திரை சொன்னாலும் எச்சதத்தன் ஏற்றுக் கொள்வதில்லை.

விசாரசருமனை எரிச்சலோடு பார்த்தார்.

''இந்தக் குழந்தை இருந்து என்ன பிரயோசனம். ஊர்ப்பிள்ளைகள் எப்படியோ எதையோ செய்து சம்பாதித்துக் கொண்டு வருகிறது. இவன் என்ன கல்லு மாதிரி உட்கார்ந்து கொண்டு தண்டச் சோறு தின்கிறான்.''

எரிச்சலில் பேசினார் அவர்.

விசாரசருமன் இதைக் கேட்டான். இருந்தும் கேட்காதவன் போல் இருந்து தன்னுடைய பூசையில் மூழ்கினான்.

பவித்திரைக்கு வருத்தமாக இருந்தது.

ஐந்து வயதுதான் ஆகிறது. அதற்குள் எப்படிச் சம்பாதிப்பான்? என்ன செய்வான்? எங்கே போவான்?

அவளுக்குத் தன் கணவனிடம் இதைச் சொல்ல பயம் உண்டு. ஆகவே அவள் திட்டும் போது, மகனை அன்போடு பார்த்துக் கொள்வாள். அதைத்தான் அவளால் செய்ய முடியும்.

மறுநாள் விடிந்தது.

ஆற்றிற்குப் புறப்பட்டான் விசாரசருமன். அவனுடன் நம்பியும் மற்றவர்களும் புறப்பட்டனர். வழியில் கண்டவைகளைப் பற்றிச் சுவாரசியமாகப் பேசிக் கொண்டே சென்றார்கள்.

திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்று அவர்கள் செல்லும் வழியில் இருந்தது. நாலைந்து அந்தணச் சிறுவர்கள் இருந்தார்கள். இவ்வளவு சீக்கிரத்தில் திண்ணைப் பள்ளிக் கூடம் ஆரம்பித்து விட்டது என்று உணர்ந்தார்கள் அவர் கள்.

நாலைந்து பையன்களில் இருவர் இன்னும் தூக்கம் கலையாத நிலையில் இருந்தனர். ஆசிரியர் அவர்களைக் கொஞ்சம் கூட கவனிக்கவில்லை. காரணம் அவரும் தூங்கிக் கொண்டிருந்தார்.

விசாரசருமன் திண்ணையின் பக்கத்தில் சென்று நின்றான். நம்பியும் கூடவே சென்றான். இருவரும் வந்து நிற்பதை ஆசிரியர் கவனிக்கவில்லை. தூங்காமல் இருந்த இரண்டு பேர், இவர்களை ஆச்சரியத்தோடு பார்த்தனர். புதிதாக அப்பள்ளியில் சேர வந்தவர்களாக இருக்குமோ என்று அவர்கள் நினைத்தார்களோ என்னவோ?

திடீரென்று ஒருவன் சிரித்தான். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. நம்பி தூங்கிக் கொண்டிருந்த ஆசிரி யரின் அருகில் சென்று அழகு காட்டிக் கொண்டிருந்தான்.

நம்பியை அதட்டினான் விசாரசருமன்.

திடீரென்று எழுந்த சப்தத்தால் விழித்துக் கொண் டார் ஆசிரியர். அவருக்கு அங்கே என்ன நடந்தது என்று தெரியவில்லை. விசாரசருமன் அங்கு வந்து நிற்பதைக் கண்டதும் அவர் சற்று நடுங்கினார்.

விசாரசருமனைப் பற்றி அவர் நிறையக் கேள்விப்பட் டிருந்தார்.

இவ்வளவு சின்ன வயதிலே பெரிய பெரிய விஷயங் களைத் தெரிந்து வைத்திருந்தவன் அவன் என்பதை ஆசிரியர் அறிவார்.

நல்ல பிள்ளைகள் தன்னிடம் மாணவனாக வந்தால் ஆசிரியர்கள் மனம் மகிழ்வார்கள். ஆனால் விசாரசருமன் போன்றவர்களைக் கண்டு இந்த ஆசிரியர் பதறுகிறார்.

''சுவாமி! இந்தப் பையன்களில் இரண்டுபேர் தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். நீங்களும் தூங்கிக் கொண்டிருந்தீர்கள். பக்கத்தில் வந்து பார்க்க எண்ணினேன். தவறாக இருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள்.''

விசாரசருமன் இப்படிப் பேசினான். என்ன பதிலை உடனே சொல்வது என்று ஆசிரியருக்குத் தெரியவில்லை.

''ஹி! ஹி! அதில்லை அப்பா! சும்மா ஒரு அசதி. நேத்து ராத்திரி ரொம்ப நேரம் சிவபூசை பண்ணினேன். தூக்கம் இல்லே. அதுதான்...''

சமாளித்தார் ஆசிரியர்.

விசாரசருமன் சிரித்துக் கொண்டே அந்த இடத்தை விட்டு அகன்றான். நம்பியும் கூடவே போனான்.

அவர்கள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தார் ஆசிரியர்.

''உம்! இன்னும் இரண்டு வருஷம் போனா விசாரசருமன் திண்ணைக்கு வந்துடுவான். எப்படித்தான் சமாளிக்கப் போறேனோ?''

தூங்கிய மாணவர்கள் விழித்துக் கொண்டனர்.

மண்ணியாற்றில் குளித்து விட்டு வீடு திரும்பினான் விசாரசருமன்.

* * *

வருடங்கள் இரண்டு உருண்டன.

விசாரசருமனுக்கு வயது ஏழு ஆகியது.

அவனுடைய பெற்றோர்கள் அவனுக்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய ஆரம்பித்தார்கள். உபநயனம் செய்விக்கப்பட்டது. வேத பாடசாலைக்கு அனுப்பி வைத்தார்கள். வேதம் படிக்க விசாரசருமன் திண்ணைப் பள்ளிக் கூடம் சென்றான்.

அங்கே முன்பே இருந்த ஆசியரியர் தான் இருந்தார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது அவர் நினைவுக்கு வந்தது. எவ்வாறு சமாளிப்போம் என்று அவர் எண்ணலானார்.

''ஓம்! சிவாய நமஹ''

முதல் மந்திரத்தை ஆரம்பித்தான் விசார சருமன்.

ஆசிரியர் பயந்தது போல்எதுவும் நடக்கவில்லை. விசார சருமன் நல்ல மாணவனாகத் திகழ்ந்தான். ஆசிரியர் கற்றுக் கொடுப்பதைக் கவனமாகக் கேட்டான். சந்தேகங்களைக் கேட்பதில்லை, காரணம் சந்தேகம் அவனுக்குத் தோன்றுவதில்லை.

இப்போதெல்லாம் ஆசிரியருக்கு விசார சருமனை மிகவும் பிடித்தது. தான் செய்ய வேண்டிய வேலைகளில் பாதியை அவனே செய்தான்.

எல்லா சீடர்களும் விசார சர்மன் மீது பிரியமாக இருந்தார்கள். ஓதாது உணர்ந்தவனாக இருந்தான் விசார சருமன்.

வேதங்களைக் கற்றுச் சிறந்தவனாகத் திகழ்ந்தான் அவன்.

ஒருநாள் விசார சருமன் தன் நண்பர்களுடன் புறப்பட்டு தெருவழியே சென்று கொண்டிருந்தான்.

அதே நேரம் அந்த ஊரில் உள்ள பசுக்களும் அந்தத் தெருவழியே வந்து கொண்டிருந்தன. அழகான அப்பசுக்

கள் அவ்வழியே போவதை மிக்க மகிழ்ச்சியுடன் சிறுவர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பசுக்களோடு சென்று கொண்டிருந்த கன்றுகள் துள்ளிக் குதித்தவாறே சென்று கொண்டிருந்தன.

அவைகளுக்குத் தான் எத்தனை மகிழ்ச்சி!

பாலைக் கறப்பவர்கள் போனால் போகட்டும் என்று கொஞ்சம் கன்றுக்கும் விட்டு வைத்தனர். ஆகவே அவை கள் தாய்ப் பசுவின் மடியை முட்டி முட்டிப் பாலைச் சாப்பிட் டன. தெருவழியே போய்க் கொண்டிருக்கும் போதுதான் அவைகளுக்கு சந்தர்ப்பம் அதிகம் கிடைத்தது. ஆகவே தங்கள் தாய்ப் பசுக்களின் பின்னாலே பாலைக் குடித்துக் கொண்டே கன்றுகள் சென்றன.

தாய்ப் பசுக்களும் தங்கள் கன்றுகளை நக்கிக் கொண்டே சென்றன. பாசத்தைச் சொரியும் காட்சி இது. பரவசத் துடன் பார்த்தான் விசார சருமன்.

பசுக்களைஓட்டிக் கொண்டு வந்தான் இடையன் மருதை. அவன் கையில் நீண்ட குச்சி ஒன்றிருந்தது. ஆனால் அதை அவன் பயன்படுத்தாமல் கையிலே வைத்திருந்தான்.

திடீரென்று அவன் குச்சியை எடுத்தான். நடக்க முடியாமல் நடந்து வந்து கொண்டிருந்த கன்றின் மீது ஓங்கி அடித்தான்.

அக் கன்று துடித்தது. புதிதாகப் பிறந்த அந்தக் கன்றினால் வேகமாக நடக்க முடியவில்லை. பாவம் அது என்ன செய்யும்?

ஆனால் அதன் நிலையை மருதை எண்ணிப்பார்க்கவில்லை. அவன் அவசரம் அவனுக்கு. நெடுந் தூரம் போக வேண்டி யிருந்தது. நேரமும் ஆகி விட்டது. ஆத்திரம் வந்தது. அதைப் பசுங் கன்றின் மீது காட்டினான் அவன்.

விசார சருமன் இதைக் கண்டான். அடிப்பட்ட கன்று துடித்திருக்குமோ என்னவோ ஆனால் விசார சருமன் துடித்தான். ஒரு பாவமும் இல்லாத கன்றுக்கு இத்தனை கொடும் தண்டனையா?

அத்துடன் அக் காட்சி முடிந்து விடவில்லை.

தன் கன்று அடிபட்டதை தாய்ப்பசு பார்த்தது. அதற்குக் கோபம் பொங்கியது. ஆகவே, தன் கூரிய கொம்பினால் மருதை மீது முட்டியது.

மருதை பொறுமை இழந்தான். ஏற்கனவே அவன் கோபம் கொண்டிருந்தான். போதாக் குறைக்கு பசுவும் முட்டியது. தன் கையிலுள்ள குச்சியினால் விளாச ஆரம்பித்தான்.

பசுவின் உடலில் திட்டு திட்டாக அடியின் தழும்பு படிந்து விட்டது. எதிர்க்க முடியாமல் தாய்ப்பசு பின்னடைந்தது.

''அம்மா! அம்மா!......''

கன்றும் பசுவும் கதறித் துடித்தன.

விசாரசருமனால் பொறுமையோடு இருக்கமுடியவில்லை. சரேலென்று அங்கிருந்து ஓடி மருதையைத் தடுத்தான். அவன் கையில் இருந்த குச்சியைப் பிடித்து இழுத்தான்.

எதிர் பாராவிதமாகத் தன் கையிலுள்ள குச்சி பறிக்கப் பட்டதும் மருதை ஆவேசத்துடன் இழுத்தவனைப்பார்த்தான். விசாரசருமன் தான்குச்சியைப் பறித்தவன்என்பதைக் கண்டதும் யாதொன்றும் அவனால் பேச முடியவில்லை.

அந்தணச் சிறுவர்களில் விசார சருமனை எல்லாருக்கும் நன்றாகத் தெரியும்.

''அப்பா மருதை! இங்கே வா. என்ன கொடுமையான காரியஞ் செய்தாயப்பா?''

விசார சருமன் கொஞ்சங் கூடக் கோபம் இல்லாமல் கேட்டான்.

மருதையால் பதில் பேச முடியவில்லை.

''மருதை! வாயில்லா ஜீவனாகிய பசுவை அடிக்கலாகுமா? பசுக்கள் எந்தவிதமான துன்பம் செய்யாத பிராணிகள். நாம் அருந்துவதற்கு நல்ல பாலைப் பசுக்கள் தானே கொடுக்கின்றன? அதை அடித்தால் அவைகள் பாலை நிறையக் கொடுக்குமா?''

மருதை பதில் பேசாமல் நின்றான்.

''அதுமட்டுமல்ல மருதை, நல்ல தீர்த்தங்கள் எல்லாம் பசுக்களிடம் நிறைந்துள்ளன. சிவபெருமானின் திருமுடிக்கு அபிஷேகம் செய்யும் பஞ்சகவ்யம் பசுவல்லவா தருகின்றது? சிவபெருமான் பூசிக் கொண்டிருக்கின்ற திருநீற்றையும் பசுவின் கோமயத்திலிருந்து தானே பெறுகிறோம்? அப்படிப் பட்ட பசுவை வதைக்கலாகுமா?''

மருதை பெருங் குற்றம் செய்ததை உணர்ந்தான்.

''மருதை இன்னொன்றையும் சொல்லுகின்றேன். நம்மூரில் வாகனம் புறப்படுவதைப் பார்த்திருக்கின்றாயா?''

மருதை ஏதும் தெரிந்து கொள்ளாமல் விழித்தான். அவன் என்றும் அதைச் சரியாகப் பார்த்திருக்கவில்லை.

''மருதை நீ பார்க்கவில்லை என்று நினைக்கின்றேன். இருக்கட்டும். சிவபெருமானும் உமாதேவியும் அமர்ந்து உலா வரும் வாகனம் எது தெரியுமா? அது தான் ரிஷபம். அது பசுவின் குலமல்லவா? அதைத் துன்பப் படுத்தலாமா?''

விசார சருமனின் பேச்சு கனிவாக இருந்தது. நெஞ்சை உருக்குவனவாக இருந்தது. மருதையின் கண்களிலிருந்து கண்ணீர் நிரம்பி வழிந்தது. விசாரசருமன் இதைக் கண்டான்.

''இருக்கட்டும் மருதை! நீ அழவேண்டாம். ஏதோ தெரியாமல் துன்புறுத்தி விட்டாய். இனி நீ இப்பசுக்களை மேய்க்க வேண்டாம். நாளையிலிருந்து இவைகளை மேய்ப்பது என் பொறுப்பு. எந்தெந்த பசுக்களை எங்கெங்கே சேர்க்க வேண்டும் என்பதைச் சொல்லிவிடு. நானே அவைகளை அங்கங்கு ஒப்படைத்து விடுகின்றேன்.''

விசாரசருமனின் வேண்டுகோளை மருதையால் தட்ட முடியவில்லை. ஆனால் ஊரார் என்ன சொல்வார்களோ எனத் தயங்கினான். அவன் தயக்கத்தைப் புரிந்து கொண்டான் விசார சருமன்.

''மருதை! இதனால் உனக்கு எந்தக் கஷ்டமும் வராது. நான் பார்த்துக் கொள்ளுகின்றேன்.''

மருதை அதற்குமேல் அங்கு நிற்கவில்லை. கையைத் தூக்கி, விசார சருமனைக் கும்பிட்டு விட்டு அங்கிருந்து சென்றான். விசார சருமன் அந்தணர்களிடம் சென்றான். அவர்களின் அனுமதியைப் பெற்றுப் பசுக்களை மேய்க்கும் வேலையை ஏற்றுக் கொண்டான்.

மாடுகள் மேய்க்கச் செல்லும் விசாரசருமனைப் பார்ப்பதே ஓர் அழகு. துள்ளிக் குதித்தோடும் பசுக்களும், அவற்றின் பின்னால் செல்லும் கன்றுகளும் ஆனந்தம் அடையும். விசாரசருமனின் இளங்குடுமி அசைவது கண் கொள்ளாக் காட்சியாகும்.

இடையிலே நல்ல மான் தோல்; உடம்பில் மின்னொளி போல் விளங்கும் பூணூல். கைகளிலே குச்சி இருக்கும். ஆனால் அதன் ஸ்பரிசத்தை அந்த மாடுகள் அறிந்திருக்கவில்லை.

பசுக்கள் நல்ல புல் இருக்கும் இடங்களில் செல்லும். வயிறாரச் சாப்பிடும். அதன் பிறகு அப்பசுக்களை நல்ல நீர் நிலைக்கு அழைத்துச் செல்வான் விசாரசருமன். அவற்றின் துன்பங்களை அகற்றுவான்.

ஆற்றின் கரைகளில் நின்று கொண்டு பசுக்கள் விசார சருமனுக்காகக் காத்திருக்கும். அவன் வந்தால் நன்றாகத் தேய்த்துக் குளிப்பாட்டுவான்.

வெயில் நேரங்களில் பசுக்கள் நிழலில்தான் நிற்கும். அவைகளுக்கு வேண்டிய புல் போன்றவைகளை விசார சருமன் கொண்டு வருவான். அதற்காக அவன் எங் கெங்கோ அலைவான்.

பால் கறக்கும் நேரம் வந்துவிட்டால் அவைகளை அவரவர் வீடுகளுக்கு அழைத்துச் செல்வான். அவைகளும் மகிழ்வோடு அவனுடன் கிளம்பும்.

மண்ணியாற்றின் கரைகளிலும் முல்லை நிலங்களிலும் பள்ளங்களிலும் பசுக்கள் மேய்ந்து திரியும்.

ஒவ்வொரு நாளும் இனிய இசை தவழும், விசாரசருமன் அப்பணியைச் செய்வதில் இன்பம் கண்டான்.

எப்பொழுதும் அவனுக்கு ஆனயர் என்பவரின் நினைவு வரும்.

ஆனயர் இடையர் குலத்தைச் சேர்ந்தவர். பசுக்களை மேய்ப்பது அவரின் தொழில். அதை அவர் திருத்தொண்டாகச் செய்து வந்தார். அவரும் இப்படித்தான் நல்ல புல்வெளிகளில் பசுக்களை மேய விடுவார்.

இசையில் வல்லவர் அவர். புல்லாங்குழல் வாசிப்பார். இனிமையான அவருடைய இசையில் பசுக்கள் மயங்குமாம் புல்லைக் கூட உண்ணாமல் பசுக்கள் அவரைச் சுற்றி நிற்குமாம். பசுக்கள் மட்டுமல்லாமல் மயில்கள் மற்றும் மான்களும் அவருடைய இசையில் மயங்குமாம்.

இவைகளை எல்லாம் விசாரசருமன் அறிந்திருந்தான்.

இசையால் உலகமே மயங்கும் என்பதை அவன் அறிந் திருந்தான். எனவே அவனும் பசுக்களை மேய்க்கும் போது

இனிமையான பாடல்களைப் பாடுவான். பசுக்கள் தம்மை மறந்து மகிழ்வதால் அவைகளுக்குத் துன்பமே ஏற்படுவதில்லை.

விசாரசருமனின் மேற்பார்வை நன்றாக இருந்தது. பசுக்கள் பெருகின. அழகாக வளர்ந்தன. கன்று என்றோ, கிடாரி என்றோ வேற்றுமை இல்லை. இனிய புல்லுணவும் இசையும் அவைகளுக்குக் கிடைத்தன. ஆகவே கன்றை ஈன்ற பசுக்களின் பால்மடி பெருகின. முன்னைவிட பன் மடங்குப் பாலைச் சொரிந்தன. வேதியர்களுக்குத் தேவையான பாலைவிட அதிகம் கிடைத்தன. கன்றுக்கும் வயிறாரக் கிடைத்தது. பசுக்கள் முன்பைவிட அநேக மடங்கு பொலிந்து விளங்கின. வேதியர்கள் மகிழ்ந்தார்கள்.

பசுக்கள் எல்லாவகையிலும் அளவற்று மகிழ்ச்சியடைந்தன. பசுக்கள் தங்கள் கன்றுகளைப் பிரிந்தாலும் வருந்துவதில்லை. ஆனால் விசாரசருமனைப் பிரிந்தால் வருந்த ஆரம்பித்தன. தூரத்தில் விசாரசருமன் வருவதைப் பார்த்தாலே பசுக்கள் மகிழும். அம்மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கும். குதித்தோடி வந்து அவனருகில் வந்து நிற்கும்.

சில பசுக்களுக்கு விசாரசருமன் மேல் பாசம் அதிகம் பிறந்தது. அவை விசாரசருமனைக் கன்றாக நினைக்க ஆரம்பித்தன. அவன் அருகில் வந்து நின்று, கன்றை அழைப்பது போல ''அம்மா'' என்று கதறி அழைத்தன. அப்பசுக்களின் உடம்பில் தன் மெல்லிய கரங்களை ஓடவிட்டான். விசாரசருமன் . கன்றுகள் தான் அப்படிச் செய்கின்றன என்பதை அவைகள் நினைத்தன போலும். கன்றுக்குப் பாலைச் சொரிவது போல அவை பாலைச் சொரிந்தன.

அப்பசுக்கள் இப்படிப் பாலைச் சொரிவது பல நாட்களாகநடந்தன. ஒருநாள் விசாரசருமனுக்குச் சிந்தனை ஒன்று பிறந்தது.

''அற்புதமான பசுவின் பால் சிவனுருக்கு அபிஷேகம் செய்தால் என்ன?''

அவனுடைய உள்ளத்தில் சிந்தனை பிறந்ததும் மகிழ்ந் தான். இதுவரை உணர்ந்தறியாத புத்துணர்ச்சி ஏற்பட்டது! சிவலிங்கம் தன் முன்னே இருப்பது போல உணர்ந்தான்! அவனே பாலால் அபிஷேகம் செய்வது போல மகிழ்ந்தான்.

''எல்லாம் சரி; சிவலிங்கத்தை எங்கே தேடுவது?''

கனவுலகில் இருந்துவிடுபட்டான் அவன். தீவிர சிந்தனை வயப்பட்டான். சிவலிங்கத்தை எங்கிருந்து பெறுவது?

மண்ணியாற்றங்கரையில் மணல் அதிகம்.

திடீரென்று அவனுக்கு அம்மணலையே குவித்து லிங்கம் செய்தால் என்ன என்று தோன்றியது. இவ்வளவு உயர்ந்த எண்ணம் இதற்கு முன் தோன்றவில்லையே என வருந் தினான்.

ஆற்றங்கரையில் பல வளர்ந்த மரங்கள் இருந்தன.

சிவலிங்கம் வெட்ட வெளியில் இருக்கக் கூடாது. நல்ல நிழலில் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான்.

உயர்ந்த அத்திமரம் ஒன்றும் அவ்வாற்றின் கரையில் இருந்தது. பெரியமரம். நிறைய கிளைகள். அடர்ந்த இலைகள். அம்மரத்தின் நிழல் சிவபெருமானுக்கு ஏற்றதாக இருக்கும்.

எண்ணம் வலுப்பட்டவுடன் செயலில் இறங்கினான் அவன்.

ஆற்றங்கரையின் மண் சிவலிங்கமாக உருவாயிற்று.

சிவலிங்கம் தயாராயிற்று. அதற்கு அடுத்து கோவில் வேண்டாமா? எதனால் கோவிலைக் கட்டுவது? கல்வேண்டுமே! எதற்குக் கல்? சிவலிங்கமே மண்ணால் தயாராகும் போது கோவிலும் மண்ணால் ஆகக்கூடாதா?

சின்னஞ்சிறு சிவாலயம் மண்ணால் உருவாக்கப்பட்டது.

தான் உருவாக்கிய சிவாலயத்தைப் பார்த்தான் விசார சருமன். அவன் உள்ளம் மகிழ்ந்தது.

சிவாலயத்தைச்சுற்றி அழகான திருமதில்கள் மணலாலே உருவாயின. பிறகு, கோபுரத்தைக் கட்டினான்.

இப்போது எல்லாம் தயாராயின. இனி பூஜை தான் செய்யவேண்டும்?

பூஜைக்கு மலர்கள் வேண்டும். திருப்பள்ளித் தாமங் கள் வேண்டும். இவைகளை எவ்வாறு பெறுவது என விசார சருமன் ஆலோசித்தான்.

அத்திமரத்தின் மலரைப் பறித்தான். அருகில் வளரும் காட்டு மரங்களின் பூக்களையும் பறித்தான். மற்றும் இறைவனின் திருமுடி மீது சாத்தும் திருப்பள்ளித் தாமங்களையும் பறித்தான். இவைகளை எப்படிக் கொண்டு போவது.

மரத்தின் இலைகளைக் கொண்டு பூக்கூடை செய்தான்.

அவைகளில் இவைகளைப் போட்டுக் கொண்டு வந்தான் சிவலிங்கத்தின் மீது அன்போடு மலர்களைச் சொரிந்தான். மனம் மிகவும் மகிழ்ந்தது. இதுவரை இல்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது.

தினசரி அவன் இப்படிப் பூசை செய்ய ஆசைப்பட்டான். அதையே செய்ய ஆரம்பித்தான்.

ஒருநாள் அவனுக்கு மற்றோர் எண்ணம் தோன்றியது.

பூசை தினமும் தவறாமல் நடைபெறுகிறது. ஆனால் அபிஷேகம் மட்டும் நடைபெறவில்லையே!

அபிஷேகத்திற்குப் பால் வேண்டுமே? எப்படிக் கிடைக்கும்?

அவன் யோசிக்கலானான்.

கறவைப் பசுக்கள் பல இருக்கும் போது பாலுக்குப் பஞ்சமா என்ன?

தன்னை நம்பி ஒப்படைக்கப்பட்டிருக்கும் கறவைப் பசுக் களில் இருந்து பாலைக் கறப்பது குற்றமல்லவா?

அவன் மனம் இவ்வாறு சிந்தித்தது.

அதற்கு அவனே சமாதானம் செய்து கொண்டான்.

ஒவ்வொரு கறவை மாட்டிடம் ஒரே ஒரு காம்பில் இருந்து மட்டும் கொஞ்சம் பாலைக் கறப்பது; அதையே இறைவனுக்கு அபிஷேகம் செய்வது. இறைவன் படைப்பி லிருந்து கொஞ்சம் எடுப்பதில் குற்றம் இல்லையே?

ஒரு முடிவுக்கு வந்தவுடன் அம்முடிவைச் செயலாக்க லானான் விசாரசருமன்.

குடம் ஒன்றை எடுத்துக் கொண்டான், கறவைப் பசுக் கள் ஒன்றுக்கு ஒரு காம்பாக மடியைத்தொட்டான். உடனே அப்பசு கனைத்துக் கொண்டு பாலைச் சொரிந்தது. அப்பாலை எல்லாம் சேகரித்தான். ஒரு குடம் பால் இப்படிச் சேர்ந் தது.

திருப்பள்ளித் தாமங்களைக் கொண்டு சிவலிங்கத்திற்கு அர்ச்சனை செய்தான். பிறகு தான் சேகரித்த பாலினால் திருமஞ்சன மாட்டினான்.

''ஆஹா! என்ன அற்புதமான மகிழ்ச்சி!''

தன் வாயை விட்டே அவன் பேசினான்.

பூசைக்கு வேண்டிய பொருட்கள் எல்லாம் கிடைக்க வில்லையே என்ற கவலை அவனுக்கு இல்லை. இல்லாத பொருட்கள் கற்பனையால் வந்தன. மானஸீகமாக அவை களை வரவழைத்தான். அவைகளும் இறைவன் பூசைக்காக அர்ப்பணிக்கப்பட்டன.

தினசரி பாலாபிஷேகமும்மலர் அர்ச்சனையும் நடந்தன. ஒருநாள் கூட இப்பூசை நிற்கவில்லை. தினசரி கொஞ்சம் பாலை பசுக்களும் பூசைக்குத் தந்தன. அவைகள் வாழும் வீட்டிலுள்ள வேதியர்களும் பாலைப் பெற்றார்கள். அங்கு பாலின் அளவு குறையவே இல்லை.

பசுக்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. சிவபூசைக்கும் பாலைத் தந்தன. வீடுகளுக்கும் பாலைத் தந்தன.

பூசை தினசரி நடந்து வந்தது. அதன் சிறப்பு எப்படி வெளியே தெரியும்?

இறைவன் விசாரசருமன் செய்து வரும் பூசையைவெளி யுலகத்திற்குக் காட்ட எண்ணினார்.

ஒரு நாள் விசாரசருமன் பாலாபிஷேகம் செய்து கொண்டிருந்தான். அதை ஒருவன் கண்டான். அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் அபிஷேகம் என்றால் என்ன வென்று தெரிந்து கொள்ளாதவன். பால் நிறைய வீணு கின்றது என்று அவன் எண்ணினான். ''இந்தப் பிராம்மணப் பிள்ளை இப்படிப் பாலை வீணாக்குகின்றதே'' என்று அவன் வருத்தப்பட்டான்.

பசுக்களை மேய்க்கச் சொன்னால், பாலை இப்படியா மண்ணில் கொட்டுவார்கள்?

தினசரி மண்ணில் பால் கொட்டப்படுகின்றதை அவ னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இதற்கொரு வழி கண்டுபிடிக்க அவன் எண்ணினான்.

அங்கிருந்து அவன் கிளம்பினான். மறையவர்கள் வசிக் கும் இடத்திற்குச் சென்றான். எதிர்ப்பட்ட ஒருவரிடம் விசாரசருமன் செய்தியைச் சொன்னான்.

கேட்டவர் முதலில் நம்பவில்லை. எப்படி நம் புவது? பசுக்கள் தான் ஒழுங்காகப் பாலைத் தருகின்றனவே? அவர் மற்ற ஒருவரிடம் சொன்னார்.

கேட்டவர் தீரா விசாரிக்கவே இல்லை. ஆத்திரம் கொண்டார்.

''ஓய் என்ன அநியாயம் பார்த்தீரா? நம்ம பசுவின் பாலை அந்தப்பிள்ளை மண்ணில்குடம்குடமாகக் கொட்டுகிறு ளுமே? இன்னும் என்ன கேட்டுக் கொண்டு நிற்கிறீரே! என்ன செய்யலாம் இதற்கு?''

''ஓய்! நீர் சொல்வதை என்னுல் நம்ப முடியவில்லை. அப்பையன் வந்தபிறகு தான் பசுக்கள் ஒழுங்காக நம்ம வீடுக ளில் வந்து சேருகின்றன. எந்த வம்பும் பண்ணுமல் பாலை யும் கொடுக்கின்றன. கொடுக்கின்ற பாலும்நிறையத்தான். அப்படி இருக்க, இவன் சொல்வதை எப்படி நம்புவது?''

முதலில் இவ்விஷயத்தைக் கேள்விப்பட்டவர் விசார சருமன் மீது அன்புகொண்டவர். அவன் மீது அவருக்கு நம் பிக்கை இருந்தது.

ஆனுல் இரண்டாமவர் விடுவதாக இல்லை. நிச்சயமாக விசாரசருமன் நம்மை எல்லாரையும் ஏமாற்றுகிறுன் என் பதை உறுதியாக நம்பினுர்.

''ஓய்! அப் பிள்ளையாண்டானை சாதாரணமாக நினைக் காதீர். செஞ்சாலும் செய்வான். நாமெல்லாரும் அவன் தோப்பனுரைப் பார்த்துப் பேச வேண்டும் ஓய்! வாரும் இப்போவே போவோம்.''

இருவரும் மற்ற மறையவர்களிடம் சென்று விஷயங் களைச் சொன்னுர்கள். எல்லோருமாகக் கூடினுர்கள். அன்று இரவு கூட்டம் போடுவது, அதில் விசாரசருமனின் தகப்ப னுர் எச்சதத்தனிடம்சொல்வதுஎன்றும் தீர்மானம் பண்ணி னுர்கள்.

அன்று இரவு சபை கூடியது. எச்சதத்தான் குற்றம் சாட்டப்பட்டு நின்றுன். அவருக்கு நம்ப முடியவில்லை. தன் மகன் இப்படி எல்லாம் மோசம் செய்யமாட்டானே''

சபையின் தலைவர் எச்சதத்தனைப் பார்த்தார். அவர் பேசமுடியாமல் நின்று கொண்டிருந்தார்.

''ஓய்! எச்சதத்தா! இவர்கள் பேசுவதைக் கேட்டீரா? உம்ம பிள்ளை பசுக்களை ஓட்டிச் சென்று, அன்போடு மேய்ப் பவனைப் போல் நடிக்கிறானாம். ஏராளமான பாலை அவன் இஷ்டம் போல் மணலில் கொட்டுகிறானாம். இவர்கள் கூறு கிறார்கள். இதற்கெல்லாம் என்ன சமாதானம் சொல்லப் போகிறீர்?''

இதைக் கேட்ட எச்சதத்தன் பயந்து நடுங்கினார். என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாமல் விழித்தார். ஒரு விதமாக தைரியத்தை வரவழைத்துக் கொண்டார்,

''பிராமணப் பெரியோர்களே! என் பயல் இப்படிச் செய்வான் என்று நான் நினைக்கவில்லை. இது பற்றி அவன் ஒன்றும் அறிய மாட்டான். அல்லது தான் செய்வது தவறு என்று தெரியாமல் செய்திருப்பான். இதற்கு முன் நடந் ததைதயவு செய்துபொறுத்துக்கொள்ளுங்கள். இனிமேலும் இதுபோன்றுநிகழாமல்நான் பார்த்துக் கொள்ளுகின்றேன். மீறி நடந்தால் அக்குற்றம் என்னுடையது. என்னை மன் னியுங்கள்.''

உருக்கமாக எச்சதத்தன் பேசியதைக் கேட்ட மறைய வர்கள் அவரை மன்னித்து விட்டார்கள்.

எச்சதத்தன் அங்கிருந்து கிளம்பினார். அவருக்குச் சொல்லிமுடியாத வருத்தம்! நான்கு பேருக்கு முன்னால் கைகட்டி நிற்க வந்ததே! தன் பெருமையைக் கெடுப்பதற் காகவே மகன்பிறந்திருக்கின்றானே!பாலைமண்ணில் கொட்டி விளையாடுபவன் அதோடு நிற்பானா? இதை உடனே கண் டிக்க வேண்டும்'

ஆத்திரத்தோடு புறப்பட்டார் அவர்.

இவர் புறப்பட்டு நிற்கின்றபோதே விசாரசருமன் பசுக் களை ஓட்டிக் கொண்டே எதிரே வந்து கொண்டிருந்தான்.

உ...னே கேட்கலாமா என்று எண்ணினூர் எச்சதத்தன். அவன் உண்மையைச் சொல்லாமல் இருந்தால் என்ன செய் வது என்று நினேத்தார். மறு நாள் அவன் செய்வதை மறைந்து நின்று பார்க்க வேண்டும் என்ற முடிவுக்கு வந் தார்.

அன்றைய பொழுது சாய்ந்து இருட்டியது

மறுநாள் விடிந்தது, வழக்கம் போல் விசாரசருமன் பசுக்களே மேய்ப்பதற்கு ஓட்டிச் சென்றுன். எச்சதத்தன் தன் மகன்பசுக்களே ஓட்டிச் செல்வதைக் கண்டார். தான் முன்பே தீர்மானித்ததை எண்ணினூர். எப்படியாவது விசாரசருமனேப் பற்றிய உண்மைகளேத் தெரிந்து கொள்ள விரும்பினூர். ஆகவே விசாரசருமனுக்குத் தெரியாமலே அவன் பின்னுல் சென்றுர்.

மண்ணியாற்றின் கரைக்கு பசுக்கள் வந்து சேர்ந்தன. எச்சதத்தன் அங்கு நடப்பதைக் காண ஆவலாக இருந் தான். ஆகவே குராமரம் ஒன்றில் ஏறிக் கொண்டார். அங்கிருந்து பார்த்தால் தூரத்தில் நடப்பது நன்றுகத் தெரி யும் வண்ணம் இருந்தது.

பசுக்கள் மேய்ந்து கொண்டிருந்தன. விசாரசருமன் ஆற்றில் இறங்கி நீராடினூன். மணலில் சிவலிங்கம் செய் தான். அன்று அவன் மணலால் செய்த சிவலிங்கம் மிக அழகாக அமைந்தது. அதைக் கண்டு அகமகிழ்வு கொண் டான் விசாரசருமன்.

விரைந்து அங்குமிங்கும் ஓடி மலர்களேப் பறித்து வந் தான். திருப்பள்ளித் தாமம் கொண்டு வந்தான். பள்ளித் தாமங்களே இறைவன் திருமுடியில் சூட்டினூன். அடுத்துத் திருமஞ்சனம் ஆட்டுவிக்க வேண்டும்.

குடங்களேத் தேடி எடுத்தான். அவைகளே பத்திரமா கக் காப்பாற்றி வைத்திருந்தான்.

ஆரம்பத்தில் ஒரு குடம் பாலைத் தான் அபிஷேகத்திற்கு என்று சேர்த்தான். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, அவனுக்கு இறைவன் பால் அதிகம் அன்பு சுரந்ததின் காரணமாக பாலும் அதிகம் தேவைப்பட்டது. பசுக்களும் பாலைத் தாராளமாகச் சொரிந்தன. எனவே பல குடங்கள் தேவைப் பட்டன. பல குடங்களின் பால் இறைவனுக்கு அபிஷேகம் செய்யப்பட்டது.

அபிஷேகம் முடிந்தவுடன் மலர் அர்ச்சனையைத் தொடங்கினான் விசாரசருமன்.

அன்றைக்கு விதியின் விளையாட்டு நிகழ இருந்தது. எனவே என்றைக்கும் உணர்ந்தறியாத புத்துணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. பலவாறு இறைவனைத் துதிக்க ஆரம்பித்தான். தன்னை மறந்த நிலையில் அவன் பாடியதால் அங்கு நடைபெறுவதை உணரமுடியாமற் போனான் அவன்.

குராமரத்தில் இருந்து இக்காட்சியைக் கண்ட எச்சதத்தனுக்கு ஆத்திரம் வந்தது. ஊரார் வீணாகக் குற்றம் சாட்டவில்லை என்பதை உணர்ந்தான். ஒவ்வொரு நாளும் பல குடங்கள் பால் வெறும் மண்ணில் கொட்டப் படுகின்றன என்பதை நினைத்தார்

எவ்வளவு பாலை இப்படி வீணாக்குகின்றான் விசாரசருமன்!

ஒருநாளா, இரு நாட்களா? பல நாட்கள் இப்படி வீணான பாலைக் கணக்கிட்டாலே......

அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

மரத்திலிருந்து கோபத்தோடு இறங்கினார். கையில் இருந்தது ஒரு கோல். அதை அவர் எங்கு போனாலும் எடுத்துக் கொண்டு போவது வழக்கம். அக்கோலினால் விசாரசருமனின் முதுகில் ஓங்கியடித்தார்.

தன் ஆத்திரத்தில் சிறு குழந்தையின் முதுகிலல்லவா அடிக்கின்றோம் என்பதை அவர் உணரவில்லை.

ஆனால் ஆச்சரியம் அவருக்கு ஏற்படத்தான் செய்தது.

ஓங்கியடித்ததுஉண்மை. அவ்வடி விசாரசருமன் மேல் பட்டதும் உண்மை. ஆனால் அவ்வடியால் விசாரசருமன் அசையாமல் இருந்தான்.

ஓர் அடி அடித்த பின்பும் அசையாமல் இருப்பதைப் பார்த்தார் எச்சதத்தன். அறிவைப் பயன்படுத்தியிருந்தால் பரவாயில்லை. ஆனால் ஆத்திரத்தின் வசப்பட்டார்.

ஓர் அடி அடித்தோம். உடனே தான் செய்ததைத் தவறு என்று உணர்ந்து தன் மகன் மன்னிப்பு கேட்கவில்லையே என்ற கோபம் அவருக்கு வந்தது.

அடிபட்டிருந்தாலும் விசாரசருமன் மனம் எல்லாம் பூசையில் லயித்திருந்தது என்பதை எச்சதத்தன் உணரவில்லை.

மறுபடியும் ஓங்கி ஓர் அடியை அவன் முதுகில் போட்டார்.

அதற்கும் அசையவில்லை விசாரசருமன்.

மேலும் மேலும் சீற்றம் பிறந்தது அவருக்கு. எனவே கைசோரும் வண்ணம் நையப் புடைக்கலானார்.

அவர் அடித்த அடிகள் அச்சிறுவனின் முதுகில் வடுக்களை ஏற்படுத்தின. அவைகளிலிருந்து இரத்தம் கசிய ஆரம்பித்தது. ஆனால் பாடுவதை விசாரசருமன் நிறுத்தவில்லை.

என்னசெய்வது என்று எச்சதத்தனுக்கு விளங்கவில்லை.

ஆத்திரத்தால் பெருமூச்சு விட்டான்.

அங்கிருந்த சில குடங்களில் பால் நிறைந்திருந்தன. இன்னும் சிறிதுநேரம் கழித்து அவன் அபிஷேகம் செய்வதற்காக அவைகளை வைத்திருந்தான்.

அதைப் பார்க்கப் பார்க்க அவருக்கு ஆத்திரம் மிகுந்தது கடுங்கோபம் பிறந்தது. எனவே தன் கால்களால் அப்பால் குடங்களில் சிலவற்றை எட்டி உதைத்தார். அக்குடங்கள் கவிழ்ந்து பால் எல்லாம் நிலத்தில் சிந்தியது.

சிவபூஜையில் தன்னை மறந்திருந்த விசாரசருமன் திடீரென்று தன்னிலைக்கு திரும்பினன். அவன் கண்கள் அங்கு நிகழ்ந்தவற்றைக் கண்டன.

தாம் அரும்பாடுபட்டுச் சம்பாதித்த பால் நிலத்தில் சிந்தியிருந்தது.

இதைச் செய்தவர் யார்?

சுற்றிப் பார்த்தான் அவன். தன் தந்தை கோபத்தோடு நின்று கொண்டிருந்தார். அவர் கையில் கோல் ஒன்றிருந்தது.

முதுகில் வலி எடுத்ததால் தன் கைகளாலேயே முதுகைத் தடவிப் பார்த்தான்.

திட்டு திட்டாக இரத்தம் கசிந்து உறைந்திருந்தது. இவ்வளவு நேரம் தன் தந்தை அவர் வைத்திருந்த கோலினல் அடித்திருக்கிருர்.

எதற்காக அவர் தன்னை அடிக்க வேண்டும்? அவர் அடிக்கும் படியாகத் தான் செய்த குற்றம் என்ன?

''தந்தையே! தாங்கள் தான் என்னை அடித்தீர்களா?''

அவன் கேட்ட கேள்வி எச்சதத்தனுக்கு மேலும் ஆத்திரத்தை யூட்டியது. அடிபட்டதையும் அடித்தவனையும் தெரிந்து கொள்ளாமல் இருக்கின்றனே? இல்லை ஒன்றும் தெரியாதவன் போல் நடிக்கின்றனே?

''விசாரசருமா! உண்மையைச் சொல். நான் அடித்ததோ, நீ அடிபட்டதோ உனக்குத் தெரியாதா?''

''தந்தையே! தெரிந்திருந்தால் கேட்பேனே? இங்கு நடந்த எதையும் நான் உணரமுடியவில்லை?''

''ஏன்?''

''சிவனுடைய திருநாமம் தான் பதில் சொல்லும். அப்பெருமானின் திருநாமத்தை மனதிற்குள் கொண்டு வந்தேன். எல்லாம் மறந்தேன்.''

இந்தப் பதில் எச்சதத்தனுக்கு மேலும் ஆத்திரமூட்டியது.

''பாலை மண்ணில் தினசரி கொட்டுவதும் நீதானே?''

தன் தந்தை ஏன் கோபப்படுகின்றார் என்பதை விசாரசருமன் உடனே உணர்ந்து கொண்டான். பாலாபிஷேகம் செய்வதைத் தன் தந்தை எந்தக் கோணத்தில் கண்டிருக்கின்றார் என்பதை அவன் அறிந்தான்.

அவனுக்குச் சிரிப்பு வந்தது.

விசாரசருமன் சிரித்ததை எச்சதத்தன் விரும்பவில்லை.

''விசாரசருமா! சொல். நீதானே தினசரி குடம் குடமாகப் பாலை இந்த மண்ணில் கொட்டுகின்றாய்?''

''தந்தையே! அது மண் அல்ல. சிவபெருமானின் திருக்கோலம்.''

''தெரியுமடா எனக்கு? மண்ணை லிங்கம் ஆக்கிவிட்டால் அது சிவபெருமான் ஆகிவிடுமா?''

''தந்தையே! எல்லாம் தெரிந்திருக்கும் நீங்கள் இப்படிப் பேசலாமா? கல்லாக இருந்தாலும் மண்ணாக இருந்தாலும் அது இறைவனின் திருவுருவம் என்றுதானே மறைகள் சொல்லுகின்றன?''

''டேய்! எனக்கே நீ சொல்லுகிறாயா? இனிமேல் இப்படி அபத்தமான காரியங்களைச் செய்தால் உன்னைச் சும்மா விடமாட்டேன்.''

''சிவபூசை செய்வது அபத்தமான காரியமா தந்தையே?''

''பூசை செய்வது அபத்தமல்ல.'' ஆனால் இப்படி மண்ணைக் குவித்து வைத்து, அதன் மேல் குடம் குடமாகப் பாலைக் கொட்டி வீணாக்குவது அபத்தம்.'

''மன்னிக்க வேண்டும் தந்தையே! இதை உயர்ந்த பூசையாக நான் கருதுகின்றேன்.''

''ஊரார் வீட்டுப் பசுக்கள் தரும் பாலை, அவர்களுக்குக் கொடுக்காமல் இப்படி வீணாக்குவது சரியோ?''

''தந்தையே! பசுவின் பஞ்ச கௌயங்களில் பாலைஅபிஷேகம் செய்வது வீணாக்குவதல்ல. மறையவர்களும் எதைச் செய்கிறார்களோ அதைத்தான் நானும் செய்கின்றேன்.''

''விசாரசருமா! நீ அளவுக்கு அதிகமாகப் பேசுகின்றாய். உன்பேச்சை இனிமேலும் நான் பொறுத்துக்கொள்ள மாட்டேன்.''

''தந்தையே! நான் என்ன செய்யவேண்டும் என்கிறீர்கள்?''

''இந்த அபத்தங்களை எல்லாம் உடனே நிறுத்திவிடு.''

''அப்புறம்?''

''மணலில் பாலைக் கொட்டி வீணாக்காதே!''

''உம். அதற்கப்புறம்?''

''இவ்வளவுதான்.''

''தந்தையே! என்னை மன்னிக்க வேண்டும். நீங்கள் எதை நிறுத்தச் சொல்லுகிறீர்களோ அதைத் தொடர்ந்து செய்யப் போகின்றேன். அதனால் என்ன வந்தாலும் சரி.''

''அப்படியானால் என் வார்த்தையை மீறுகிறாயா?''

ஆவேசமாகக் கேட்டார் எச்சதத்தன்.

''வேறு வழியில்லை தந்தையே!''

''அவ்வளவு திமிரா உனக்கு! இதோ பார். நீ வைத்திருக்கும் இந்தக் குடம் என்ன ஆகப்போகின்றது என்று? சிவலிங்கமா செய்திருக்கின்றாய். அதுவும் இப்போது ஆகப்போகும் கதியைப் பார்.''

எச்சதத்தன் அங்கிருந்த இன்னும் மிச்சம் இருந்த ஒரு பால்குடத்தை எட்டி உதைத்தார். பால் எல்லாம் மண்ணில் சிந்தியது. அத்துடன் நிற்காமல் சிவலிங்கத்தையும் கால்களால் உதைத்துச் சிதைத்தார்.

சினம் மூண்டது விசாரசருமனுக்கு.

அப்பாதகம் செய்தவன் தந்தை என்று எண்ணவில்லை. பகைவன் உருவில் அவர் நிற்கின்றார் என்றுணர்ந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். அவன் கண்களில் ஒரு கோல் அங்கு கிடப்பது பட்டது. ஓடிச் சென்று அதை எடுத்தான் ஆவேசமாக அக்கோலினால் தந்தையின் கால்களின் மீது வீசினான்.

அக்கால்கள் அறுபட்டு விழுந்தன.

கோலினால் அடிபட்ட கால்கள் அறுந்து விழுவது அதிசயம் தான். ஆனால் அதுவே அங்கு நடந்தது. இரு கால்களும் வெட்டுண்டு மண்ணில் சாய்ந்தார் எசசதத்தன்.

அடுத்தகணம் ஏதும் நடைபெறவில்லை என்பதுபோல விசாரசருமன் உணர்ந்தான். வழக்கமாக சிவலிங்கத்தை மண்ணினால் பிடித்து பூசை செய்ய ஆரம்பித்து விட்டான்,

அப்போதுதான் அங்கே ஓர் அதிசயம் நடந்தது.

சிவபெருமான் உமாதேவியாரோடு காட்சி அளித்தார்,

பூதகணங்கள் புடைசூழ்ந்து இருந்தன. முனிவர்களும் தேவர்களும் புகழ்ந்து பாடிக் கொண்டிருந்தனர்.

விசாரசருமன் கண்களைத் திறந்தான். தன் முன்னால் நிற்கும் சிவபெருமானைக் கண்டான். மகிழ்ந்தான். ஆனந்தம் பொங்க அவர் திருவடிகளில் விழ்ந்தான். இரு கைகளையும் கூப்பிக் கும்பிட்டான்.

சிவபெருமான் விசாரசருமனைத் தன் கைகளாலே வாரி யெடுத்து வாழ்த்தினார்.

''விசாரசருமா! நம் பொருட்டு உன்னைப் பெற்ற தந்தையின் கால்களையும் வெட்டி எறிந்து அவனை வீழ்த்தினாய். ஆகையால் இனி நாமே உனக்கு அடுத்த தந்தை.''

சிவபெருமான் தன் திருமலர்க்கரங்களினால் விசார சருமனைத் தொட்டார்.

அவருடைய திருக்கரங்கள் பட்டதும், விசாரசருமனின் மாய உடல் பொன்னொளியாக மாறியது. வானத்துத் தேவர்கள் எல்லாரும் போற்றித் துதித்தார்கள்.

''விசாரசருமா! அருகில் வா!''

சிவனார் அழைக்க அருகில் சென்றான் விசாரசருமன்.

''விசாரசருமா! இன்றுமுதல் நீதான் எம் தொண்டர் களுக்கு எல்லாம் தலைவன். நாம உண்பன; உடுப்பன, ஆடுவன அனைத்தும் உனக்கே ஆகுக. அதன் பொருட்டு ''சண்டீசன்'' ஆகும் பதவியை உனக்குத் தந்தோம். இனி என்னை வணங்கவரும் அடியார்கள் முதலில் உன்னை வணங்கி விட்டு அதன் பிறகே என்னை வணங்குவர்,''

சிவபெருமானின் ஆணை பிறந்தது. விசாரசருமன் 'சண்டீசன்' ஆனார். சிவகணத்தவர் ஆடிப் பாடினார்கள்.

''சண்டேசுர நாயனார்'' என்ற பெயரில் சிவாலயங் களில் இடம் பெற்றவர் விசாரசருமன் ஆகும்.

தொண்டினால் உயர்ந்தவர் சண்டேசுர நாயனார.

சுந்தரர் இதை எண்ணிப் பார்த்தார். மகிழ்ந்தார். பாடினார்,

''மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க

வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த

அம்மையான் அடிச் சண்டிப் பெருமானுக்கு அடியேன்''

என்று சுந்தரர் சண்டேசுரப் பெருமானின் அடியவரானார்.

பாசத்தை வென்ற குழந்தை சண்டேசுவர நாயனு ராகும்.

பரமனைப் பற்றிய குழந்தை

அது ஒரு குருகுலம்.

அரசகுடும்பத்திற்கென்று அது அமைக்கப்பட்டிருந்தும், அசுரக் குழந்தைகளும் கல்வி கற்று வந்தனர். சுக்கிராச் சாரியார் அந்தக் குருகுலத்தின் தலைவராக இருந்தார். அவர் அசுரர்களுக்குக் குரு. வெள்ளி எனவும் அவர் அழைக்கப்பட்டார்.

அந்தக் குருகுலத்தில் தங்கிப் பயின்று கொண்டிருந் தான் பிரகலாதன்.

பிரகலாதன் அசுரர்களுக்கு அரசனாக இருந்த இரண் யனின் மகன்.

பிரகலாதன் இளைய மகன். அவனுக்கு மூன்று அண்ணன்மார்கள் இருந்தனர். அவர்களுடன் குருகுலத் தில் தங்கிக் கல்வி பயின்று வந்தான் பிரகலாதன். அசுர குருவாகிய சுக்கிராச்சாரியாரின் பிள்ளைகளான சண்டன், அமர்க்கன் ஆகிய இருவரும் அசுரக் குழந்தைகளுக்கும் அரசனின் பிள்ளைகளுக்கும் பாடம் சொல்லி வந்தனர்.

அன்றைய தினம் பாடம் அதிகம் இல்லை. ஆகவே குழந்தைகள் அனைவரும் ஒன்று கூடி மனத்திற்குப் பிரிய மான பல விஷயங்களைப் பற்றியே பேசலாயினர்.

சில பிள்ளைகள் விளையாடச் சென்றன. சில பிள்ளைகள் அவரவர் வீட்டில் உண்ணும் உணவைப் பற்றிப் பேசலாயின. இப்படி அவரவர் தங்கள் தங்கள் வீட்டு விவகாரங்களைப் பேசிக் கொண்டிருந்தனர்.

திடீரென்று சண்டன் பிரகலாதனைப் பார்த்தான்.

''பிரகலாதா! அரண்மனையில் உன் தந்தை உன்னிடம் எப்படி நடந்து கொள்வார்?'' என்று கேட்டான்

பிரகலாதன் கடைசிக் குழந்தை. ஆகவே எல்லாரும் பிரியமாகத் தானே இருப்பார்கள்?

சண்டனைப் பார்த்தான் பிரகலாதன்.

''என் தந்தை என் மீது உயிரையே வைத்திருக்கின்றார். என் தாயும் அப்படியே. எனக்கு எந்தக் குறையும் இல்லை'' என்றான் பிரகலாதன்.

''உனக்கென்னப்பா அரசகுமாரன். அதுமட்டுமல்ல உன் தந்தையாகிய அரசர் பிரம்மாவிடம் ஏராளமான வரங்கள் வாங்கியிருக்கிறார். யார் நினைத்தாலும், ஏன் அந்த மும்மூர்த்திகளாலும் உன் தந்தையைக் கொல்ல முடியாது. அப்படி அவர் வரம் வாங்கி வைத்திருக்கிறார்.''

சண்டன் பெருமூச்சுவிட்டவாறே பேசினான்.

பிரகலாதனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

மரணமே இல்லாமல் ஒருவர் எவ்வளவு காலம்தான் வாழ முடியும்? எப்படியும் ஒருநாள் மரணம் வரத்தானே செய்யும்? மரணமே வராத அளவுக்கு ஒருவர் வரம் வாங்க முடியுமா? அவனால் நம்ப முடியவில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை. அதைப்பற்றி அவன் கேள்விப் பட்டதும் இல்லை. தன் தந்தையின் வரம் பெற்ற வரலாறு அறிந்து கொள்ள அவன் ஆசைப்பட்டான். சண்டன்தான் இவைகளைப் பற்றி அறிந்தவன். ஆகவே பிரகலாதன் சண்டனிடம் தன் தந்தை வரம் பெற்ற வரலாற்றைத் தெரிவிக்கும்படி கேட்டான்.

சண்டன் தொடங்கினான்:

''அப்பா பிரகலாதா! முதலில் உன் தந்தையின் பெருமைகளைச் சொல்லுகின்றேன் கேள். அவர் அசுரர்களுக்குத் தலைவனாக விளங்குகின்றார். உன் தந்தை மிக்க வலிமையை உடையவர். பலம் மிக்க உடைய யானைகள் இரண்டை தன் இரண்டு கைகளாலும் பிடித்து அவைகளை மோதவிட்டு விளையாடுவார். அதுமட்டுமல்ல, அவர் நீராடுவது அதிசயமாக இருக்கும்.''

''அப்படியா? நீராடுவதற்குக் கூட அவர் அதிசயமான காரியங்கள் செய்வாரா?''

''ஆம் பிரகலாதா! கேள். வண்டல் மண்ணையும் தெளிந்த அலைகளையும் உடைய ஆற்றுக்குப் போவார். அந்த ஆற்றின் தண்ணீர் தனக்குப் போதாது என்று திரும்புவார். கடலுக்குப் போய் நீராடலாம் என்றால், அதன் நீர் உவர்ப்புச் சுவையுடையதென்று எண்ணுவார். ஆகவே அண்டங்களைத் துளை செய்வார். அப்போது உண்டாகும் நீரில் தான் அவர் நீராடுவார்.''

''அப்படி நீராடிவிட்டு, நாகலோகம் போவார். அங்குள்ள நாககன்னிகளுடன் அமர்ந்து அமுதம் உண்பார். பிறகு அங்கிருந்து கிளம்பி; பகல் பொழுதை இந்திரனுடைய அமராபதி நகரில் கழிப்பார். இரவுப் பொழுதை பிரமனுடைய சத்தியலோகத்தில் கழிப்பார்.''

''சிலசமயங்களில் அவர் விமானத்தில் ஏறி விண்ணுலகம் சென்று சந்திரனாக மாறி சந்திரன் செய்யும் வேலைகளைச் செய்வார். அவர் நினைத்தால் யாரை வேண்டுமானாலும் பதவியிலிருந்து மாற்றுவார். ஆகவே தேவர்களும் அவரைக் கண்டு நடுங்கி வாழ்வார்.''

''ஒரு சமயம் தனக்குக் கதாயுதம் ஒன்று வேண்டும் என்று ஆசைப்பட்டார். பல இடங்களிலும் சென்று பார்த்தார். தனக்கு ஏற்ற கதாயுதம் கிடைக்கவில்லை. அப்போது யாரோ, மந்தர மலையைப் பற்றிச் சொன்னார்

களாம். அதைக் காணப் புறப்பட்டார். அம்மந்தர மலை தான் பாற்கடலைக் கடைந்தபோது மத்தாகப் பயன்படுத் தப்பட்டது. அதைச் சென்று பார்த்தார் உன் தந்தை. அது மிகவும் இலேசாக உள்ளது என்று திரும்பிவிட்டார்.''

''அப்படியா? மந்தரமலையா இலேசாக இருந்தது என் தந்தைக்கு?''

''இன்னும் கேள் பிரகலாதா...!''

''தன் காதுகளில் அணிய குண்டலங்கள் வேண்டுமென விரும்பினர். அவை இரண்டும் மிக்க ஒளியை உடையதாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதற்காக, சூரியன் உதயமாகும் உதயகிரிக்கும், அஸ்தமனமாகும் அத்தமன கிரிக்கும் சென்றார். குண்டலங்கள் கிடைக்க வில்லை. சூரியனையே குண்டலங்களாக அணிந்து கொண் டார்.''

''அளவில்லாத வலிமையாலும் சிறப்பாலும் பிரமன் மற்றும் தேவர்கள் உன் தந்தையை 'இரணியனே நமஹ'' என்கிறார்கள்.

''ஏன் அப்படி?'' பிரகலாதன் கேட்டான்.

''ஏன் என்றால் அவர் சாகாமல் இருப்பதற்காகப் பெற்ற வரங்களே காரணம். அவைகளைச் சொல்லுகிறேன் கேள்.''

''உன் தந்தையான இரணியன் தன்னை யாரும் வெல்லக் கூடாது என்று எண்ணினர். அதனால் மந்தரமலைச் சாரலுக்குச் சென்றார். தன் இரு கைகளை உயரத் தூக்கிக் கொண்டு, கண்களால் வானத்தை நோக்கிக் கொண்டு தவம் செய்தார். இரண்டு கால்களின் கட்டை விரல் களால் பூமியில் நின்று கொண்டார்.''

''இவ்வாறு அவர் பல காலம் தவம் செய்தார். இறுதியில் அவர் முன்பு பிரம்மா தோன்றினர். அவருக்கு என்ன

வரம் வேண்டும் என்று பிரம்மா கேட்டபோது அவர் பல வரங்களைக் கேட்டார். அதில் முக்கியமான வரம் தனக்கு மரணம் வரக் கூடாது என்பதாகும்.

''பிரம்ம தேவர் அதைத் தர முன் வரவில்லை. பிறந்தவர் இறக்கத்தான் வேண்டும் என்ற நியதி இருந்ததால் பிரம்ம தேவர் மறுத்தார். ஆனால் அரசரோ, புத்திசாலியாக இருந்ததால் சில ஜீவராசிகளிடமிருந்தும், பொருட்களிடமிருந்தும் தனக்கு மரணம் வரக் கூடாது என்று கேட்டார். பிரம்மாவும் அப்படியே வரம் கொடுத்தார்.''

பிரகலாதன் சிரித்துக் கொண்டான்.

தன் தந்தை எவ்வளவு புத்திசாலி என்றறிய விரும்பினான் பிரகலாதன். ஆகவே தன் தந்தை எந்தெந்தவகைகளால் தனக்கு மரணம் வரக்கூடாது என்று விரும்பினார் என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டான். அவன் ஆசையைத் தெரிந்து கொண்ட சண்டனும் சொன்னான்.

''பெண்ணினாலும், பேரழகு படைத்த ஆணினாலும், இரண்டு மற்ற அவிகளாலும் தான் கொல்லப்படக்கூடாது. உயிருள்ள எந்த ஜீவராசியாலும், உயிரற்ற சடங்களாலும் தனக்கு மரணம் வரக் கூடாது. கணகளால் காணப்படுகின்ற இந்த உலகில இருக்கின்ற எந்தப் பொருளினாலும் மரணம் நேரக் கூடாது.''

''அது மட்டுமல்ல...''

''மண்ணுலகத்தின் மேலும் விண்ணுலகத்திலும் தான் கொல்லப் படக்கூடாது.''

''தேவர்களாலோ, அல்லது சிவபிரான், பிரம்மன் மற்றும் திருமால் ஆகியோர்களாலும் மற்ற மனிதர்களாலும் தன் உயிர் போகக் கூடாது.''

''நீரினால், நெருப்பினால, காற்றினால், தன் உயிர் போகக் கூடாது.''

''தேவர்களோ மற்றும் முனிவர்களோ இடும் சாபங்களினாலும் தான் இறக்கக் கூடாது.''

''வீட்டின் உட்புறத்திலும், வெளிப்புறத்திலும், தனக்கு மரணம் வரக்கூடாது. உலகில் இருக்கின்ற, அல்லது புதிதாகப் படைக்கப்படுகின்ற எந்த ஆயுதங்களும் தன்னை ஒன்றும் செய்ய முடியாமற் போகவேண்டும். நடு இரவிலோ பகற்போதிலோ, அவருக்கு மரணம் நிகழக்கூடாது.''

''ஐந்துபூதங்கள் எனப்படும், நீர், நெருப்பு, வாயு, வானம், மண் இவைகளின் கூட்டுறவினாலும் தனக்கு மரணம் நேரக் கூடாது.''

''இவைகள் எல்லாவற்றிலும் மேலாகத் தன்னாலும் தனக்கு மரணம் வரக்கூடாது.''

''என்றெல்லாம் உன் தந்தை பிரம்மதேவனிடம் வரம் வாங்கியுள்ளார். ஆகவே பிரகலாதா! உன் தந்தை சகல வல்லமை படைத்தவராக இருக்கின்றார். புரிந்து கொள்.''

சண்டன் சொன்னவைகளைக் கவனமுடன் கேட்டான் பிரகலாதன். தன் தந்தை நீண்ட நெடுங்காலம் இந்தஉலகில் வாழ ஆசைப்படுகிறார் என்பதை அவன் அறிந்தான்.

தன் தந்தை ஏன் இவ்வளவு வரங்கள் பெற்றார்? தக்க காரணமும் இருக்க வேண்டுமே? இதை அறிந்து கொள்ள விரும்பினான்.

''சண்டா என் தந்தைக்கு யாராவது விரோதிகள் உண்டா? விரோதிகள் இருந்தால் அவர்கள் என் தந்தையை விட வல்லவர்களாக இருப்பார்கள் என்று எண்ணுகின்றேன். நான் நினைப்பது சரிதானே?''

சண்டன் திடுக்கிட்டான். யாருடைய பெயரை அவன் சொல்லக் கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கின்றானோ அந்தப் பெயரை அவன் இப்போது சொல்லியாக வேண்டும்.

சர்வ உலகத்தையும் வென்று ஆளுபவர் இரணியன். எல்லாத் தேவர்களும் முனிவர்களும் அவருக்கு அஞ்சி வாழுகின்றார்கள். அப்படி இருக்கும் நிலையிலும் அரசருக்கு அஞ்சாமல் ஒருவர் இருக்கிறார். அவர்தான் நாராயணன். ஆனால் அவர் பெயரை தூக்கத்திலும் சொல்லக் கூடாது என்பது அரசருடைய கட்டளை. இதை மீற முடியாது. சண்டன் சமாளிக்கப் பார்த்தான்.

''பிரகலாதா! உனக்கு இதெல்லாம்தெரியவேண்டாம். சமர்த்தாக இரு. நான் சொல்லுவதைப்படி. நல்ல பிள்ளையாக இரு. இதுவே உனக்கு இப்போது வேண்டும். வா.வா... நேரமாகிவிட்டது''

பிரகலாதனின் கவனத்தை வேறு பக்கம் திருப்பிப் பார்த்தான் சண்டன்.

பிரகலாதனுக்குச் சிரிப்பு வந்தது.

இரணியனாகிய தன் தந்தை பயப்படும் ஒரே, ஒருவர் நாராயணன் தான் என்பதை பிரகலாதன் அறிவான். ஆனால் அப்பெயரைச் சொல்ல மற்றவர்கள் எப்படி நடுங்குகின்றார்கள் என்று அறிந்து கொள்ள அவனுக்கு ஆசை.

எல்லாருமாக ஆசிரமத்திற்குப்புறப்பட்டார்கள்

நாட்கள் இன்பமாகப் போய்க் கொண்டிருந்தன.

ஒருநாள் இரணியன்தன் மகன் பிரகலாதன் பெற்றக் கலவியைப் பற்றி அறிய விரும்பினான். வேதப் பயிற்சிகள் பெற்றிருக்கின்றானா? மற்றும் இவ்வுலகத்தை ஆளுகின்ற தன்னைப் பற்றி என்ன தெரிந்து கொண்டிருக்கின்றான் என்பதையும் அறிந்து கொள்ள எண்ணினான்.

குருகுலத்திற்குச் சேவகர்களை அனுப்பினான். அவர்கள் சென்று பிரகலாதனை அழைத்து வந்தார்கள். தன் மகன் வருவதை ஆசையோடு பார்த்தான் இரணியன். ஐந்தே

வயது நிறைந்திருந்த அழகான அக்குழந்தையைக் காணக் காண அவன் மகிழ்ந்து போனான்.

தான் தவம் செய்வதற்காக மந்தர மலைச் சாரலுக்குச் சென்றிருந்த போது, கர்ப்பவதியான தன் மனைவி தானவீ என்பவளை இந்திரன் சிறை செய்தான். ஆனால் நாரத முனிவரின் நல்ல போதனையால் இந்திரன் தானவீயை விடுதலை செய்தான். தானவீ நாரதர் ஆசிரமத்தில் தங்கி இருந்தாள். அந்த ஆசிரமத்தில் பிறந்தவன் பிரகலாதன்.

அருமையான அக்குழந்தை இரணியனுக்கு மிகவும் பிடிக்கும். ஆகவேதான் தன் அண்ணன்மார்களோடு கல்வி கற்கட்டும் என்று குருகுலத்திற்கு அனுப்பியிருந்தான் இரணியன்.

பிரகலாதன் வந்ததும் தன் தந்தைக்கு வணக்கம் செலுத்தினான்.

அவனை வாரியெடுத்து உச்சி மோந்தான். கன்னங்களில் முத்தம் மாறி மாறி இட்டான்.

''குழந்தாய் பிரகலாதா! குரு குலத்தில் மகிழ்ச்சியோடு இருக்கின்றாயா?''

இரணியன் கேட்டதும் பிரகலாதன் பதில் சொன்னான்.

''ஆம் தந்தையே! மகிழ்ச்சியோடு இருக்கின்றேன்.''

''உன் அண்ணன்மார்களோடு ஒற்றுமையாக இருக்கின்றாயல்லவா?''

''ஆம் தந்தையே!''

''எல்லாக் கல்விகளையும் ஒழுங்காகக் கற்கின்றாயா?''

''ஆம் தந்தையே! இவர்கள் எல்லாவற்றையும் விளக்கமாகக் கற்பிக்கின்றார்கள்.''

''மகிழ்ச்சி குழந்தாய் மகிழ்ச்சி! வேதங்கள் சொல்லுவ தற்குமுன்பு ஆரம்பிக்க வேண்டியமந்திரம் தெரியுமல்லவா?''

''நன்ருக அறிவேன் தந்தையே!''

''அப்படியா! உன் நாவினுல் அதைக் கேட்டு மகிழ்ச்சி யடைய விரும்புகின்றேன். எங்கே மகனே! அந்த மந்திரத்

இரணியன் தன் மகன் தன்னுடைய பெயரைச்சொல்லப் போகிருன் என்று ஆவலோடு காத்திருந்தான். ஆனுல் பிரகலாதன் அதைச் சொல்ல வில்லை

''தந்தையே! மந்திரத்தைச் சொல்லட்டுமா!''

''அதை எதிர்பார்த்துத்தானே நான் காத்திருக் கின்றேன். சொல் கண்மணி. சொல்.''

பிரகலாதன் இரண்டு கைகளையும் குவித்தான். இரு கண்களையும் மூடிக் கொண்டான். தன் மனதில் நிறைந்திருக் கும் நாராயணனின் அழகான திருவுருவத்தை எண்ணிக் கொண்டான்.

''ஓம் நாராயணுய நமஹ''

அற்புதமான குரல் வளத்துடன் பக்தி பூர்வமாகக் கூறினுன் பிரகலாதன்.

திடுக்கிட்டான் இரணியன்.

''ஓம் இரணியாய நமஹ'' என்று சொல்ல வேண்டிய மந்திரம் எப்படி மாறியது? யார் அவனுக்கு தன் எதிரியின் பெயரைக் கற்றுக் கொடுத்தார்கள்!

கோபத்தால் அவன் கண்கள் சிவந்தன....அங்குமிங்கும் பார்த்தான் சண்டன். அமர்க்கன் மற்றும் குருகுலச் சிறுவர்கள் நடுங்கினர். பிரகலாதன் இவ்வாறு சொல்வான் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்க வில்லை.

சபையில் இருந்த சுக்ராச்சாரியார் திடுக்கிட்டார்.

அரண்மனையிலும் மற்ற இடங்களிலும், ஏன் எந்த உலகத்திலும் சொல்லப்படாத நாராயணனின் நாமம் எப்படி குருகுலத்தில் நுழைந்தது?

கோபத்தால் துடித்தாலும் இரணியனுக்கு பிரகலாதன் மேல் பாசம் இருந்தது. ஆகவே தன் கோபத்தை அடக்கிக் கொண்டான். பிரகலாதனைப் பார்த்தான்.

''மகனே! யாரோ தவறாக உனக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள் என்று எண்ணுகின்றேன். நீ சொன்னாயே அது அல்ல சொல்ல வேண்டிய மந்திரம். வேறு மந்திரம் உனக்குத் தெரியாதா, இப்போது சொல் வேதங்களை ஆரம்பிப்பதற்கு முன்பு சொல்ல வேண்டிய மந்திரம் எது?''

பிரகலாதன் தயங்கவில்லை.

''ஓம் நாராயணாய நமஹ''

இதைக் கேட்டதும் முன்னிலும் பன்மடங்கு கோபம் இரணியனுக்கு ஏற்பட்டது. உலகத்திற்கெல்லாம் இறைவனான தன் பெயரைச் சொல்லாமல் தன் எதிரியின் பெயரைச் சொல்லுகின்றானே!

''பிரகலாதா! உலகத்திற்கெல்லாம் கடவுளான என் கண்முன் நின்று கொஞ்சமும் பயமில்லாமல் பேசுகின்றாயே. அந்த நாராயணன் பெயரைச் சொல்லச் சொன்னவன் யார்?''

இடி முழங்குவது போலக் கத்தினான் அவன்.

சண்டனும் அமர்க்கனும் நடுங்கினார்கள். பிரகலாதன் கற்றதுதங்களிடம். அவனுக்கு இப்படி நாம் தான் கற்றுக் கொடுத்தோம் என்று அரசன் எண்ணிவிட்டார் என்று அஞ்சினார்கள்.

இவர்களின் தந்தையான சுக்ராச்சாரியார் நிலைகுலைந்து போய் நின்றார். இரண்டு தலைமுறைக்கு முன் விரோதியாக இருந்த நாராயணன் பெயர் பிரகலாதனுக்கு எவ்வாறு தெரிந்தது? யார் சொல்லி இருப்பார்கள்?

பிரகலாதன் சிரித்தான்.

''தந்தையே! சர்வ உலகங்களுக்கும் தலைவன் பெயரைத் தானே முன்னே சொல்ல வேண்டும்? அதைத் தானே சொன்னேன்?''

பிரகலாதன் அமைதியாகப் பேசினான்.

''யாரடா சர்வ உலகங்களுக்கும் நாயகன். நானே தான் நாயகன். 'ஓம் இரணியாய நமஹ' என்று சொல். அதுதான் மந்திரம். இந்தப் பெயரைச் சொல்லிவிட்டுத் தான் வேதத்தையே ஆரம்பிக்க வேண்டும். சொல்லுகிறாயா என்ன?''

மகனையே மிரட்டும் வகையில் பேசினான் இரணியன்.

பிரகலாதன் பதில் ஏதும் பேசவில்லை.

''ஆச்சாரியாரே!''

இரணியன் சுக்கிராச்சாரியாரை அழைத்தான்.

அவர் அருகில் வந்து நின்றார்.

''ஆச்சாரியாரே! உங்கள் பிள்ளைகள் சரியான விதத்தில் என் மகனுக்குக் கற்றுத் தரவில்லை. எதையெதையோ கூறி அவன் மனதைக் கலைத்திருக்கிறார்கள். இனி நீங்களே இருந்து சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள். அவன் மனதை மாற்றுங்கள்.''

சுக்கிரர் ஆகட்டும் என்பது போலத் தலையையாட்டினார்.

''மகனே! பிரகலாதா! உன் மனம் குழம்பியிருக்கிறது. இனி உனக்கு நம் ஆச்சாரியாரே, கற்றுத் தருவார்! நன்கு கற்று புத்திசாலியாக திகழ வேண்டும். இனி நாராயணன்

பெயரைச் சொல்லாதே, அவன் நம் குலத்திற்கே விரோதி என்று தெரிந்து கொள்.''

சோபமாகப் பேசியவன் இப்போது குழைந்து பேசினான். மகன் மேல் உள்ள பாசம் அவனை அப்படிப் பேச வைத்தது.

இரணியன் அங்கிருந்து சென்றான். சண்டனும் அமர்க்கனும் பரிதாபமாக விழித்தனர். ''நல்லவேளை தப்பித்து விட்டோம்'' என்று அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

சுக்கிராச்சாரியார் பிரகலாதனை அழைத்துக் கொண்டு குரு குலத்திற்குத் திரும்பினார். வழியில் அவர் ஒன்றும் பேச வில்லை.

ஆசிரமம் வந்தவுடன் பிரகலாதனைப் பார்த்தார் அவர். எந்தவிதமான கலக்கமும் இன்றி அவன் நின்று கொண்டிருந்தான் ''பிரகலாதா! என் பிள்ளைகளின்வாழ்வைமுடிக்கஇருந்தாயே! நல்லவேளை பிழைத்தார்கள். அவர்களா உனக்கு இப்படிக் கற்றுக் கொடுத்தார்கள்?''

''இல்லை குருவே! அவர்கள் கற்றுக் கொடுத்தது வேறு, நான்கூறியது வேறு.''

அமைதியாகப் பதில் கூறினான் பிரகலாதன்.

சுக்கிராச்சாரியாருக்குக் கோபம் வந்தது.

''பிரகலாதா! இப்படிப் பதில் கூறியதால் நீயும் கெட்டாய். எங்களையும் கெடுத்தாய். உனக்கு இதைக் கற்றுக் கொடுத்தவர் யார்? உடனே சொல்.''

ஆத்திரத்துடன் மிரட்டினார் சுக்கிராச்சாரியார்.

அப்போதும் பிரகலாதன் கலங்கவில்லை. அச்சப் படவும் இல்லை.

''குருவே! நான் எந்தத் தவறையும் செய்யவில்லை. நாராயணனுடைய திருவெட்டெழுத்து மந்திரம்சொன்னது

தவறு! அம்மந்திரத்தைச் சொல்லி என்னை உய்வித்துக் கொண்டேன். என்னுடைய குருவாகிய நீங்களும் இந்த மந்திரத்தைச் சொல்லுங்கள். நீங்களும் உய்வீர்கள். இந்த மந்திரத்தைக் கேட்க வைத்ததின் மூலம் என் தந்தையையும் உய்வித்தேன். எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமான பரம்பொருளான நாராயணனின் பெயரைச் சொல்வது குற்றமா?''

சுக்கிராச்சாரியார் உடனடியாகப் பதில் அளிக்கவில்லை. பிரகலாதனின் கேள்விக்குப் பதில் அவர் அறிவார். ஆனால் எப்படி அவரால் சொல்ல முடியும்? அப்படிச் சொன்னால் இரணியன் பொறுத்துக் கொள்வானா?''

''அப்பா பிரகலாதா! உனது தந்தை தேவர்களுக்கெல்லாம் தலைவன். மும்மூர்த்திகளுக்கும் தலைவன். இதையெல்லாம் நீ அறிய மாட்டாய். ஆனால் நான் அறிவேன். ஆகவே தான் சொல்லுகிறேன். இனி உன் தந்தையின் பெயரையே சொல்ல வேண்டும். மற்றவர் பெயரைச் சொல்லி எங்கள் வாழ்க்கையை வீணாகக் கெடுத்து விடாதே.''

கெஞ்சும் பாவனையில் சுக்கிராச்சாரியார் பேசினார்.

''ஐயனே! தங்களை மறுத்துப் பேசுகின்றேன் என்று எண்ணாதீர்கள். நாராயணன் பெயரையன்றி வேறு பெயர்களை நான் தெரிந்து கொள்ளவில்லை. இனி நான் கற்க வேண்டியனவும் இல்லை. ஐயனே! அந்த நாராயணன் என் மனத்தின் உள்ளே புகுந்து கொண்டான். அவன் இப்போது இந்த நெஞ்சில் தங்கியிருக்கின்றான். ஆகவே அவனையன்றி வேறு ஒன்றையும் நான் புகழ மாட்டேன். அவனையன்றி வேறு ஒருவரையும் நான் வணங்க மாட்டேன்.''

பிரகலாதன் தீர்மானமாகக் கூறினான்.

அவனை இனிமேல் தன்னால் மாற்றமுடியாது என்பதைச் சுக்கிராச்சாரியார் அறிந்து கொண்டார். இனி இரணிய னின் தண்டனையிலிருந்து எப்படித் தன் பிள்ளைகளைத் தப்புவிப்பது என அவர் யோசிக்கலானார்.

சில நாட்கள் சென்றன.

பிரகலாதன் குருகுலத்தில் நன்றாகவே கற்று வந்தான். முன்பெல்லாம் அவன் தனியாகச் சிந்தனை செய்து கொண் டிருப்பான். ஆனால் இப்போது அவனைச் சுற்றி எப்போதும் பிள்ளைகள் கூடியிருப்பார்கள்,

அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

பிரகலாதன் பிள்ளைகளுக்கு நிறைய விஷயங்களைப் பற்றி சொல்ல ஆரம்பித்திருந்தான். அவ்விஷயங்கள் குழந்தைகளுக்குப் புரியாது. ஆனாலும் பிரகலாதன் அவைகளைப் பற்றி அதிகம் கவலைப்படவில்லை. நாட்கள் செல்லச் செல்ல கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுக்குப் புரிய ஆரம்பித்தது.

''இந்த உலகத்தில் நாம் பிறக்கின்றோம். வளர்கின் றோம். ஒரு நாள் மரணமும் அடைகின்றோம். எந்த நோக்கமும் இல்லாமல் வாழவும் செய்கின்றோம். இது வாழ்க்கை ஆகிவிடாது.''

பிரகலாதன் சொன்னான். மற்ற குழந்தைகள் கவன மாகக் கேட்டன.

''மரணமடைந்தவன் மறுபடியும் பிறக்கின்றான். முன்பு போலவே வாழ்கின்றான். பிறகு மரணமும் அடை கின்றான்.''

''சிலர் செல்வர்கள் வீட்டில் பிறக்கின்றார்கள். சிலர் வறுமையில் வாடுகின்றார்கள். எல்லாரும் ஒரே மாதிரி

யாகப் பிறப்பதில்லை. இதைப் பற்றி யாராவது சிந்தனை செய்திருக்கின்றீர்களா?''

பிரகலாதன் கேட்டதும் ஒருவரும் பதில் சொல்ல வில்லை. பிரகலாதனே பதிலையும் சொன்னான்.

''ஒருவன் சிறப்பைப் பெறுவது அவனது தவத்தினால் தான். நல்ல காரியங்கள் அனைத்தும் தவம் தான். இதனால் அவன் நல்ல பதவிகள் பெறுகிறான்; செல்வம் பெறுகின் றான். சுகமான வாழ்க்கையும் வாழ்கின்றான். ஆனால் அப்படி நல்லவைகளைச் செய்யாதவன் பதவிகள் பெறுவ தில்லை; செல்வங்களைப் பெறுவதில்லை: சுகமான வாழ்க்கை யும் வாழுவதில்லை!''

சிலர் புரிந்தவர் போல் தலையாட்டினர்.

''பிள்ளைகளே! நற்செய்கைகளும், தீய செயல்களும் மறுபடியும் பிறக்க வைக்கின்ற பந்தங்களாகும். மறுபடியும் பிறக்காமல் இருக்கப் பரம்பொருளைச் சதா தியானிக்க வேண்டும். அந்தப் பரம் பொருள்தான் நாராயணன், பிள்ளைகளே! சொல்லுங்கள், ஓம் நாராயணாய நமஹ.''

மகுடியின் ஓசையில் மயங்கிய நாகம் போலானார்கள், குருகுலக் குழந்தைகள். பிரகலாதன் என்ன சொன்னானோ அதையே ஏற்றுக் கொண்டார்கள். அவன் அரசனின் குமாரன் என்பது ஒரு காரணம். அவனுடைய இனிமை யான பேச்சுக்கள் மற்றொரு காரணம். ஆகவே அக்குழந் தைகள் அனைவரும் ''இரணியாய நமஹ'' என்று சொல் வதை மறந்தார்கள். ''நாராயணாய நமஹ'' என்று சொல்லத் தொடங்கினார்கள்.

இவைகளை சண்டனும் அமர்க்கனும் பார்த்தார்கள்.

அவர்கள் இப்படி நடப்பதை விரும்பவில்லை. அரசருக்கு இது தெரிந்தால் தங்கள் தலை உருளும் என்பதையறிந்தார் கள். ஆனால் பிரகலாதனைக் கண்டிக்கவும் மனம் வரவில்லை

அவர்களுக்கும் அவன் சொல்லும் விஷயங்கள் பிடித்தன வாக இருந்தன.

குருகுலத்தையே மாற்றிக் கொண்டிருந்தான் பிரக லாதன்.

ஒரு நாள் சுக்ராச்சாரியார் பிரகலாதன் கல்வி கற்கும் முறைகளைத் தெரிந்துகொள்ள விரும்பினர். ஆசிரமத்திற்கு வந்தார். பிரகலாதனைப் பார்த்தார். அவனுடைய அழகு முகம் அவரைக் கவர்ந்து இழுத்தது. அதன் அழகிலே சற்று நேரம் மெய்ம் மறந்து இருந்தார்.

''அப்பா பிரகலாதா! இப்படி என் அருகில் வா!''

பிரகலாதன் சுக்கிராச்சாரியாரின் அருகில் போய் நின்றான்.

''ஒழுங்காகப் பாடங்களையெல்லாம் கற்கின்றாயா? என் பிள்ளைகள் கற்றுத் தருகின்றார்களா?''

''ஆம் குருவே! எதையும் நான் விட்டுவிட வில்லை. எதைத் தெரிந்து கொள்ள வேண்டுமோ அவைகளைத் தெரிந்து கொள்ளுகின்றேன்.''

''அப்படியா! மகிழ்ச்சி. எங்கே, வேதங்களைத் தொடங்குவதற்கு முன் யாருடைய நாமம் சொல்லவேண்டும்? அதைச் சொல் பார்க்கலாம்.''

இரண்டு கைகளையும் குவித்தான் பிரகலாதன். அவன் மனதிற்குள் நாராயணன் வந்து நின்றான். அவன் உச்சரித்தான்.

''ஓம் நமோ நாராயணாய நமஹ''

திடுக்கிட்டார் சுக்கிராச்சாரியார்.

அவருடைய மிரட்டல்களும் கோரிக்கைகளும் இன்னும் பிரகலாதன் புரிந்து கொள்ளாமல் போயினவா? பலமுறை கூறியும் அவன் மனம் மாறவில்லையே? எவ்வளவோ முறை இரணியனைப் பற்றிக் கூறிய பிறகும் அவன் பெயரைச் சொல்லப் பிரகலாதன் மறுக்கின்றானே! இனி அவனிடம் கெஞ்சுவதில் பயனில்லை. நேராகப் புறப்பட்டார், அரண்மனை நோக்கி. அரசன் இரணியன் அமர்ந்திருந்தான்.

''அரசே! என்னை மன்னிக்க வேண்டும். எவ்வளவோ முயன்று விட்டேன். தங்கள் திருககுமரன் மாறவே இல்லை.''

''அப்படியா? ஆச்சாரியாரே! தாங்கள் குழந்தையை மிரட்டி இருப்பீர்கள். பயந்து போய் என் பெயரைச் சொல்லாமல் இருந்திருப்பான். குழந்தைதானே அவன்? சொல்ல வேண்டிய விதத்தில் சொன்னால் கேட்டு விட்டுப் போகின்றான். அவனை அழைத்து வாருங்கள். நானே கேட்கிறேன்.''

இரணியன் இப்படி பேசிவிட்டு தன் காவலர்களிடம் பிரகலாதனை அழைத்து வருமாறு உத்தரவிட்டான்.

காவலன் சென்று பிரகலாதனை அழைத்து வந்தான்.

பிரகலாதன் அரசசபைக்கு வந்தான். தன் தந்தையைக் கண்டான். உடனே அவர் காலடியில் விழுந்து வணங்கினான்.

மகிழ்ந்து போன இரணியன் பிரகலாதனைத் தூக்கியெடுத்து முத்தம் இட்டான். தன்மடியில் உட்கார வைத்தான்.

''மகனே பிரகலாதா! எல்லாம் ஒழுங்காகக் கற்கின்றாயா?''

''ஆம் தந்தையே!''

''மகிழ்ச்சி! இதோ பார்த்தாயா நம் குருநாதரை. நீ ஏதேதோ புதிது புதிதாகப் பேசுகிருயாமே? குருநாதர் கற்றுக் கொடுக்காத புதுமந்திரங்களைக் கூறுகின்ருயாமே? அப்படியா?''

''தந்தையே! இல்லாதவற்றை நான் என்றைக்கும சொன்னதில்லை''

இரணியன் சுக்கிராச்சாரியாரைப் பார்த்தான். ஒன்றும் அறியாத இந்த இளம்பிள்ளை மீது அபாண்டமாக எதை எதையோ கூறுகின்ருர் சுக்கிராச்சாரியார் என தீர்மானித் தான்.

''அப்பா மகனே! உன் வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ச்சி யடைகின்றேன். நீ போய் வா.''

''சரி தந்தையே! சென்று வருகின்றேன்.''

பிரகலாதன் புறப்பட்டான்.

சுக்கிராச்சாரியார் திடுக்கிட்டார்.

தான் சொல்ல வந்தது என்ன, நடைபெறுவது என்ன? அரசன் எதையும் பிரகலாதனிடம் விசாரிக்காமல் அனுப்பு கின்ருனே!

''அரசே! சற்றுத் தாமதம் செய்யவேண்டும். பிரக லாதன் என்ன சொல்லுகின்ருன் என்பதைத் தீர்க்கமாக நீங்கள் விசாரிக்க வில்லையே?''

சுக்கிராச்சாரியார் சொன்னதைக் கேட்டான் அரசன்.

''என்ன ஆச்சாரியாரே! என் மகன் தான் இல்லாதது எதையும் சொல்லவில்லை என்கிருனே?''

''அதுசரி. இல்லாதது எதுவும் சொல்லவில்லை என்கிரு னல்லவா? அது எது என்று கேட்டுப் பாருங்கள்!''

''மகனே! பிரகலாதா! குருநாதர் சொல்வதைக் கேட்டாயல்லவா? நீ அப்படி என்னதான் பேசிவிட்டாய்?''

''தந்தையே! புதிதாக ஒன்றும் இல்லை. வேதம் முதலானவற்றைத் தொடங்கும்போது யாருடைய நாமம் சொல்ல வேண்டுமோ அந்த நாமத்தைத்தான் சொன்னேன்.''

''பார்த்தீர்களா குருநாதரே! என் மகன் என் நாமத்தைத்தான் சொல்லியிருப்பான். இதில் என்ன சந்தேகம்?''

''அரசே! அதைத்தான் நான் விசாரிக்க வேண்டும் என்கிறேன்.''

''பிரகலாதா! குருநாதரின் சந்தேகம் நீங்கவில்லை. நீ சொல்லிவிடு. என் நாமத்தைத்தானே முதலில் சொல்லி ஆரம்பிக்கின்றாய்?''

''இல்லை தந்தையே!''

''இல்லையா? அப்படியானால் நீ இன்னமும் என் எதிரியின் பெயரைத்தான் சொல்லுகின்றாயா?''

இரணியன் மிகுந்த கோபத்துடன் கேட்டான்.

''தந்தையே! பரம்பொருள் நாராயணன் யாருக்கும் எதிரியல்ல. உலகத்தில் நடைபெறும் இயக்கங்கள் அனைத்தும் நாராயணனாலே நடைபெறுகின்றன. உலகில் பிறந்துள்ள எல்லா உயிர்க்கும் உறுதிப் பொருள் நாராயணனின் நாமமே. அந்தத் திருநாமமாகிய 'ஓம் நாராயணாய நமஹ' என்பதுதான் அந்த மந்திரம். அதைச் சொல்லுவதுதான் என் கடமை. இதிலிருந்து நான் வழுவமாட்டேன்.''

''பிரகலாதா!...''

அரண்மனையே இடிந்து விழுந்துவிடுமோ என்று அஞ்சும்படி கத்தினான் இரணியன்.

''ஏய் பயலே! இவ்வுலகத்தை இயக்குகிறவன் நான். என் பெயரைக் கேட்டுச் சூரியன், சந்திரன் ஆகியோர் நடக்கிறார்கள். மற்ற தேவர்களும் என் ஆணையின்படி காரியங்கள் நடத்துகின்றார்கள். அப்படி இருக்க, என் விரோதியைப் புகழ்ந்து பேசுகின்றாயா? உன் நாக்கை அரிந்து எறிந்திருப்பேன். ஆனால் நீ என் மகன். அப்படிச் செய்ய என் மனம் இடந்தரவில்லை. வேண்டாமடா மகனே! அந்தத் திருடனின் பெயரைச் சொல்லாதே. என் பெயரைச் சொல்.''

''தந்தையே மன்னிக்க வேண்டும். இந்த உலகின் சர்வ ரட்சகன் நாராயணன் ஒருவனே. ஆகவே அப்பெயரைத் தான் சொல்வேன்.''

''ஏய் பிரகலாதா! எனக்கு அதிகமான கோபத்தை ஏற்படுத்துகின்றாய். திமிராகப் பேசாதே. எல்லாருக்கும் முன்னவரான மும்மூர்த்திகளும், தேவர்களும், மற்றவர்கள் யாவரும் எனது பெயரையே கூறக் கடமைப்பட்டவர்கள். ஆனால் நீயோ அப்பெயரைச் சொல்ல மறுக்கின்றாய். பேதையான சிறு பிள்ளை நீ என்று பொறுத்துப் பார்க்கின்றேன். இன்னும் ஒரு முறை நீ அவன் பெயரைச் சொன்னால் நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது.''

''தந்தையே! ஒருமுறை என்ன, ஓராயிரம் முறை அவன் நாமமே சொல்வேன். தங்களை நான் மதிக்கின்றேன். ஆனால் நாராயணன் தங்களுக்கும் மேலான பரம்பொருள். ஆகவே அவனை ஆராதிக்கின்றேன்.''

அதற்குமேல் இரணியனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

''ஏய், யார் அங்கே. இம் மானிடப் பதரை இழுத்துச் சென்று சிறையில் தள்ளுங்கள். சிறைக்கூடம் இப் பயலுக்கு புத்திபுகட்டும்.''

வெளியில் காத்திருந்த ஏவலாளர்கள் உடனே அங்கே வந்தனர். அவர்கள் பிரகலாதனைச் சிறைக்கு அழைத்துச் சென்றனர்.

சிறைக்குள் சென்றதால் சிறுவன் கவலைப்படவில்லை. நாராயணனின் நாமத்தை சொல்வதற்குச் சிறைக்கூடம் சிறந்த இடம் என அவன் மகிழ்ந்தான்.

பல நாட்கள் சென்றன. ஒரு நாள் இரணியன் பிரகலாதன் திருந்தி இருப்பான் என எண்ணினன். அவனை அழைத்துவரச் செய்தான். பிரகலாதன் சிறைச்சாலையில் இருந்து அரச சபைக்கு வந்தான்.

தன் மகன், அரசகுமாரனாக இருப்பவன்—சிறைச் கூடத்தில் என்ன துன்பங்களை அனுபவித்தானோ? இரணியனின் கல்மனமும் கலங்கியது.

இவைகள் எல்லாம் எதற்காக? தன் மகன் திருந்த வேண்டும் என்பதற்குத்தானே என்று தனக்குள் சமாதானம் செய்து கொண்டான்.

''மகனே! பிரகலாதா! உன்னைச் சிறைச்சாலைக்கு அனுப்பவேண்டும் என்று எனக்கு ஆசையில்லை மகனே. ஆனால் நம் குலத்திற்கே விரோதியானவனை நீ மறந்துவிட வேண்டும் என்பதற்காகத்தான் அந்தத் தண்டனையை உனக்கு நான் அளித்தேன். நீ நன்றாகத் திருந்தியிருப்பாய் என்று நம்புகின்றேன். எங்கே மகனே! என்னை வாழ்த்தி ஒரு சொல் சொல்.''

இரணியன் கெஞ்சினன். ஆனால் பிரகலாதன் கலங்க வில்லை.

''தந்தையே! என்றைக்காவது நான் தவறு செய்திருந்தால் அல்லவா திருந்த வேண்டிய நிலைவரும். சிறைச்சாலை முன்னிலும் பன்மடங்கு நாராயணனின் பெருமையை அறிய

வைத்திருக்கிறது. தந்தையே! என்றைக்கும் பரம்பொருள் நாராயணன் தான். இன்னும் சொல்லுவேன். எப்போதும் சொல்லுவேன். ஓம் நாராயணாய நமஹ! என்று என் நெஞ்சில் இருந்து யாராலும் நீக்கிவிட முடியாது.''

இரணியன் அலறினான். சிறை வாழ்க்கை கூடத் தன் மகனைத் திருத்தவில்லையா?

''ஏய்! இப்பொடிப் பயலுக்கு சிறைச்சாலை ஏற்ற இடம் அல்ல. என் விரோதியின் பெயரைத் துதிக்கும் இவனைக் கொன்றுவிடுங்கள். எனக்கு மகனே பிறக்கவில்லை என்று இருந்து விடுகின்றேன்.''

உத்திரவு இட்டுவிட்டு வேகமாகச் சென்றான் இரணியன்.

காவலர்கள் பிரகலாதனைச் சூழ்ந்துகொண்டார்கள்.

அவர்கள் கண்கள் கோபத்தினால் தீயைக் கக்கின. யானைக் கன்றைப்பற்றிக் கொண்ட சிங்கக்கூட்டம் போன்று பிரகலாதன் மேல் பாய்ந்தார்கள். வாட்களாலும் மழுக்களாலும் அவனை வெட்ட முயன்றனர்.

என்ன ஆச்சரியம்!

அவன் மீது வீசப்பட்ட வாட்கள் முனை மழுங்கி கீழே விழுந்தன. மழுக்கள் முறிந்து விழுந்தன.

அவர்கள் ஆச்சரியப்பட்டனர். இத்தனை நாட்களிலும் கண்டும் கேட்டும் அறியாத அதிசயங்கள் அவை. அவர்கள் வீசிய வாட்கள் இலக்கை வெட்டாமல் இருந்ததில்லை. ஆனால் இப்போது வாட்கள் முனை மழுங்கிவிட்டன.

பதறிப்போனார்கள் கொலைகாரர்கள். அரசனைக் காண ஓடினார்கள்.

அவர்களின் தலைவனுக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை.

''அரசே! பிரகலாதன் சாகவில்லை. வாட்களால் அவனை வெட்ட முடியாமற் போயிற்று. மழுக்கள் முறிந்து விழுந்து விட்டன. இனி என்ன செய்வது என்று தெரியவில்லை!''

ஒருகணம் இரணியன் மகிழ்ந்தான். தன் பாச மகன் பிரகலாதன் நல்ல வேளை இறந்துபடவில்லை. ஒரே ஒரு கணந்தான் அந்த மகிழ்ச்சி இருந்தது. அடுத்தகணம் அவனுக்கு ஆத்திரம் வந்தது. தன் உத்திரவை நிறைவேற்ற முடியாமல் போனதற்கு யார் காரணம்? அந்த நாராயணன் ஏதோ மாயம் செய்துவிட்டான்.

நாராயணனின் நினைவு வந்ததும் இரணியனின் கோபம் பன்மடங்கு பெருகியது. ஆத்திரத்தால் அறிவிழந்தான்.

''பிரகலாதனை நெருப்பில் இட்டுப் பொசுக்குங்கள். போங்கள்! அவன் இனி உயிரோடு இருக்கக் கூடாது.''

ஆத்திரத்தில் உத்திரவு இட்டான். காவலர்கள் சென்றனர்.

பெருநெருப்பு வளர்க்கப்பட்டது. அதில் தள்ளுவதற்குப் பிரகலாதனைத்தயார்படுத்தினார்கள் கொலைக்காரர்கள்.

பிரகலாதனை இழுத்துக் கொண்டு வந்தார்கள். நெருப்பின் முன் நிறுத்தப்பட்டான் அவன். தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. நாராயணனின் திருவடிகளை நினைத்தான் பிரகலாதன்.

காவலர்கள் அவனைத் தூக்கி நெருப்பில் இட்டனர்.

''ஓம் நாராயணாய நமஹ, ஓம் நாராயணாய நமஹ'

பிரகலாதன் நாவில் இருந்து இந்த மந்திரம் திரும்பத் திரும்ப வந்து கொண்டே இருந்தது.

கடுமையான வெப்பத்தைத் தரும் நெருப்பு பிரகலாதனுக்குக் குளிர்ச்சியைத் தந்தது.

நெருப்பு அவன் உடலைச் சுடவில்லை.

கொலைக்காரர்கள் அஞ்சி நடுங்கினர்.

நெருப்பு இதுவரை சுடாமல் இருந்ததில்லை. ஆனால் இப்போது சுடாமல் இருக்கின்றது.

கதறிக் கொண்டே இரணியன் முன்பு போய் நின்றார்கள்.

''அரசே! பிரகலாதனை நெருப்பில் இட்டோம். ஆனால். ஆனால்....''

சொல்லவும் முடியாமல் திணறினார்கள் அவர்கள். அவர்களுக்கு இரணியன் தண்டனை தந்து விடுவான் என்ற பயம் இருந்தது.

''ஆ! அப்படியா! என்ன அதிசயம்! நெருப்பு கூடவா அவனைச் சுடவில்லை. உம். இருக்கட்டும். அவனை விடாதீர்கள். பூமியில் புதைத்து, அவன் தலையை மட்டும் வெளியே நீட்டும்படி செய்யுங்கள். மதங்கொண்ட யானைகளின் கால்களால் அவன் தலையை இடறச் செய்யுங்கள். இம்முறை அவன் நிச்சயம் தப்ப முடியாது.''

அரசனின் ஆணையை ஏற்றுக் கொண்டவர்கள் அகன்றார்கள்.

பிரகலாதனைப் பூமியில் அவன் தலையளவிற்குப் புதைத்தார்கள். பிரகலாதன் எந்த வெறுப்பையும் கொள்ளவில்லை. மதம் கொண்ட யானைகள் கொண்டு வரப்பட்டன. அவைகள் வேகமாக பிரகலாதனின் தலையைத் தன் கால்களால் இடற வந்தன.

பிரகலாதன் நாராயணனை மனதிற்குள் நினைத்தான்.

''நாராயணா! எங்கள் குலத்தில் முன்பு தோன்றியவர் கஜேந்திரன் என்ற யானை. அவரை ஒரு நாள் முதலை

யொன்று பற்றிக்கொண்டது. அப்போது அவர் 'ஆதிமூலமே' என்று உன்னை அழைத்தார். அப்போது அவரைக் காப்பாற்ற கருடன் மீது ஏறிவந்தவன் நீ. இப்போது அவ்வினத்தைச் சார்ந்த யானைகள் இப்போது இந்தப் பாலகனைக் கொல்ல வருகின்றன. என்ன செய்ய வேண்டுமோ அதை நீ செய்.'

பிரகலாதனின் பிரார்த்தனையை நாராயணன் கேட்டார்.

கொல்ல வந்த யானைகள் பிரகலாதனின் அருகில் வந்து நின்றன. தங்கள் தலைகளைச் சாய்த்து பிரகலாதனை வணங்கின. துதிக்கைகளால் அவன் முகத்தைத் தடவின. சில யானைகள் மண்ணிலிருந்து அவனைத் தூக்கியெடுத்தன.

அரக்கர்கள் பயந்து நடுங்கினர். அவர்கள் மீது பாய்ந்து அவர்களைக் கொல்ல ஆரம்பித்தன யானைகள். ஓடி ஒளிய ஆரம்பித்தனர் அவர்கள்.

இச்செய்தி இரணியனுக்கு எட்டியது. ''யானைகளைக் கொன்று விட்டு, பிரகலாதனை மலையுச்சியிலிருந்துஉருட்டித் தள்ளி விடுங்கள'' என உத்திரவு இட்டான்.

அவ்வுத்திரவுகளை ஏற்றுக் கொண்ட அரக்கர்கள் பிரகலாதனை நெருங்கினர்கள். அப்போதும் பிரகலாதன் கலங்கவில்லை. இதுவரை தன்னைக் காப்பாற்றிய அப்பரம் பொருள்நாராயணன்எப்போதும் தன்னைக் காப்பாற்றுவான் என்று நம்பினன்.

மலையுச்சிக்குப் பிரகலாதனை இழுத்துச் சென்றார்கள்.

மலையின் உச்சியிலிருந்து தரையைப் பார்த்தவர்களுக்குத் தலையைச் சுற்றியது. அங்கிருந்து விழுந்தால் பொறுக்குவதற்கு எலும்புத் துண்டு ஒன்றுகூடக் கிடைக்காது என்று அவர்கள் எண்ணினர்.

''பிரகலாதா! இப்போதாவது 'இரணியாய நமஹ' என்று ஒரேயொரு தடவை சொல்லிவிடு. உன் தந்தை

உன்னை மன்னித்து விடுவார். உன் உயிரை நீ காப்பாற்றிக் கொள்ளலாம்."

அவர்கள் கெஞ்சிப் பார்த்தனர். ஆனால் பிரகலாதன் அதற்கு இணங்கவில்லை. நாராயணனின் நாமம் தவிர வேறொன்றையும் தன் நாக்கினால் சொல்ல அவன் மறுத்து விட்டான்.

மலையின் உச்சியில் இருந்து அவனைத் தள்ளினர்.

பிரகலாதன் உயரமான இடத்திலிருந்து உருள ஆரம்பித்தான். நாராயணனின் நாமத்தை அவன் மனதார உச்சரித்தான். பூப்போல அவன் உருண்டு உருண்டு தரைப் பகுதிக்கு வந்து சேர்ந்தான். மலையிலிருந்து அவனை உருட்டியவர்கள் பிரகலாதன் இறந்திருப்பான் என எண்ணியிருந்தனர். ஆனால் அவர்கள் முன்னால் பிரகலாதன் போய் நின்றான்.

உடம்பில் எந்த இடத்திலும் ஒரு சிறு கீறல் கூட இல்லை. அவர்களால் நம்பமுடியவில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை.

ஓடினார்கள் அரசனைப் பார்க்க.

"அரசே! என்ன ஆச்சரியம்! பிரகலாதனை மலையிலிருந்து உருட்டிவிட்டோம். உடம்பில் ஒரு சிறு கீறல்கூட இல்லை. அவன் மாயங்களைக் கற்றிருக்க வேண்டும். இனி செய்யவேண்டிய காரியம் என்ன என்று உத்திரவு இடுங்கள் அரசே!"

காவலர்கள் பதைப்புடன் கூறியதைக் கேட்டான் இரணியன். மாயங்களைக் கற்றிருப்பானோ பிரகலாதன் என்று எண்ண ஆரம்பித்தான்.

"காவலர்களே! இனியும் பொறுப்பதற்கில்லை. ஆழமான கடலில் எறியுங்கள். அவன் எப்படியும் ஒழிந்தால் சரி. போய் உடனே உத்திரவை நிறைவேற்றுங்கள்."

இரணியன் கட்டளையிட்டான்.

கட்டளையை மேற்கொண்டு காவலர்கள் சென்றனர். பிரகலாதனை இழுத்துவரச்செய்து அவனிடம் அரசனின் உத்திரவைத் தெரிவித்தனர்.

பிரகலாதன் சிரித்தான். இந்த எளிய உயிரைக் கொல்ல இவ்வளவு பாடுபட வேண்டுமா? நாராயணனின் திருநாமம் இதுவரையில் தன்னைக் காத்து இருக்கிறது. இனியும் காக்கும். எப்போது இந்த உயிர் பிரிய வேண்டுமோ அப்போதுதானே பிரியும்? அதற்கு முன் என்ன செய்தால்தான் என்ன?

கடலில் அவனை எறிவதற்குத் தயார் ஆனார்கள் காவலர்கள்.

ஆழமான பகுதிக்குச் செல்லவேண்டுமல்லவா? ஓடம் ஒன்று கொண்டுவரப்பட்டது. அதில் பிரகலாதனை ஏற்றினார்கள். ஓடம் மிதந்து சென்று கடலின் ஆழமான பகுதிக்கு வந்தது.

''பிரகலாதா! பார்த்தாயா கடலை? அலை வீசும் கடல். இதில் உன்னை எறியப்போகின்றோம். பிறகு நாங்கள் இதே ஓடத்தில்திரும்பப்போகின்றோம். இனி உன்பாடு, கடல்பாடு''

அவர்கள் கூறிக்கொண்டே பிரகலாதனைத் தூக்கினர். கடலுக்குள் எறிந்துவிட்டுத் திரும்பினர்.

கடலில் விழுவதற்கு முன் பிரகலாதன் நாராயணனை நெஞ்சில் நிலை நிறுத்திக்கொண்டான்.

''நாராயணா! க்ஷீராப்தி என்னும் பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பவனே! எந்தத் துயரமும் இன்றி துயில் கொண்டிருப்பவனே! உன் பக்தன் நான் என்னைக் காப்பாற்றுவது உன்னுடைய கடமையல்லவா. நான் உன்னையே நம்பியிருக்கின்றேன். இனி என் செயலால் ஆவது ஒன்றும் இல்லை''

பிரகலாதன் துதி செய்து கொண்டிருந்தான்.

நாராயணனின் அருள் பார்வை ஆதிசேஷன் மேல் சென்றது.

அவ்வளவுதான், எங்கிருந்தோ ஆயிரக்கணக்கான நாகங்கள் தோன்றின. அவைகள் பெரும் படைகைப்போல் மிதந்து வந்தன. பிரகலாதனை அவைகள் தங்கள் முதுகில் சுமந்து கொண்டன. கரையை நோக்கி விரைந்தன.

பிரகலாதனைக் கடலுக்குள் வீசியெறிந்து விட்டு திரும்பிய படகோட்டிகள் கடற்கரையில் பிரகலாதன் ஆனந்தமாக நிற்பதைக் கண்டனர். என்ன செய்வது என்று தெரியவில்லை அவர்களுக்கு.

சிலர் பிரகலாதனின் காலடிகளில் விழுந்தனர். சிலர் பதறி அடித்துக்கொண்டு அரசனிடம் முறையிடச் சென்றனர்.

இரணியன் இவைகளைக் கேட்டான். துடித்துப் போனான். இனி இவர்களை நம்பிப் பயனில்லை. தாமே நேரில் சென்று கவனிக்க வேண்டியதுதான்.

அரண்மனைக்குள் உள்ள அந்தப்புரம் சென்றான். இரணியனின் மனைவி தானவீ சோகமே உருவெடுத்து அமர்ந்திருந்தாள்.

பத்துமாதம் சுமந்து பெற்றாள் பிரகலாதனை. அவனோ தந்தை சொல்லும் வார்த்தைகள் ஒன்றையும் கேட்கவில்லை. தந்தையோ கோபம் கொண்டு அவனைக் கொல்லவும் துணிந்தார். மகனின் பிடிவாத குணம், தந்தையின் வைராக்கியம் இரண்டும் போட்டி போட்டுக்கொண்டிருந்தன. பாசத்தால் துடித்துக்கொண்டிருந்தாள் அவள்.

இரணியன் தன் மனைவியைப் பார்த்தான்.

''தானவி! நீயோ அழுதுகொண்டிருக்கின்றாய். ஆனால் நம் மகன் பிரகலாதனோ சிரித்துக் கொண்டிருக்கின்றான், நம் குலத்திற்கு ஏற்காத விரோதியைத் தெய்வமாக வணங்குகின்றான். தந்தையாகிய என்னை உதாசீனம் செய்துவிட்டு, என் குல வைரியை நம்புகின்றவனை எப்படித் திருத்துவது? அவனைக் கொல்ல முடிவெடுத்தேன். நமக்குப் பிள்ளைகள் நால்வர். அவர்களில் ஒருவன் போனாலும் மிஞ்சியிருப்பவர் மூவர். எனவேதான் இந்த முடிவுக்கு வந்தேன். இனி இறுதியாக ஒரு காரியம் செய்யப்போகின்றேன். அதற்காகத்தான் இங்கு வந்தேன்.''

தானவி துடித்தாள்.

''நாதா! அறியாத பாலகன் பிரகலாதன். அவன் விவரம் புரியாத பருவத்தில் உள்ளான். கொஞ்ச நாட்கள் பொறுங்கள். அவனை நானே திருத்தித் தங்களிடம் ஒப்படைக்கின்றேன்.''

கெஞ்சினாள் தானவி.

''இல்லை தேவி! இனியும் பொறுப்பதற்கில்லை. எத்தனையோ கடுமையான தண்டனைகள் கொடுத்துவிட்டேன். அவன் மாறவில்லை. இனி அவன் மாறுவான் என்ற நம்பிக்கையும் இல்லை. ஆகவே, அவனை இங்கு அழைத்துவரச் செய்யப்போகின்றேன்.''

''நாதா! என் குழந்தை பிரகலாதனைக் கொல்ல நீங்கள் செய்த முயற்சிகள் தோல்வியடைந்தன. அவன் பிழைத்துக் கொண்டான். இதில் இருந்தே அவன் உயர் வாழவேண்டும் என்றிருக்கிறது. ஆகவே நாதா! அவனை என்னிடம் விட்டு விடுங்கள். நல்லபடியாகச் சொல்லி அவனைத்திருத்தி விடுகின்றேன். இந்த ஒரு சந்தர்ப்பத்தை எனக்குத் தாருங்கள் நாதா! தங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்.''

தானவியின் கெஞ்சலால் மனம் மாறினான் இரணியன். ஒருவேளைத் தன் தாயின் சொல்லால் பிரகலாதன் மனம் மாறலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு உண்டாயிற்று.

அந்தப்புரத்தை விட்டு வெளியே வந்தான். பிரகலாதனை அழைத்துவரச் செய்து தன் தாயின் பக்கம் செல்லுமாறு அனுப்பப்பட்டான்.

பிரகலாதன் தன் தாயைக் காணப் புறப்பட்டான்.

அந்தப் புரத்திலே அழுதுகொண்டிருந்த தன் தாயின் அருகில்போய் அவள் காலடிகளில் விழுந்தான் பிரகலாதன்.

தன் அருமை மகனை வாரியெடுத்தாள். உச்சிமோந்து கன்னங்களில் அன்பு முத்தங்களை மாறி மாறி இட்டாள்.

''மகனே! பிரகலாதா! உன்னை உயிருடன் காணப் போகின்றேன் என்று நினைத்துக்கூடப் பார்க்க வில்லையடா, மகனே! ஒவ்வொரு முறையும் உன் தந்தை உன்னைக் கொல்ல முயன்றபோது, அந்த நேரங்களில் நான் தானடா செத்துப் பிழைத்தேன். மகனே! ஏன் இந்த வீண் வம்பு? பிடிவாதம்? தந்தை சொல் மந்திரமல்லவா? அவர் திருநாமம் சொல்லி விடக் கூடாதா?''

கெஞ்சும் பாவனையில் தானவி அன்பாகக் கேட்டாள்.

பிரகலாதன் உள்ளம் உருகிற்று. தன் தாயை இப்படிச் சோதிக்கும் அளவில் போய்விட்டதே என வருந்தினான். ஆனாலும் பரம்பொருளை ஏற்காதவர் யாராக இருந்தாலும் அதைக் கண்டிக்க வேண்டும் என்ற திடமான வைராக்கியம் அவனுக்கு உண்டு. எனவே, தன் தாய்க்கு உண்மை நிலையை உணர்த்த விரும்பினான் பிரகலாதன்.

''தாயே! எல்லாத் துன்பங்களுக்கும் நான் காரணமல்ல. தந்தைதான் காரணம். நான் என் தந்தைமீது அன்பு செலுத்துகின்றேன். அவரை மதிக்கவும் செய்கின்

றேன். ஆனால் அவருக்கும் மேலான பரம்பொருள் நாராயணனை பூஜிக்கவும் செய்கின்றேன். இது தவறு அம்மா?''

தாய் என்ன கூறுவாள்?

தன் மகன் சொல்வது உண்மைதான் என்று உணருகின்றாள்.

''அப்பா பிரகலாதா! உனக்கு நான் புத்திசொல்லும் கடமை எனக்குண்டு. ஆனால் தகுதி எனக்கு இல்லையோ என்று தோன்றுகின்றது. நீ கூறும் சமாதான வார்த்தைகளைப் பற்றி நான் அறிந்தபோது இப்படித்தான் எனக்கு தோன்றுகின்றது. மகனே! உன் தந்தை சொல்வதைக் கேட்டு அதன்படி நடப்பதுதான் தர்மம்.''

''அம்மா! தந்தை உலகத்தைப் படைத்த கடவுள் அல்லவே. நான் என்ன அவரை மீறியா பேசுகின்றேன். உலகத்தைப் படைத்துக் காக்கும் ஹரியாகிய நாராயணன் திருநாமத்தை முதலில் சொல்லுங்கள் என்கிறேன். ஆனால் அவரோ, தன் பெயர்தான் முதலில் சொல்லப்பட வேண்டும் என்கின்றார். இதற்கு நான் என்ன செய்வது?''

''அப்பா! பிரகலாதா! நானும்தான் பொறுமையாக இருந்து பார்க்கின்றேன். உன் தந்தையின் விரோதியின் பெயரை நீ சொல்வது முறையா?''

''தாயே! ஹரி யாருக்கும் எதிரியல்ல. அவரை ஏன் தந்தை எதிரி என்று எண்ணுகின்றார்?''

''மகனே! உன்னோடு வாதம் செய்து வெல்ல என்னால் ஆகாது. அதிருக்கட்டும் அப்பா எப்போது நீ ஹரியின் நாமத்தைத் தெரிந்து கொண்டாய்? எனக்கு நினைவு தெரிந்த வரையில் உனக்கு அந்நாமத்தை நான் சொல்லித்தரவில்லை. வேறு யாரும் சொல்லித் தந்திருக்க மாட்டார்கள். ஆனால் உனக்கு எப்படி நாராயணனின் பெயர் தெரிந்தது?''

''தாயே! அந்நாராயணனின் திருப்பெயரை உங்கள் மூலமாகத்தான் கற்றுக் கொண்டேன்!''

''என்னப்பா சொல்லுகின்றாய்? உனக்கு நான் அதைச் சொன்னதே இல்லையே?''

''தாயே! எப்போது நீங்கள் ஹரியின் நாமத்தைக் கேட்டீர்களோ, அப்போதே நானும் கேட்டேன். நீங்கள் சொல்லித் தரவில்லை. ஆனால் சொன்னவர் ஒருவர். கேட்டவர்கள் நீங்களும் நானும்தான்.''

''மகனே! நீ சொல்வது எனக்குப் புரியவில்லை. நாம் இருவருமாக எப்போதும் யாரிடமும் உபதேசம் பெறவில்லையே? அப்படி இருக்க நீ சொல்வது மர்மமாகவல்லவா இருக்கின்றது?''

''தாயே! என் தந்தை மந்திரமலைச் சாரலுக்குத் தவம் செய்யச் சென்றார் அல்லவா?''

''ஆம் மகனே! நீ பிறப்பதற்கு முன்னால்,''

''அப்போது இந்திரன் படையெடுத்து வந்து அசுரர் களை அடிமையாக்கினான் அல்லவா?''

''ஆம். அப்போது நம்மையும் அடிமையாக்கினான். எனக்கு அந்த நிகழ்ச்சி நன்றாகவே நினைவில் இருக்கின்றது.''

''நல்லது தாயே! அப்போது நாரத மகரிஷி வந்தா ரல்லவா?''

''அதுவும் உண்மை. அவர் இந்திரனுக்கு நல்லதைச் சொன்னார். ஆகவே இந்திரன் என்னை விடுதலை செய்தான்.''

''நீங்கள் அப்போது கர்ப்பவதியல்லவா?''

''ஆமாம் மகனே! அதனால்தான் இந்திரன் என்னைத் தன் சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்தான்.''

''தாங்கள் அதன் பிறகு எங்கே போனீர்கள்?''

''நாரத மகரிஷி அமைத்திருந்த ஆசிரமத்தில் தங்கி யிருந்தேன். தினமும் நாரத மகரிஷி எனக்கு நல்ல உப தேசங்களைக் கூறி வந்தார்கள்.''

''அம்மா! அப்போது அவர் பலமுறை ஹரியின் நாமத்தைச் சொல்லி அவருடைய பெருமைகளைச் சொன்ன ரல்லவா?''

''ஆமாம்! நேற்றைக்கு நடந்தது போல இருக்கிறது மகனே! அவர் ஹரியின் நாமம் சொன்னதை நீ எப்படி யப்பா தெரிந்து கொண்டிருக்க முடியும்? அப்போது நீ என் வயிற்றுக்குள் அல்லவா இருந்தாய்?''

''ஆம் தாயே! வயிற்றுக்குள் இருந்துதான் அந்த ஹரி யின் நாம மகிமையைத் தெரிந்து கொண்டேன். கருவில் இருந்தே தெரிந்து கொண்டேன். எறிந்து விடமுடியுமா அதை?''

தானவீ அதிர்ச்சியடைந்தாள். தன் முன்னே நிற்பவன் தன் வயிற்றில் பிறந்த குழந்தைதான். ஆனல் நிச்சயமாக அசுரக் குழந்தையல்ல. அவன் தெய்வக் குழந்தை...தெய் வக் குழந்தை. தன் மகன் பிரகலாதனின் காலடியில் விழ வேண்டும் போல அவளுக்குத் தோன்றியது. ஆனல் அதைச் செய்ய முடியுமா?

ஆனந்தத்தால் கண்ணீர் வடித்தாள் தானவீ.

இந்த அற்புதக் குழந்தைக்கு என்ன கொடுமை செய்தா லும் அந்த நாராயணன் நிச்சயம் காப்பாற்றுவான். தன் குழந்தை உலகம் உள்ளளவும் நிலைபெற்றிருக்கும் சிரஞ்சீவி குழந்தையாகப் போகிறது என்று உணர்ந்தாள்.

பல நாட்கள் கழிந்தன.

ஒருநாள் இரணியன் அந்தப்புரத்திற்கு வந்தான். நிச்சயமாக தானவீ பிரகலாதனை மாற்றியிருப்பாள் என்று நம்பினன். ஆனல் அவன் ஏமாந்தான்.

எவ்வளவோ முயன்றும் பிரகலாதன் நாராயணனின் நாமத்தைவிடத் தயாராக இல்லை. கோபத்தோடு வெளியே சென்றான் இரணியன். தன் ஆட்களை அனுப்பி, கொடிய நாகங்களின் விஷங்களைச் சேகரிக்கச் செய்தான். நாகங்களில் விஷம் சேகரிக்கப்பட்டது. ஒரு கோப்பை நிறைய விஷம் சேர்ந்தது. அதைக் கொண்டு அந்தப்புரம் வந்தான் இரணியன்.

''தானவி! உன் மகன் என்னை இவ்வளவு காலம் ஏமாற்றினான். இப்போது உன்னையும் ஏமாற்றி விட்டான். இனி அவன் உயிரோடு இருப்பதில் பயனில்லை. குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பாக மாறி இருக்கின்றான். இதோ பார்த்தாயா! இதுதான் நாகங்களின் கொடிய விஷம் இக்கோப்பை நிறைய இருக்கின்றது. இவ்விஷத்தை உன் மகன் குடிக்கப் போகின்றான். யார் அவனுக்கு விஷத்தை ஊட்டப் போகிறார்கள் தெரியுமா? நீயே தான். இது நாள் வரை நீ அவனுக்குப் பாலை ஊட்டியிருக்கின்றாய். ஆனால் இப்போது விஷத்தை ஊட்டப் போகின்றாய். உம். விஷ கோப்பையை ஊட்டு..''

தனக்கு இவ்வளவு பெரிய கஷ்டம் வரும் என்று தானவி எதிர் பார்த்திருக்க வில்லை. தான் பெற்று வளர்த்த குழந்தைக்குத் தாயே விஷம் கொடுக்க வேண்டுமா?

துடித்தாள் அவள். ஆனால் இரணியன் கலங்கவில்லை. பாசத்தை வென்றவன் போல் நின்றான்.

தாயின் கையிலே நச்சுக் கோப்பை. தகப்பனின் கண்களில் உறுதி. பார்த்தான் பிரகலாதன். வேகமாக வந்தான். தன் தாயின் கைகளில் இருக்கும் விஷக்கோப்பையை அவள் கைகளிலிருந்து எடுத்துக் கொண்டான்.

''தாயே! என்னைக் கொல்வதற்கு விஷம் முயற்சி செய்து பார்க்கட்டும். அந்த நாராயணன் நிச்சயம் என்னைக் காப்பாற்றுவான். நாராயணா! நாராயணா!''

நாராயணனின் பெயரை ஜெபித்துக் கொண்டே நஞ்சை அருந்தினான் அவன். சற்று நேரம் கழிந்தது. மயங்கி விழவேண்டிய பிரகலாதன் மயங்கி விழவில்லை. ஆனால் இரணியன் மயங்கினான். இவ்விஷங் கூட அவனைக் கொல்ல வில்லையே என்று அதிர்ச்சியடைந்தான். இனி செய்வது என்ன?

கோபத்துடன் வெளியேறினான் இரணியன்.

அரண்மனை தர்பாரை அடைந்தான் இரணியன். அசுரப் புரோகிதர்களை வரவழைத்தான். அவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

''புரோகிதர்களே! உங்களை மிக முக்கியமான ஒரு காரியத்திற்காகஅழைத்து வரச்செய்திருக்கின்றேன். மந்திர பலத்தினால் ஒரு பூதத்தை உண்டாக்குங்கள். அதை ஏவி பிரகலாதனைக் கொல்லச் செய்யுங்கள். புரிகின்றதா? என்ன வேண்டுமானாலும் கேளுங்கள். பிரகலாதன் அழிய வேண்டும். உம். ஆகட்டும்.''

புரோகிதர்கள் கலக்கத்துடன் சென்றனர்.

யாகம் செய்து மந்திரங்களைச் சொல்லி பூதத்தை யாகத் தீயிலிருந்து எழுப்புவது கஷ்டமான காரியம் அல்ல. ஆனால் அதில் ஒரு சிக்கல் உண்டு. தோன்றிய பூதத்திற்கு இலக்கு ஒன்றைக் காட்ட வேண்டும். அந்த இலக்கு பூதத்தின் கையில் சிக்கினால் அது அவ்விலக்கைச் சாப்பிட்டுவிடும். ஆனால் அது கிடைக்காது போனால் யார் ஏவினார்களோ அவர்களைச் சாப்பிட்டுவிடும்.

புரோகிதர்கள் பயந்ததற்குக் காரணம் இல்லாமல் இல்லை. இதுவரை எந்தவிதமான அபாயங்களினாலும் பிரகலாதன் சாகவில்லை. இனியும் அவன் சாகமாட்டான். நிச்சயமாக தம்மால் எழுப்பப்படும் பூதம் பிரகலாதனைக் கொல்லாது. அப்படி நேருமானால், அப்பூதம் தங்களையே கொன்று விடும். என்ன செய்வார்கள்? யாகம் நடத்தாது

போனால் இரணியன் தங்களைக் கொன்று விடுவான். அதை விடப் பூதத்தினாலே கொல்லப்படுதல் நல்லது என்று தீர்மானித்தார்கள்.

ஒரு நல்ல நாள்பார்த்து யாகம் தொடங்கினார்கள். யாகம் முற்றுப் பெற்றது. அத்தீயிலிருந்துபூதம்ஒன்று கிளம்பியது. அவர்கள் பிரகலாதனைக் காட்டி அவனைக் கொல்லுமாறு பூதத்தை ஏவினார்கள்.

வாயைப் பிளந்து கொண்டு பூதம் பிரகலாதனை நெருங்கியது. பிரகலாதன் கலங்கவில்லை. மாறாகச் சிரித்துக் கொண்டிருந்தான். அவன் மனம் நாராயணனின் திருவடிகளை நினைத்தது. வாயோ அவன் திரு நாமத்தைக் கூறிக் கொண்டிருந்தது.

கொல்ல வந்த பூதம் பிரகலாதனை நெருங்கி அவனைப் பிடிக்கப் பார்த்தது. ஆனால் அதனால் அவன் அருகில் நிற்கக் கூட முடியவில்லை. எங்கிருந்தோ தீச்சுவாலைகள் பூதத்தைத் தாக்கின. கோபம் கொண்ட பூதம் பிரகலாதனைப் பிடிக்கப் பார்த்தது. ஆனால் தீயின் சுவாலையினால் பூதத்தின் கைகள் கருகிப் போயின. ஆனமட்டிற்கும் முயன்று பார்த்த பூதம் கடைசியில் தோல்வியைச் சந்தித்தது. அதற்குக் கோபம் பெருகியது. தான் கருதிய காரியம் நடக்கவில்லை என்றறிந்த பூதம், இனித் தம்மை ஏவியவர்களைக் கொல்ல வேண்டும் என்று கருதியது. ஆங்கார ஓசையை எழுப்பிக் கொண்டு புரோகிதர்களை நோக்கி வந்தது.

புரோகிதர்கள் நடுங்கினார்கள். தாம் பூதத்தால் கொல்லப் படுவோம் என்பதை உணர்ந்தார்கள். தப்பும் வழியொன்றும் புலப்படவில்லை. திடீரென்று அவர்களுக்குப் பிரகலாதன் நினைவு வந்தது. அவனைச் சரண் புகுந்தால் ஒரு வேளை காப்பாற்றப்படலாம் என்று அவர்களுக்குத் தோன்றியது.

ஓடியவாறே பிரகலாதனின் காலடிகளில் விழுந்து தங்களைப் பூதத்திடம் இருந்து காப்பாற்றுமாறு வேண்டினார்கள்.

அவர்களைப் பார்ப்பதற்குப் பிரகலாதனுக்குப் பரிதாப மாக இருந்தது. ''புரோகிதர்களே! இவ்வளவு ஏற்பட்ட பிறகும் உங்கள் புத்தியில் உண்மை புலப்படவில்லையா?''

''பிரகலாதா! நாங்கள் ஆபத்தில் இருக்கின்றோம். எங்களைக் காப்பாற்று. காப்பாற்று.''

''அதைத் தான் சொல்லுகின்றேன். என்னைக் காப்பாற்றுபவன் நாராயணன்; உங்களை நான் எப்படிக் காப்பாற்ற முடியும்? அந்த நாராயணனின் திருநாமத்தைச் சொல்லுங்கள். அவன் உங்களைக் காப்பாற்றுவான்.''

புரோகிதர்களுக்கு வேறு வழியில்லை. இது நாள் வரைக்கும் தங்கள் விரோதி என்று எண்ணி வந்த நாராயணனின் பெயரை இப்போது சொல்லித் தான் ஆகவேண்டும்.

''பிரகலாதா! எப்படிச் சொல்ல வேண்டும்? சீக்கிரம் சொல். பூதம் நெருங்கிவிட்டது.''

அந்த நிலையிலும் பிரகலாதனுக்குச் சிரிப்பு வந்தது.

''உம் சொல்லுங்கள்! ஓம் நாராயணாய நமஹ.''

புரோகிதர்கள் அனைவரும் அந்த இடத்தில் எல்லாத் திசைகளிலும் எதிர் ஒலிக்குமாறு கூறினார்கள்.

''ஓம் நாராயணாய நமஹ, ஓம் நாராயணாய நமஹ'' அவ்வோசை எல்லாத் திசைகளிலும் எதிர் ஒலிக்க ஆரம்பித்தது.

கொல்ல வந்த பூதம் அசைவற்று நின்றது. அதனால் எதையும் செய்ய முடியவில்லை. காற்றோடு காற்றாகக் கரைந்து மறைந்தது. புரோகிதர்கள் பிழைத்தார்கள்.

''புரோகிதர்களே! நீங்கள் இப்போது அரசரிடம் செல்லுங்கள். இங்கு நடந்ததைச் சொல்லுங்கள். இப்போதாவது அவர் உணர்ந்து கொண்டால் போதும்.''

புரோகிதர்கள் அங்கிருந்து கிளம்பினார்கள். அரசனிடம் சென்று நடந்தவைகளைச் சொன்னார்கள். அரசன் அதிர்ச்சியடைந்தான்.

தன் முயற்சிகள் தோல்வியடைந்ததை எண்ணிப் பொறுமினான். பலவாறு சிந்திக்க ஆரம்பித்தான்.

'பிரகலாதனின் உயிரைக் காப்பாற்றிய சக்தி எது?'

அவன் யோசிக்க ஆரம்பித்தான். தன்னையறியாமல் அந்த நாராயணனின் பெயர் அவர் நினைவில் தோன்ற ஆரம்பித்தது.

தன்விரோதி என்றுஎண்ணியிருக்கும் அந்த நாராயணன் எப்படி இருப்பான்? அவனைக் காண வேண்டும். எதிரில் தோன்றினால் அவனோடு சண்டை செய்து அவனைக் கொல்ல வேண்டும்.

இரணியன் தீர்மானித்தான். இனி, பிரகலாதனைக் கொல்லும் முயற்சியைக் கைவிட்டு விட வேண்டும். அந்த நாராயணனைக் காட்ட வேண்டும் என்று பிரகலாதனைக் கேட்க வேண்டும்.

பிரகலாதனை நோக்கிக் கிளம்பினான் இரணியன்.

அன்றைக்கு ஒரு முடிவு எடுத்துவிட வேண்டும்.

உலகத்தார் வணங்குவது அவனையா அல்லது நாராயணனையா?

''ஏய் பிரகலாதா! எங்கே இருக்கிறாயடா?''

வரும்போதே கோபத்தால் அவன் உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன. அமைதியாகப் பிரகலாதன் எதிரே வந்து நின்றான்.

''இதோ தந்தையே! தங்கள் முன்னால் தான் நிற்கின்றேன்.''

''இன்று இரண்டில் ஒன்றைப் பார்த்து விடுவது என்று தீர்மானம் செய்து விட்டேன். நீ வணங்குகின்றாயே ஹரி. அவன் யாவன்? எங்கு இருக்கின்றான்? அவன் எத்தன்மையன்? சொல்.''

பிரகலாதன் மகிழ்ந்தான். தன் தந்தை இன்று தான் பரம்பொருளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப் பட்டிருக்கிறார். இனி தெரிந்து கொள்வார்.

''தந்தையே சொல்லலாமா?''

''உம். சொல். அதற்கு முன் என் கேள்விகளைப் புரிந்து கொள். இவ்வுலகின் பெரியவன் நானா இல்லை அவனா?''

''தந்தையே! சந்தேகம் வேண்டுவதில்லை. உலகின் பெரியவன் பரம்பொருளான நாராயணனே. தந்தையே! அவன் தான் உலகத்தைப் படைத்தவன். எல்லா உயிர்களி லும் நிறைந்தவன். எள்ளுக்குள் எண்ணெய் இருப்பதுபோல் உலகில் உள்ள எல்லா பொருட்களிலும் கலந்து நின்றுள் ளான். அன்பில்லாதவன் கண்களுக்குத் தென் படமாட் டான்.''

''என்னடா உளறுகின்றாய்? எங்கும் நிற்பவரும், நிறைந்தவரும்...ஆனால் கண்களால் காண முடியாதாம். இதோபார். நான் நிற்கின்றேன். இவ்வுலகைக் காப் பாற்றுகின்றேன். என்னை யாரும் பார்க்கலாம். ஆனால் ஹரி?...அவனைக் காண முடியாதவனோ? அவன் எங்குள் ளான் என்பதைத் திட்டமாகச் சொல்.''

''தந்தையே! நான் கூறிய ஹரி எங்கும் உள்ளான். அணுவை நூறு கூறிட்டாலும் அக் கூறிலும் உள்ளான். மிகப் பெரிய மேரு மலையிலும் உள்ளான். ஏன் தாங்கள் கூறிய சொல் ஹரியிலும் உள்ளான்.''

''இப்படி ஏமாற்றுவது தான் உன் தொழில் என்பதை உணர்ந்து கொண்டேன் நான். திட்டமாகச் சொல்ல முடி யாமல் பசப்புகின்றாய். இதோ பார்க்கின்றாயே இந்தத் தூணில் உன் ஹரி இருக்கின்றானா!''

''தந்தையே! இந்தத் தூண் என்ன? அந்தத் துரும்பி லும் அவன் உள்ளான்.''

''அப்படியானால் இந்தத் தூணில் உன் ஹரியைக்காட்டு. அப்படி நீ காட்டத் தவறினால் உன்னைக் கிழித்துத் தின்று விடுவேன்.''

கொக்கரித்தான் இரணியன்.

''தந்தையே! இந்தத் தூணில் மட்டும் ஹரி இல்லாது போனால் என்னுயிரை நானேமாய்த்துக் கொள்வேன். அவன் தோன்றியிருக்கும் இடத்தைப் பிறருக்குத் தோன்றும்படி செய்ய வேண்டியவன் ஹரியே.''

அமைதியாகப் பேசினான் பிரகலாதன்.

கோபமே வடிவான இரணியன் தன் கதாயுதத்தால் அரு கில் இருந்த தூணில் அடித்தான்.

அவ்வளவுதான்.

'படார்' என்று தூண் வெடித்தது.

அதில் இருந்து, மிருகமும் அல்லாத மனிதனும் அல் லாத பயங்கரமான ஓர் உருவம் வெளிப்பட்டது.

அதன் உடல் மனிதனைப் போல் இருந்தது. தலையோ சிங்கத்தின் தலையாக இருந்தது. நரனும் சிங்கமும் சேர்ந்த நரசிங்கம்.

அவ்வுருவைக் கண்ட ஒருகணம் இரணியன் திடுக்கிட் டான்.

''ஓஹோ! இது தான் நீ சொல்லும் ஹரியா?''

ஏளனமாகப் பேசினான் இரணியன்.

நரசிம்மமோ கர்ச்சனை செய்ய ஆரம்பித்தது.

பிரகலாதன் தன் தந்தை திருந்துவதற்குக் கடைசியாக ஒரு வாய்ப்பு இருப்பதை அறிந்தான்.

''தந்தையே! ஹரி தோன்றி விட்டான். ஹரியை வணங்கி உங்கள் பிழைகளைப் பொறுத்துக் கொள்ள வேண் டுங்கள். ஹரியின் மன்னிப்பால் நீங்கள் பிழைக்கலாம்'' என்று கூறினான்.

ஆனால் இரணியனோ கேட்கவில்லை. ஹரியாகிய நர சிம்மத்தோடு போர்க்குக் கிளம்பினான்.

நெடு நேரம் போர் நடந்தது. முடிவில் இரணியனை நரசிம்மம் பிடித்துக் கொண்டது. அவனைத் தன் மடி மீது அமர்த்திக் கொண்டது. அரண்மனை வாசலில் நின்றுகொண் டது. தன் கூரிய நகங்களால் இரணியன் வயிற்றைக் கிழி யது. இரணியன் இறந்து வீழ்ந்தான்.

இரணியன் இறந்து வீழ்ந்ததை, அரக்கர்கள் அனைவரும் பார்த்தனர். அவர்களால் நம்ப முடியவில்லை. இரணியன் பெற்ற வரங்களை எண்ணிப் பார்த்தார்கள். அவ்வளவு வரங்களையும் மீறி நரசிம்மம் எப்படி இரணியனைக் கொல்ல முடியும்?

சுக்கிராச்சாரியாரின் மகன் அமர்க்கனுக்குச் சந்தேகம் தோன்றியது. வரம் கொடுத்தவர் பிரமன். ஆனால் மரணம் இல்லை என்ற நிலையில் இப்படி ஒரு கோர மரணம் எப்படி நேர்ந்தது?

அவனுக்கு விளக்கம் கூறினான் சண்டன்.

''பெண்ணினாலும் பேரழகு படைத்த ஆணினாலும், இரண்டுமற்ற அலிகளாலும் தான் கொல்லப்படக் கூடாது. அப்படித்தானே?''

''ஆமாம்.''

''இப்போது தோன்றிய நரசிம்மம், பெண்ணல்ல; அலியல்ல; பேரழகு படைத்த ஆணுமல்ல,''

''கண்களால் காணப்படாத ஜீவன் நரசிம்மம். இது போன்ற ஒன்று இருப்பதாக யாரும் கற்பனை செய்ய முடியாதது மட்டுமல்ல; அரசர் மண்ணுலகத்திலும் கொல்லப்படவில்லை; விண்ணுலகத்திலும் கொல்லப்படவில்லை. வீட்டிலும் கொல்லப்படவில்லை; வெளியிலும் கொல்லப்படவில்லை! அரண்மனையின் வாசல் நடையில் அதுவும் நரசிம்மத்தின் மடியில் வைத்துக் கொல்லப்பட்டார். பகலிலும் இரவிலும் கொல்லப்படாமல் மாலை நேரத்தில் கொல்லப்பட்டார். எந்த ஆயுதங்களும் இல்லாமல் நகத்தினால் கொல்லப் பட்டார். ஆகவே, அமர்க்கனே! நம்மை விட நம்மைப் படைத்த இறைவன் புத்திசாலி என்பதை ஒப்புக் கொள்.''

சண்டனின் விளக்கத்தை அமர்க்கன் ஏற்றுக் கொண்டான்.

இரணியனைக் கொன்ற நரசிம்மத்தின் ஆவேசம் அடங்கவில்லை. அனைவரும் துதித்தனர். பிரகலாதன் துதித்தான். பிறகு ஆவேசம் அடங்கியது. நரசிம்ம மூர்த்தி பேசினார்.

''பிரகலாதா! பாசத்திற்கு அப்பால் நின்றாய். பயமும் அற்றவன் ஆனாய். உண்மை வெல்ல வேண்டும் என்பதற்காக எல்லாச் சோதனைகளையும் வென்றாய். சத்தியத்திற்குத்தான் சோதனைகள் வரும். ஆனால் வைராக்கியத்தால் வெல்ல முடியும் என்று உலகத்திற்குக் காட்டினாய். ஆகவே என்றும் நீ சிரஞ்சீவியாக வாழ்வாயாக. உலகம் உன்னைப் பின்பற்றும்படியான சத்தியவாதி நீ. முடி சூட்டிக்கொண்டு பலகாலம் வாழ்வாயாக'' என்று வாழ்த்தினார்.

பிரகலாதன் மகிழ்ந்தான்.

உலகில் உள்ள ஏழு சிரஞ்சீவிகளில் தலைசிறந்த சிரஞ்சீவியாகப் பிரகலாதன் விளங்கினான்.

பரமனைப் பற்றிய குழந்தைதான் பிரகலாதன்.